بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّی عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 10

இதழ் 11 & 12

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1446 ரமலான் 12 - 19 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1404 அமான் 13 - 20 ★ 13 -20 மார்ச் 2024

## அல்லாஹ்வின் கட்டளை

اَیَّامًا مَّعۡدُوۡدٰتٍ ؕ فَمَنۡ کَانَ مِنۡکُمۡ مَّرِیۡضًا اَوۡ عَلٰی سَفَرٍ فَعِدَّۃٌ مِّنۡ اَیَّامٍ اُخَرَ ؕ

**பொருள்**

(எனவே) கணிக்கப்பட்ட நாள்களில் (நோன்பு நோற்றுக் கொள்க). உங்களுள் நோயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர்(விடுபட்ட நோன்புகளை)மற்ற நாட்களில் நோற்க வேண்டும்.

(அல்பக்கரா: 182)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**இறைவன் என்னுடன் எந்த அளவிற்கு அருளுடனும், கருணையுடனும் நடந்து கொண்டான் என்றால் இந்த நீண்ட காலகட்டத்தில் ஒவ்வொரு நாளும் எனக்கு முன்னேறத்தின் நாளாக இருந்தது. என்னை அழிப்பதற்காக தொடுக்கப்பட்ட ஒவ்வொரு வழக்கிலும் இறைவன் எதிரிகளை இழிவடையச் செய்தான்**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

وَلَوۡ تَقَوَّلَ عَلَیۡنَا بَعۡضَ الۡاَقَاوِیۡلِ ○ لَاَخَذۡنَا مِنۡہُ بِالۡیَمِیۡنِ ○ ثُمَّ لَقَطَعۡنَا مِنۡہُ الۡوَتِیۡنَ ○

என்பது மேலான இறைவனின் கூற்றாகும். இந்த நபி நம் மீது இட்டுக்கட்டி பொய் கூறியிருந்தால் பின்னர் நாம் அவரை வலக்கரத்தால் பிடித்திருப்போம். பிறகு அவரது உயிர் நாடியை துண்டித்திருப்போம். இந்த வசனம் பெருமானார் (ஸல்) அவர்கள் தொடர்பாக இறங்கியிருந்தாலும் இதன் பொருள் பொதுவானதாகும். திருக்குர்ஆன் முழுவதும் இப்படிப்பட்ட சொற்றொடர்கள் இருக்கின்றன.வெளிப்படையாக பார்க்கும்போது பெரும்பாலான ஏவல், விலக்கல் தொடர்பான விஷயங்கள் பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கியே கூறப்பட்டிருந்தாலும் உதாரணமாக, இந்த வசனம்: فَلَا تَقُلۡ لَّہُمَاۤ اُفٍّ وَّلَا تَنۡہَرۡہُمَا وَقُلۡ لَّہُمَا قَوۡلًا کَرِیۡمًا ○
பொருள்: உமது பெற்றோரிடம் வெறுக்கத்தக்க வார்த்தைகளை கூற வேண்டாம்; அவர்களது கண்ணியத்தை கருத்தில் கொள்ளாத வகையில் உள்ள விஷயங்களை பேச வேண்டாம் என்று கூறப்பட்டுள்ளது. இந்த வசனம் பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கியே கூறப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த வசனம் பெருமானார் (ஸல்) அவர்களின் சமுதாயத்தை நோக்கியே கூறப்பட்டிருக்கின்றது. ஏனெனில், பெருமானார் (ஸல்) அவர்களுடைய தந்தையாரும், தாயாரும் அன்னாரது குழந்தைப் பருவத்திலேயே மரணமடைந்து விட்டனர். இந்தக் கட்டளையில் ஓர் இரகசியமும் இருக்கின்றது. அது இதுவாகும்; நீர் உமது பெற்றோருக்கு கண்ணியம் அளிப்பீராக ; மேலும் ஒவ்வொரு சொல்லிலும், நடத்தையிலும் அவர்களது கண்ணிய மிக்க அந்தஸ்தை கருத்தில் கொள்வீராக! என்று பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி கூறப்பட்டிருக்கும் போது, மற்றவர்கள் எந்த அளவு தங்களது பெற்றோருக்கு கண்ணியம் அளிக்க வேண்டும் என்பதை அறிவுள்ள ஒவ்வொருவராலும் புரிந்து கொள்ள முடியும். இதன் பக்கமே மற்றொரு வசனமும் சைகையாக சுட்டிக் காட்டுகின்றது.

وَقَضٰی رَبُّکَ اَلَّا تَعۡبُدُوۡۤا اِلَّاۤ اِیَّاہُ وَبِالۡوَالِدَیۡنِ اِحۡسَانًا ؕ

நீங்கள் அவனை மட்டுமே வணங்க வேண்டும் ; மேலும் பெற்றோருடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதையே உங்களது இறைவன் உங்களிடம் விரும்பியிருக்கின்றான் என்ற இந்த வசனத்தில் சிலை வணங்கிகளுக்கு புரிய வைக்கப்பட்டிருப்பது என்னவென்றால், சிலைகள் ஒன்றுமே அல்ல. அந்த சிலைகள் உங்களிடம் மீது எந்த அருளும் புரியவில்லை. அவை உங்களை படைக்கவுமில்லை ; உங்களது சிறுவயதில் உங்களை பாதுகாக்கக் கூடியவையாக இருக்கவுமில்லை. இறைவன் அவனோடு வேறொருவரை அவனுக்கு இணையாக வைத்து வணங்குவதையும் ஆகுமானதாக ஆக்கியிருந்தால் நீங்கள் உங்களுடைய பெற்றோரை வணங்குங்கள் என்று அவன் உங்களுக்கு கட்டளையிட்டிருப்பான். ஏனெனில், அவர்களும் கூட உவமை வடிவில் ரப்பாக அதாவது படைத்து வளர்த்து பரிபாலிப்பவர்களாக இருக்கின்றார்கள். ஒவ்வொரு நபரும் இயல்பாகவே எதுவரை என்றால் விலங்குகளும், பறவைகளும் கூட தமது பிள்ளைகளை அவர்களது சிறுவயதில் அவர்கள் வீணாகுவதில் இருந்தும் காப்பாற்றுகின்றனர். இறைவனுடைய பரிபாலித்தலுக்குப் பிறகு, இவர்களின் ஒரு பரிபாலித்தலும் இருக்கின்றது. அந்த பரிபாலித்தலுக்கான உணர்வும் இறைவனிடமிருந்தே கிடைத்திருக்கின்றது.

இவ்வாறு புரிய வைப்பதற்காக இந்த விஷயத்தை கூறிய பிறகு தற்போது நாம் மீண்டும் அசல் கருத்தின் பக்கம் திரும்பியவாறு கூறுகின்றோம்: பெருமானார் (ஸல்) அவர்கள் தொடர்பாக அவர்கள் நம் மீது இட்டுக்கட்டி பொய் கூறியிருந்தால் நாம் அவர்களை அழித்து விடுவோம் என்று கூறப்பட்டிருப்பது பெருமானார் (ஸல்) அவர்கள் தொடர்பாக மட்டுமே தன்னுடைய இந்த தன்மான உணர்வை வெளிப்படுத்தியிருக்கின்றான் அதாவது அவர்கள் இட்டுக்கட்டி பொய் கூறியிருந்தால் அன்னாரை அழித்திருப்பான்; ஆனால் மற்றவர்கள் தொடர்பாக அவனுக்கு இந்த தன்மான உணர்வு இல்லை என்பது ஒருபோதும் இந்த வசனத்தின் கருத்து கிடையாது. மற்றவர்கள் எந்த அளவு இறைவன் மீது இட்டுக்கட்டி பொய் கூறினாலும், பொய்யான இல்ஹாம்களை உருவாக்கி இறைவனுடன் தொடர்புபடுத்திக் கூறினாலும் அவர்கள் தொடர்பாக இறைவனின் தன்மான உணர்வு பொங்கி எழாது என்பது இந்த வசனத்தின் பொருள் கிடையாது. இத்தகைய எண்ணம் அறிவிற்கு புறம்பானதாக இருப்பதைப் போன்றே இறைவனுடைய எல்லா வேதங்களுக்கும் எதிரானதாக இருக்கின்றது. எந்த நபர் இறைவன் மீது இட்டுக்கட்டி பொய் கூறுவாரோ, பொய்யாக நபித்துவம் வாதம் புரிவாரோ அவர் அழிக்கப்படுவார் என்ற சொற்றொடர் இன்று வரை தவ்ராத்தில் இருந்து வருகின்றது. இதை தவிர தொன்றுதொட்டே இஸ்லாத்தின் ஆலிம்கள் لَوۡ تَقَوَّلَ عَلَیۡنَا என்ற இந்த வசனத்தை கிறிஸ்தவர்கள் மற்றும் எதிரிகளுக்கு எதிரில் பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மைக்கு சான்றாக எடுத்து வைத்து வந்துள்ளனர். ஒரு விஷயம் பொதுவானதாக இருக்காத வரை அது சான்றாக பயன்தராது என்பது வெளிப்படையான விஷயமாகும். பெருமானார் (ஸல்) அவர்கள் இட்டுக்கட்டி பொய் கூறினால் அவர்கள் அழிக்கப்படுவார்கள்; அவர்களுடைய எல்லா விஷயங்களும் சீர்குலைந்து போய் விடும்; ஆனால் வேறொருவர் இட்டுக்கட்டி பொய் கூறினால் இறைவன் அவர் மீது வெறுப்படைய மாட்டான்; மாறாக அவரிடம் அன்பு செலுத்துவான் என்று கூறுவது கூட ஒரு ஆதாரமாக இருக்க முடியுமா என்ன? இதற்கு சான்று என்று பெயர் சூட்டக் கூடாது; ஏனெனில் இதுவும் கூட ஒரு வாதம் ஆகும். அது சுயமே ஆதாரத்திற்கான தேவையுடையதாக இருக்கின்றது. அந்தோ பரிதாபம், என் மீதுள்ள விரோதத்தின் காரணமாக இந்த மக்கள் எதுவரை சென்றுவிட்டார்கள் என்றால், பெருமானார் (ஸல்) அவர்களின்

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்...

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**குர்ஸ் பின் ஜாபிர் போர் படையெடுப்பு மற்றும் ஸீ கர்த் படையெடுப்பின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**

நிராகரிப்பாளர்கள் புறமிருந்தே அநீதிக்கான ஆரம்பம் நிகழ்ந்தது. அவர்கள் எந்த ஆகுமான காரணமும் இன்றி வெறும் இஸ்லாத்தின் மீது கொண்ட பகைமையினால் அப்பாவி முஸ்லிம்களுடன் அநியாயமான மற்றும் காட்டுமிராண்டித்தனமான நடைமுறையை மேற்கொண்டனர். மேலும், அவர்களுக்கான தண்டனையாக வழங்கப்பட்டவை எல்லாம் வெறும் கஸாஸீ என்ற ரீதியிலும், பதிலடி என்ற ரீதியிலுமே அமைந்திருந்தது. (ஸீரத் காத்தமுன் நபிய்யீன் எனும் நூல்)

அனைத்து நிலைமைகளையும் கருத்தில் கொண்டு சீர்தூக்கிப் பார்த்தால் பின்னர் இந்த விவகாரத்தில் இஸ்லாத்தின் நிலைபாடு முற்றிலும் தூயதாக தென்படும். ஏனெனில், இந்த தீர்ப்பு இஸ்லாத்தின் தீர்ப்பாக இருக்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடையதாக இருந்தது. அன்னாருடைய ஷரீஅத்தை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ரத்து செய்யவும் இல்லை. மாறாக அதனை உண்மைப்படுத்தினார்கள். (ஸீரத் காத்தமுன் நபிய்யீன்)

முஸ்லிம்களுக்கு அந்த நாள் மிகவும் அபாயகரமானதாக இருந்தது. ஏனெனில், குறைஷியர்கள் மற்றும் யூதர்களின் தூண்டுதலின் காரணமாக முழு நாட்டிலும் முஸ்லிம்களுக்கு எதிராக பகைமையின் நெருப்பு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. (எதிரிகள்) தங்களுடைய புதிய செயல் திட்டத்தின் அடிப்படையில், மதீனா மீது முறையாக தாக்குதல் நடத்துவதற்கு பகரமாக மறைவான வழிமுறைகளினால் நஷ்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் இவ்வாறு தீர்மானித்திருந்தார்கள். ஏமாற்றுதல் துரோகம் செய்தல் ஆகியவை அரேபியாவின் காட்டுமிராண்டித்தனமான கோத்திரங்களில் நல்லொழுக்கத்தின் ஒரு பகுதியாக பார்க்கப்பட்டது

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 ஜனவரி 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஸுல்ஹ் மாதம் 24ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ○ الرَّحْمٰنِ الرَّحِيمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّينِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ○
صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ○

பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தில் நிகழ்ந்த போர் நடவடிக்கைகளைப் பற்றிய குறிப்பு கூறப்பட்டு கொண்டிருந்தது. இன்று அது தொடர்பாக முதலில், குர்ஸ் பின் ஜாபிர் அவர்களின் போர் நடவடிக்கை பற்றி கூறுகிறேன். இந்தப் போர் நடவடிக்கை ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு ஷவ்வால் மாதம் உரானியீன் பக்கம் மேற்கொள்ளப்பட்டது. சிலரை பொருத்த வரை இந்தப் போர் நடவடிக்கை ஸயீத் பின் ஸய்து அவர்களுடையதாக இருந்தது. ஆனால் அநேக மக்களுடைய கூற்று என்னவென்றால், இந்த போர் நடவடிக்கை குர்ஸ் பின் ஜாபிர் அவர்களுடையதாக இருந்தது. (போர் நடவடிக்கை) ஜரீர் பின் அப்தில்லாஹ் அவர்களுடையதாக இருந்தது என்றும் ஒரு கூற்று உள்ளது. ஆனால், இந்தக் கூற்று மறுக்கவும் பட்டுள்ளது. ஜரீர் பின் அப்தில்லாஹ் அவர்கள் இந்தப் போர் நடவடிக்கைக்கு நான்கு வருடங்களுக்கு பிறகு தான் முஸ்லிம் ஆனார்கள்.

இந்த போர் நடவடிக்கைக்கான காரணம், பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் சிலர் வந்தார்கள். புகாரீ கிதாபுல் ஜிஹாத் மற்றும் கிதாபுல் தியாத்தில் ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் கூறுகின்றார்கள்: அம்மக்கள் உக்ல் மற்றும் உரைனா குலத்தைச் சேர்ந்த எட்டுப் பேர் ஆவார்கள்.

இப்னு ஜரீர் மற்றும் அபூ அவானா ஆகியோரை பொருத்த வரை நான்கு பேர் உரைனா குலத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். மூன்று பேர் உக்ல் குலத்தைச் சார்ந்தவர்கள். எட்டாவது நபர் அந்த இரு கோத்திரங்களைச் சார்ந்தவர் கிடையாது. அவருடைய குலம் கோத்திரம் பற்றி தெரியவில்லை. அம்மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். இஸ்லாத்தைக் குறித்து பேசினார்கள்.

இன்னோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: அம்மக்கள் இஸ்லாத்தில் பைஅத் செய்தனர். அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். அபூ அவானா இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: அவர்கள் மிகவும் பலவீனமானவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய நிறம் மிக அதிகமாக மஞ்சளாக இருந்தது. அவர்களின் வயிறு உப்பி இருந்தது. அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து, எங்களுக்கு அடைக்கலம் கொடுங்கள்; எங்களுக்கு உணவு தாருங்கள் என்றார்கள். அவர்கள் நபவி பள்ளிவாசலின் முற்றத்தில் தங்கியிருந்தார்கள். அவர்கள் உடல் ஆரோக்கியம் பெற்றபோது மதீனாவின் தட்பவெப்பநிலை அவர்களுடைய உடலுக்கு உகந்ததாக இருக்கவில்லை.

அதாவது பசியின் காரணமாக ஏற்பட்டிருந்த நோய் மற்றும் உடல் பலவீனம் நீங்கிவிட்டது. ஆனால், பொதுவாக மதினாவின் தட்பவெப்ப நிலை மற்றும் நகரின் தட்பவெப்ப நிலை அவர்களுக்கு உகந்ததாக இருக்கவில்லை.

இப்னு இஸ்ஹாக் அவர்களைப் பொருத்த வரை, அன்னாருக்கு தட்ப வெப்ப நிலை உகந்ததாக இல்லாததைக் கண்டார்கள். மேலும்,அன்னார் (ரலி) பலவீனமாகிவிட்டார்கள். ஒருபுறம் பசியின் காரணமாக ஏற்பட்டிருந்த பலவீனத்திலிருந்து அவர்கள் உடல் நலம் தேறிவிட்டார்கள் என்றபோதிலும், இன்னொரு புறம் வேறு விதமான நோய்கள் வந்தன. எவ்வாறிருப்பினும், ஓர் அறிவிப்பில் வருகிறது: அந்நாட்களில் மதீனாவில் ஒரு தொற்று நோய் ஏற்பட்டிருந்தது. அதை பிர்சாம் என்று கூறுவார்கள். பிர்சாம் என்பது எவ்வாறான நோய் என்றால் அது மூளையில் பாதிப்பை எற்படுத்தக் கூடியதாக இருந்தது. அதனால் தலை மற்றும் நெஞ்சு பகுதியில் கட்டி உருவானது. இந்த நோய் இங்கு வந்து விட்டது. மதீனாவின் தட்பவெட்ப நிலை எங்களுக்கு உகந்ததாக இல்லை. நாங்கள் கால்நடைகள் வைத்திருப்பவர்கள்; விவசாயம் செய்யக் கூடியவர்கள் கிடையாது. எங்களுக்காக பாலுக்கான ஏற்பாடு செய்யுங்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்களிடம் அம்மக்கள் கேட்டபோது, என்னிடமோ பால் தரும் ஒட்டகங்கள் தவிர வேறு ஒன்றும் கிடையாது. ஆகவே நீங்கள் அங்கு செல்லுங்கள் என்று அன்னார் கூறினார்கள். அவர்களை மேய்ச்சல் பகுதிக்கு அனுப்பி வைத்தார்கள். ஓர் அறிவிப்பில் வருகிறது: பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களை ஃபைஃபா மற்றும் கபார் மேய்ச்சல் பகுதியை நோக்கி செல்லுமாறு கட்டளையிட்டார்கள். ஃபைஃபா, கபார் என்பது மதீனாவுக்கு அருகில் இருக்கக் கூடிய காட்டுப் பகுதி ஆகும்.

எவ்வாறு இருப்பினும், அம்மக்கள் அதிக காலம் மதீனாவில் தங்கியிருக்கவில்லை ; மாறாக, மதீனாவுக்கு வெளியே சென்று விட்டார்கள் என்று இந்த அறிவிப்பில் இருந்து தெரியவருகிறது. ஒட்டகங்களின் பாலை குடித்த பிறகு அவர்களின் உடல்நலமும் மேம்பட்டது. இன்னோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: ஒட்டகங்களின் பாலை அருந்துவதற்காக ஸதக்காவுடைய பெண் ஒட்டகங்களை நோக்கி செல்லுமாறு பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களுக்கு அனுமதி வழங்கினார்கள். ஆகவே அவர்கள் ஒட்டகங்களின் பக்கம் சென்றார்கள்; அவற்றின் பாலை அருந்தினார்கள். அவர்கள் உடல்நலம் தேறிய பிறகு, அவர்களின் உடல் ஆரோக்கியம் பெற்ற போது அவர்களின் வயிறும் சுருங்கிப்போனது. அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு பிறகு நிராகரிப்பாளராகிப் போனார்கள்; பால் கொடுத்த ஒட்டகங்களை ஓட்டிச் சென்றார்கள்.

ஒருபுறம் பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு பரிவுடன் நடந்து கொண்டதை பார்க்க

முடிகிறது. இன்னொரு புறமோ அம்மக்கள் உடல் நலம் தேறிய பிறகு ஏமாற்றியதை பார்க்க முடிகிறது.

அந்த சம்பவம் இவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களால் விடுதலை செய்யப்பட்டிருந்த அடிமையான யஸார் மற்றும் அவர்களின் தோழர்கள் இம்மக்களை கண்டபோது- அதாவது இம்மக்கள் காஃபிர்களாக ஆன பிறகு பால் கொடுக்கக் கூடிய பெண் ஒட்டகங்களை தம்முடன் அழைத்துச் சென்று கொண்டிருந்தபோது யஸார் மற்றும் அவர்களின் தோழர்கள் இவர்களை கண்டார்கள். முஸ்லிம்கள் அவர்களை பிடிக்கச் சென்றார்கள். இரு பிரிவும் போரிட்டார்கள். அம்மக்கள் யஸாருடைய கை கால்களை வெட்டி, நாவிலும் கண்களிலும் முட்களை குத்தி வைத்தார்கள். அதன் காரணமாக அவர் இறந்து போனார். பெண் ஒட்டகங்களை திருடி அபகரித்துச் சென்று கொண்டிருந்த இம்மக்கள் அதை பராமரிக்கக் கூடிய முஸ்லிம்களையும் கொன்றார்கள். அதாவது, அம்மக்கள் மேய்ச்சல் இடங்களை நோக்கி சென்றார்கள். முதலில் யஸாரைக் கொன்றார்கள். பிறகு மற்ற ஒட்டக இடையர்களையும் கொன்றார்கள். ஒரு நபர் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி தம்முடைய தோழர்களை கொலை செய்து விட்டதாக கூறினார். அவர்களுள் ஒருவர் தப்பிச் சென்று பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் அம்மக்கள் ஒட்டகங்களை அழைத்துச் செல்கிறார்கள் என்று கூறினார்.

முஹம்மது பின் உமர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பனூ அம்ர் பின் அவ்ஃப் குலத்தைச் சேர்ந்த ஒரு பெண் தன் கழுதையில் அமர்ந்து அந்தப் பக்கமாக சென்றாள். அவள் யஸாரைக் கடந்து செல்லும்போது அவர் மரத்தின் கீழே கிடந்தார். அப்பெண் அவரை கடந்து செல்லும்போது அவர் இறந்து போயிருந்தார். அந்த பெண் தம் சமுதாயத்திடம் திரும்பி இச்சம்பவத்தை பற்றி அவர்களுக்கு தகவல் கூறினாள். ஆகவே அந்த மக்களும் புறப்பட்டு வந்தார்கள். யஸார் இறந்து போயிருந்த நிலையில் அவரை தூக்கிக் கொண்டு குபாவை நோக்கிச் சென்றார்கள்.

ஸஹீஹ் முஸ்லிமுடைய அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் அன்ஸாருடைய 20 இளைஞர்கள் இருந்தனர். அன்னார் அவர்களை அனுப்பி வைத்தார்கள். இன்னோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது:

அம்மக்களுடைய கால் தடங்களை பின்பற்றி செல்லுமாறு 20 குதிரை வீரர்களை பெருமானார் (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்தார்கள். அதாவது அம்மக்கள் ஒட்டகங்களை அபகரித்து சென்றபோது, அந்த செய்தி அன்னாருக்கு கிடைத்தபோது, அவர்களைப் பிடித்து வருவதற்காக அவர்களுக்குப் பின்னால் 20 நபர்களை அன்னார் (ஸல்) அனுப்பி வைத்தார்கள். அவர்களுள் சிலருடைய பெயர்களும் எழுதப்பட்டுள்ளன: ஸலமா பின் அக்வா, அபூ ருஹம் அபூஸர் கஃப்பாரீ, புரைதா பின் ஹுஸைப், ராபஃபி பின் மகீஸ் மற்றும் அவர்களின் சகோதரர் ஜுன்தப் பிலால் பின் ஹாரிஸ், அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அவ்ஃப் முஸ்னீ, ஜுஆல் பின் சுரக்கா ஸஃலபீ, ஸுவைத் பின் சக்ர் ஜுஹ்னீ ஆகியோர்.

இவர்கள் அனைவரும் முஹாஜிர்களை சார்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு குர்ஸ் பின் ஜாபிர் ஃபெஹ்ரீ அவர்களை அமீராக நியமித்தார்கள். எதிரிகளை விரட்டிச் செல்லுமாறு அம்மக்களை அன்னார் அனுப்பி வைத்தார்கள். அவர்களுடன் தடயங்களை கண்டறிந்து கூறக் கூடிய ஒருவனையும் அனுப்பி வைத்தார்கள். அவன் அம்மக்களுடைய தடயங்களைக் கூறிக் கொண்டிருந்தான். அன்னார் (ஸல்) அந்த எதிரிகளுக்கு எதிராக சாபமிட்டார்கள்; அல்லாஹ்வே! பாதைகளை விட்டு அவர்களை குருடர்களாக ஆக்கி விடுவாயாக! மேலும் அதை அவர்களுக்கு ஒட்டகத்தின் தோலை விடவும் நெருக்கடியாக ஆக்கி விடுவாயாக! என்றார்கள். அதாவது, அவர்கள் பயணம் செய்ய முடியாமல் ஆக்கி விடுவாயாக! என்றார்கள்.

ஆகவே அல்லாஹ் பாதைகளை விட்டு அவர்களை குருடர்களாக ஆக்கி விட்டான். அவர்கள் அந்த நாளிலேயே பிடிக்கப்பட்டு விட்டார்கள்.

பொழுது விடிந்த போது அவர்கள் அன்னாரிடம் கொண்டு வரப்பட்டார்கள். அதாவது அவர்களை பிடித்து வருவதற்காக சென்றிருந்த 20 நபர்கள் அவர்களை பிடித்துக் கொண்டு வந்தார்கள். இன்னோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: குர்ஸ் பின் ஜாபிர் அவர்களும் அவருடைய தோழர்களும் அவர்களை தேடிப் புறப்பட்டார்கள்.இரவாகிவிட்டது. ஆகவே அந்த இரவை அவர்கள் ஹுர்ராவில் கழித்தார்கள். காலை விடிந்த போது அம்மக்கள் எந்த திசையில் சென்றார்கள் என்று அவர்களுக்கு புரியவில்லை. அப்பொழுது திடீரென்று ஒரு பெண், ஒட்டகத்தின் தொடைக்கறியை தூக்கிக் கொண்டு வந்தாள். அவளை பிடித்து விசாரித்த போது, நான் ஒரு சமுதாயத்தை கடந்து வந்து கொண்டிருந்தேன். அவர்கள் ஒட்டகத்தை அறுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எனக்கு இந்த தொடைப் பகுதியை கொடுத்தார்கள். அவர்கள் இந்த காட்டுப்பகுதியில் இருக்கிறார்கள் என்றாள். அதாவது அப்பெண்ணுக்கும் கொஞ்சம் இறைச்சி கொடுத்திருந்தார்கள். காலுடைய தொடைப் பகுதியை கொடுத்திருந்தார்கள். நீங்கள் அவர்களை காணும்போது புகை தென்படும் என்றாள். அதாவது, அவர்கள் எங்கு இருக்கிறார்களோ அங்கிருந்து புகை வந்து கொண்டிருக்கிறது என்றாள். ஆகவே இவர்கள் சென்றார்கள். அவர்கள் உணவு உண்டு முடித்த வேளையில், ஸஹாபிகள் அவர்களை சென்றடைந்தார்கள். அவர்களிடம் சரணடையுமாறு ஸஹாபிகள் கூறினார்கள். ஆகவே அவர்கள் அனைவரும் சிறைபிடிக்கப்பட்டனர். ஸஹாபிகள் அவர்களில் ஒருவரையும் விடாமல் அனைவரையும் கட்டி தமக்குப் பின்னால் குதிரைகளில் அமர வைத்து மதீனாவுக்கு கொண்டு வந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ரகாபா என்றோர் இடத்தில் இருந்தார்கள். ரகாபா என்பது ஜுருஃபுடன் இணைந்திருந்த ஓர் இடமாகவும், ஜுருஃப் என்பது மதீனாவிலிருந்து 3 மைல் தொலைவில் உள்ளது. எவ்வாறு இருப்பினும், (ஸஹாபிகள்) அவர்களை அழைத்துக் கொண்டு பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி சென்றார்கள். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் அவர்களுக்குப் பின்னால் சில சிறுவர்களுடன் சென்றேன். அன்னார் ரகாபா பள்ளத்தாக்கில் நீரோட்டம் ஒன்று சேரக் கூடிய இடத்தில் அவர்களை சந்தித்தார்கள். ஆணிகள் கொண்டு வருமாறு கட்டளை இட்டார்கள். அவை சூடாக்கப்பட்டிருந்தன. அந்த ஆணிகளை அவர்களின் கண்களின் மேல் தேய்த்தார்கள். ஏனெனில், அவர்கள் ஒட்டக இடையர்களின் கண்களிலும் அவ்வாறு ஆணிகளைக் கொண்டு தேய்த்து இருந்தார்கள். ஓர் அறிவிப்பில் வருகிறது: அவர்கள் அன்னாரிடம் கொண்டு வரப்பட்டபோது அவர்கள் மாறுகால் மாறுகை வெட்டப்பட்டார்கள். அவர்களின் கண்களில் சூடான ஆணிகள் தேய்க்கப்பட்டன ; அவர்கள் வெயிலில் கிடத்தப்பட்டார்கள். எந்த அளவுக்கு என்றால் அவர்கள் இறந்து விட்டார்கள். இன்னோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: அவர்கள் கண்களில் சூடான ஆணிகள் தேய்க்கப்பட்டன ; அவர்கள் வெயிலில் போடப்பட்டார்கள்.அவர்கள் தண்ணீர் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு தண்ணீர் கொடுக்கப்படாமல் இருந்தது. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அவர்களுள் ஒருவனை நான் கண்டேன். குளிர்விக்க வேண்டும் என்பதற்காக தாகத்தின் காரணமாக தன் நாவால் உதடை நக்கிக் கொண்டிருந்தான். அப்போது அவன் கடும் வெப்பத்திலும், வெயிலிலும் இருந்தான். எந்த அளவுக்கு என்றால் அவன் இறந்து விட்டான். அவர்களின் ரத்தப்போக்கை நிறுத்துவதற்காக எந்த சிகிச்சையும் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. அபூ கிலாபா அறிவிக்கின்றார்கள்: இம்மக்கள்தான் கொலையும் செய்தார்கள்; திருடவும் செய்தார்கள் ; இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு காஃபிரானார்கள். அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதருடன் போரிட்டார்கள்.

இப்னு ஷீரீன் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உரானியீன் மக்களுடைய இச்சம்பவம் வரம்புகள் தொடர்பான கட்டளை இறங்குவதற்கு முன்பு நடந்ததாகும்.

எவ்வாறு இருப்பினும், இந்த அனைத்தும் நிகழ்ந்தது. வெளிப்படையில் பார்க்கும்போது, முஸ்லிம்கள் பெரும் அநீதி இழைத்ததாக தெரிகிறது. ஆனால், எவ்வாறு இருப்பினும் இஸ்லாமிய போதனை பிறகுதான் இறங்கியது. அது என்னவென்றால், அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்:

إِنَّمَا جَزَٰٓؤُا۟ ٱلَّذِينَ يُحَارِبُونَ ٱللَّهَ وَرَسُولَهُۥ
وَيَسْعَوْنَ فِى ٱلْأَرْضِ فَسَادًا أَن يُقَتَّلُوٓا۟
أَوْ يُصَلَّبُوٓا۟ أَوْ تُقَطَّعَ أَيْدِيهِمْ
وَأَرْجُلُهُم مِّنْ خِلَٰفٍ أَوْ يُنفَوْا۟ مِنَ ٱلْأَرْضِ
ذَٰلِكَ لَهُمْ خِزْىٌ فِى ٱلدُّنْيَا
وَلَهُمْ فِى ٱلْـَٔاخِرَةِ عَذَابٌ عَظِيمٌ

பொருள்: அல்லாஹ்வுடனும், அவனது தூதருடனும் போரிட்டு, மேலும் நாட்டில் குழப்பத்தை உண்டாக்க முயல்பவர்களுக்கு உரிய தண்டனை அவர்கள் கடுமையான முறையில் கொல்லப்பட வேண்டும் அல்லது சிலுவையிலறைந்து கொல்லப்பட வேண்டும் அல்லது அவர்களின் மாறு கால் மாறு கை துண்டிக்கப்பட வேண்டும். அல்லது அவர்கள் நாடு கடத்தப்பட வேண்டும் என்பதே. இது இவ்வுலகில் அவர்களுக்குக் கிடைக்கும் இழிவாகும். மறுமையிலும் அவர்களுக்குப் பெரும் தண்டனை உள்ளது.

ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் அதற்குப் பிறகு எவருடைய கண்ணிலும் சூடான ஆணியைக் கொண்டு தேய்க்கவில்லை. எவருடைய நாவையும் வெட்டவில்லை. கை கால்களைத் வெட்டுவதை விட அதிகமாக வேறு எந்த தண்டனையும் கொடுக்கவில்லை. அதற்கு

பிறகு அன்னார் எந்த படைப் பிரிவை அனுப்பினாலும் சடலங்களை சிதைப்பதை விட்டு அவர்களை தடை செய்து வந்தார்கள். அதற்கு பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஸதக்கா கொடுக்குமாறு ஊக்கப்படுத்தி வந்தார்கள்; சடலங்களை சிதைப்பதை விட்டு தடுத்து வந்தார்கள்.

முஹம்மது பின் உமர் வாக்தீ மற்றும் இப்னு ஸஅது ஆகியோர் கூறுகிறார்கள்: அம்மக்கள் ஒட்டக இடையர்களிடமிருந்து 15 ஒட்டகங்களை ஓட்டிச் சென்றிருந்தார்கள்.

எவ்வாறு இருப்பினும், அந்த எதிரிகள் முஸ்லிம்களோடு எவ்வாறு நடந்து கொண்டார்களோ அதற்கு பழி தீர்க்கப்பட்டது. அவர்கள் செய்தது போன்றே அவர்களுக்கும் தண்டனை கொடுக்கப்பட்டது. ஆனால், பிறகு இஸ்லாமிய போதனைக்கேற்ப எதிரிகளுடன் ஒருபோதும் அவ்வாறு நடந்து கொள்ளப்படவில்லை. இது அந்த சம்பவத்திற்கன (சுருக்கமான) பதிலாகும். இது தொடர்பாக விளக்கமான பதிலும் உள்ளது. சில மக்கள் இவ்வாறு ஆட்சேபனை செய்கிறார்கள்: அதாவது எதிரிகளுடன் இவ்வாறு அநீதியான முறையில் ஏன் நடந்து கொள்ளப்பட்டது? என்று இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்கிறார்கள். இது சம்பந்தமாக ஸீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் அழகிய முறையில் பதில் கொடுத்திருக்கின்றார்கள். அவர்கள் எழுதுகின்றார்கள்:

முஸ்லிம்களுக்கு அந்த நாள் மிகவும் அபாயகரமானதாக இருந்தது. ஏனெனில், குறைஷியர்கள் மற்றும் யூதர்களின் தூண்டுதலின் காரணமாக முழு நாட்டிலும் முஸ்லிம்களுக்கு எதிராக பகைமையின் நெருப்பு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. (எதிரிகள்) தங்களுடைய புதிய செயல் திட்டத்தின் அடிப்படையில், மதீனா மீது முறையாக தாக்குதல் நடத்துவதற்கு பகரமாக மறைவான வழிமுறைகளினால் நஷ்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் இவ்வாறு தீர்மானித்திருந்தார்கள். ஏமாற்றுதல் துரோகம் செய்தல் ஆகியவை அரேபியாவின் காட்டுமிராண்டித்தனமான கோத்திரங்களில் நல்லொழுக்கத்தின் ஒரு பகுதியாக பார்க்கப்பட்டது. ஆகவே அவர்கள் எல்லா ஆகுமான, ஆகுமற்ற வழிமுறையைக் கொண்டும் முஸ்லிம்களுக்கு நஷ்டம் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். எந்த சம்பவத்தை பற்றி நாம் கூறுகிறோமோ அது இந்த அசுத்தமான முயற்சிகளின் தொடரில் வரும் ஒரு சம்பவமாகவே இருந்தது. அது மிகவும் அச்சுறுத்தும் முறையில் தம் முடிவை அடைந்தது.

ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு ஷவ்வால் மாதம் உக்ல் மற்றும் உரைனா குலத்தைச் சார்ந்த சில நபர்கள் - அவர்களின் எண்ணிக்கை 8-ஆக இருந்தது - மதீனாவுக்கு வந்தார்கள். இஸ்லாத்துடன் நேசம் மற்றும் அன்பை வெளிப்படுத்தியவாறு முஸ்லிம்கள் ஆகிவிட்டார்கள். கொஞ்ச காலம் தங்கி இருந்த பிறகு மதீனாவுடைய தட்பவெப்ப நிலையினால் அவர்களுக்கு ஏற்பட்ட வயிறு சார்ந்த பிரச்சனைகளை முறையிட்டு அதை சாக்கு போக்காக ஆக்கிக் கொண்டு பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். தங்களுக்கு ஏற்படும் துன்பங்களை எடுத்துக் கூறி, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் காடுகளில் வசிக்க கூடியவர்களாவோம்; கால்நடைகளோடு வசிப்பதில் வாழ்வை கழித்து விட்டோம்; நகரத்தில் வாழும் பழக்கம் கிடையாது. ஆகவே நோய்வாய்ப்பட்டு விட்டோம் என்றார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், உங்களுக்கு இங்கு மதீனாவில் கஷ்டமாக உள்ளது என்றால், மதீனாவுக்கு வெளியே நம்முடைய கால்நடைகள் பராமரிக்கப்படுகின்றன. அங்கு சென்று விடுங்கள் என்று கூறினார்கள். விருந்தோம்பலுக்கான உரிமையை செலுத்தியவாறு பரிவு காட்டுமாறு அன்னார் இவ்வாறு கூறினார்கள். ஒட்டகங்களுடைய பாலை அருந்துங்கள்; உடல்நலம் பெறுங்கள் ; அங்கு ஆரோக்கியமான இடத்தில் வசித்துக் கொள்ளுங்கள் என்றார்கள். ஓர் அறிவிப்பில் வருகிறது: அவர்கள் அன்னாரிடம் சென்று, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, மதீனாவுக்கு வெளியே உங்களுடைய கால்நடைகள் இருக்கக் கூடிய இடத்தில் வசிப்பதற்கு எங்களுக்கு அனுமதி தாருங்கள் என்று அவர்களே அனுமதி கேட்டார்கள். அன்னாரும் அனுமதி கொடுத்தார்கள்.

எவ்வாறிருப்பினும், அவர்கள் அன்னாரிடமிருந்து அனுமதி வாங்கிக் கொண்டு மதீனாவுக்கு வெளியே முஸ்லிம்களுடைய ஒட்டகங்கள் மேயச்சலுக்கு விடப்படும் இடங்களுக்கு சென்று விட்டார்கள்.

அந்த நற்பேறற்றவர்கள் அங்கு ஐக்கியமான பிறகு நாலாப்புறமும் கண்காணித்து முழு சூழ்நிலையையும் அறிந்து கொண்ட பிறகு திறந்த வெளியில் வசித்து ஒட்டகங்களுடைய பாலை அருந்தி நன்கு கொழுத்த பிறகு, ஒருநாள் திடீரென்று ஒட்டக இடையர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை கொன்று விட்டார்கள். எந்த அளவு இரக்கமற்ற முறையில் அவர்களைக் கொன்றார்கள் என்றால், முதலில் அவர்களை விலங்குகளை போன்று அறுத்தார்கள். கொஞ்சம் உயிர் எஞ்சி இருந்த போது, பாலைவனத்தின் கூர்மையான முட்களை அவர்களின் நாக்குகளில் குத்தி வைத்தார்கள். ஏனெனில், அவர்கள் யாரையாவது அழைத்தாலோ அல்லது தாகத்தின் காரணமாக துடிக்கும் போதோ அந்த முட்கள் இன்னும் துன்பத்தை கொடுக்க வேண்டும்; துன்பத்தை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக அந்த அநியாயக்காரர்கள் அத்தோடு நின்று விடாமல் சூடான ஆணிகளைக் கொண்டு முஸ்லிம்களுடைய கண்களில் தேய்த்தார்கள். இவ்வாறு அந்த குற்றமற்ற முஸ்லிம்கள் திறந்த வெளியில் துடிதுடித்து உயிரை விட்டார்கள். அவர்களுள் பெருமானார் (ஸல்) அவர்களின் தனிப்பட்ட தொண்டரான யஸார் என்பவரும் இருந்தார். அவர் பெருமானார் (ஸல்) அவர்களின் ஒட்டகங்களை பராமரிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்தார்.

அந்த மிருகங்கள் கொடூரமான முறையில் முஸ்லிம்களை கொலை செய்த பிறகு அனைத்து ஒட்டகங்களையும் ஒன்று திரட்டி ஓட்டிக் கொண்டு புறப்பட்டார்கள். இடையன் ஒருவன் தற்செயலாக அங்கிருந்து தப்பி இருந்தான். அவன் மூலமாக இந்த அனைத்து சூழ்நிலைகளை குறித்தும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்தபோது, அன்னார் உடனடியாக 20 ஸஹாபிகளைக் கொண்ட ஒரு குழுவை ஆயத்தம் செய்து அவர்களுக்கு பின்னால் அனுப்பி வைத்தார்கள். அந்த எதிரிகள் ஓரளவுக்கு தூரத்தை கடந்து விட்டிருந்தார்கள். ஆனால், இறையருளால் முஸ்லிம்கள் விரைவாக அவர்களை பின்தொடர்ந்து சென்றதன் காரணமாக அவர்களை பிடித்தார்கள். கயிறுகள் கட்டி அவர்களை கொண்டு வந்தார்கள். ஒருவர் இவ்வாறு நடந்து கொண்டால் அவருடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற கட்டளை அந்நேரம் வரை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இறங்கியிருக்கவில்லை.

இஸ்லாத்தில் (ஒரு விஷயம் தொடர்பாக) புதிய கட்டளை இறங்காத வரை வேதம் கொடுக்கப்பட்டோரின் வழிமுறைப்படி நடக்க வேண்டும் என்ற தனது முந்தைய கொள்கைப்படி அன்னார் அவ்வாறு செயல்பட்டு வந்தார்கள். ஆகவே அந்த கொடுமைக்காரர்கள் முஸ்லிம் இடையர்களோடு எவ்வாறு நடந்து கொண்டார்களோ அதேபோன்று பதிலடி கொடுக்கும் வகையில், பழிவாங்கும் வகையில் அவர்களுடன் நடந்து கொள்ளப்பட வேண்டும் என்ற மூஸா (அலை) அவர்களின் ஷரீஅத்திற்கேற்ப அன்னார் கட்டளையிட்டார்கள். ஷரீஅத்துடைய கட்டளைகள் முழுமையாக இறங்காத வரை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் போதனைப்படி அமல் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், இத்தண்டனை மற்றவர்களுக்கு படிப்பினையாக இருக்க வேண்டும் என்பதற்காக கொடுக்கப்பட்டது. ஆகவே சிறிய மாற்றத்துடன் அதே வழிமுறைப்படி மதீனாவுக்கு வெளியே திறந்த வெளியில் அம்மக்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. ஆனால், இறைவனோ இஸ்லாத்திற்காக இன்னொரு போதனையை நிர்ணயித்திருந்தான். அது என்னவென்றால், இனிமேல் பதிலடி கொடுக்கும்போது, பழிவாங்கும்போது சடலங்களை சிதைத்து தண்டனை அளிக்கக் கூடாது என்று தடை செய்யப்பட்டது. அதாவது கொல்லப்பட்டவர்களின் உடல்களை எந்த விதத்திலும் சிதைக்கக் கூடாது என்றும் பழிக்குப் பழி வாங்கும் போது உடல் உறுப்புகளை துண்டு துண்டாக ஆக்கக் கூடாது என்றும் கட்டளை இறங்கியது. அவ்வாறான செயல்கள் ஆகுமற்றதாக ஆக்கப்பட்டன.

இந்த சம்பவம் தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்: நாம் இது தொடர்பாக அதிகம் எழுத வேண்டிய தேவை கிடையாது.

எவ்வாறு இருப்பினும், இந்த விவகாரத்தில் அநீதிக்கான ஆரம்பம் காஃபிர்கள் சார்பாகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவர்கள் எவ்வித ஆகுமான காரணமும் இன்றி இஸ்லாமிய பகையின் காரணமாக அப்பாவி முஸ்லிம்களுடன் இவ்வாறு அநீதியான முறையில், மிருகத்தனமான முறையில் நடந்து கொண்டார்கள். அந்த காஃபிர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை பழிவாங்கும் விதத்திலும், பதிலடி கொடுக்கும் விதத்திலுமே இருந்தது. அதாவது எதிரிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனை பழிக்குப் பழியாக இருந்தது. அத்துடன், அது எப்படிப்பட்ட சூழ்நிலையில் வழங்கப்பட்டது என்றால்,

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

இஸ்லாத்திற்கு எதிராக முழு நாட்டிலும் பகைமை மற்றும் எதிர்ப்பின் நெருப்பு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. அத்துடன் இந்த தீர்ப்பும் கூட மூஸா (அலை) அவர்களின் ஷரீஅத்திற்கு ஏற்ப வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்தும், இஸ்லாம் அந்தக் கட்டளையை மேலும் தொடரவில்லை. வருங்காலத்திற்காக அதை தடை செய்து விட்டது. இவ்வாறான சூழ்நிலையில் அறிவுள்ள ஒருவர் இதன் மீது ஆட்சேபனை செய்வாரா என்ன? இந்த சந்தர்ப்பத்தில் இன்னொன்றையும் நினைவில் வைத்திருக்க வேண்டும். அது என்னவென்றால், அம்மக்கள் ஆரம்பம் முதலேயே தீய எண்ணத்துடன்தான் மதீனாவுக்கு வந்திருந்தார்கள். அநேகமாக, தம் குலத்தாரால் கற்றுக் கொடுக்கப்பட்ட வழிமுறைப்படி , முஸ்லிம்களிடையே இருந்து கொண்டு முஸ்லிம்களுக்கு நஷ்டம் விளைவிக்க முயற்சி செய்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராகவும் அவர்கள் ஏதேனும் தீய நாட்டம் கொண்டிருந்திருக்கலாம். ஆனால், மதீனாவில் இருக்கும்போது அவர்களுக்கு எவ்வித வாய்ப்பும் கிடைக்காத போது மதீனாவுக்கு வெளியே சென்று செயல்படலாம் என அவர்கள் தீர்மானித்திருக்கலாம். முஸ்லிம் இடையர்களுடன் அவர்கள் நடந்து கொண்ட முறையை பார்க்கும் போது, திருடர்களோ அல்லது கொள்ளையர்களோ நடந்து கொள்ளக் கூடிய முறையாக அது தெரியவில்லை. மாறாக, முழுக்க முழுக்க பழிவாங்கும் விதமாக அது இருந்தது. இதிலிருந்து அம்மக்களுடைய எண்ணத்தை அறிந்து கொள்ள முடிகிறது.

அவர்கள் ஆரம்பத்தில் உண்மையான உள்ளத்துடன் முஸ்லிமாக இருந்தார்கள். ஆனால் பிறகு ஒட்டகங்களை கண்ட பிறகு அவர்களின் எண்ணம் மாறிவிட்டது என்று கூறப்படும் என்றால், அந்நிலையில் அவர்கள் ஒட்டகங்களை ஓட்டிக் கொண்டு ஓடி இருக்க வேண்டும். ஏதேனும் ஒட்டக இடையர் அவர்களை தடுத்தார் என்றால் அதிகபட்சமாக அவரைக் கொன்று விட்டு சென்றிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் முஸ்லிம் இடையர்களை எவ்வாறான வழிமுறைப்படி கொலை செய்தார்கள் என்று பார்க்கும்போது, அவர்கள் தம்மைத்தாமே அபாயத்தில் இட்டு, சித்ரவதை செய்து கொலை செய்யும் செயலை நீண்டதாக அவர்கள் ஆக்கியதை பார்க்கும்போது - கொஞ்ச நேரம் அங்கு அவர்கள் இருந்தார்கள்; துன்புறுத்தி அவர்களை கொலை செய்தார்கள் - இதிலிருந்து தெளிவாக தெரிவது என்னவென்றால் அவர்களுடைய இந்த செயல் தற்காலிக பேராசையின் விளைவாக இருந்திருக்கவில்லை. மாறாக, முற்றிலும் பகைமையின் வடிவத்தைக் கொண்டிருந்தது. மேலும் உள்ளத்தின் காழ்ப்புணர்ச்சி மற்றும் நீண்ட கால பகைமையின் விளைவாக செய்யப்பட்டது போன்று அது இருந்தது. அவர்களுடைய இந்த கொடூரமான செயலுக்கு பதிலளிக்கும் விதமாக பெருமானார் (ஸல்) அவர்கள் என்ன நடவடிக்கை மேற்கொண்டார்களோ அது முற்றிலும் பழிவாங்கும் விதத்திலும்,பதிலடி கொடுக்கும் விதத்திலுமே இருந்தது. இஸ்லாமிய கட்டளைகள் இறங்குவதற்கு முன்பு மூஸா (அலை) அவர்களின் ஷரீஅத்திற்கு ஏற்ப அது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், அதற்குப் பிறகு விரைவிலேயே இஸ்லாமிய கட்டளை இறங்கிவிட்டது. இவ்வகையாக தண்டித்து பழிவாங்குவது ஆகுமற்றதாக ஆக்கப்பட்டது. (இது தொடர்பாக) புஹாரியில் வருகின்ற சொற்கள் இவ்வாறாகும்;

اَنَّ النَّبِيَّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ بَعْدَ ذٰلِكَ كَانَ يَحُثُّ عَلَى
الصَّدَقَةِ وَيَنْهٰى عَنِ الْمُثْلَةِ

பொருள்: இந்த சம்பவத்திற்கு பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கருணை காட்டுமாறும், நல்ல விதமாக நடந்து கொள்ளுமாறும் வலியுறுத்தி வந்தார்கள். எந்நிலையிலும் எதிரிகளுடைய சடலங்களை சிதைக்கக் கூடாது என்று தடை செய்து வந்தார்கள்.

சில கிழக்கத்திய வரலாற்று ஆசிரியர்கள் - அவர்களுள் (வில்லியம்) முயரும் அடங்குவார் - இச்சம்பவம் தொடர்பான சூழ்நிலையை எடுத்துரைக்கும் போது வழக்கம் போல் ஆட்சேபனை செய்திருக்கின்றார்கள். அது என்னவென்றால் அந்த கொலையாளிகளும் திருடர்களும் கொல்லப்பட்ட முறை மிருகத்தனமாகவும், அநியாயமானதாகவும் இருந்தது என்று கூறி இருக்கின்றார்கள். ஆனால், முழு சூழ்நிலையையும் முன்னால் வைத்து சிந்தித்துப் பார்க்கும்போது இந்த விஷயத்தில் இஸ்லாம் முற்றிலும் தூயதாக இருப்பது வெளிப்படுகின்றது. ஏனெனில், உண்மையிலேயே அந்த தீர்ப்பு இஸ்லாத்தினுடைய தீர்ப்பு கிடையாது; மாறாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் தீர்ப்பாக இருந்தது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் ஷரீஅத்தை இயேசு கிறிஸ்து ரத்து செய்யவில்லை ; மாறாக, அதை தொடர விட்டுள்ளார்கள். ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றிருக்கின்றவனுக்கு உன் அங்கியையும் விட்டு விடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ என்று இயேசு கூறியுள்ளாரே என ஆட்சேபனை செய்யக் கூடியவர் எடுத்து வைத்தால் , ஆட்சேபனை செய்யக் கூடியவர்களுக்கு அதற்கான உரிமை உள்ளது. ஆனால் கேள்வி என்னவென்றால், அறிவுடைய எந்தவொரு நபரைப் பொறுத்த வரையிலும் இது செயல்படுத்த தகுந்ததா? என்பதாகும். 1950 வருடங்களாக - இப்பொழுது 2000 வருடங்களை விடவும் தாண்டிவிட்டது - ஏதேனும் கிறிஸ்தவ பிரிவோ, ஆட்சியோ இன்று வரையிலும் இந்த போதனைப்படி செயல்பட்டதா என்ன? சொற்பொழிவு மேடைகளில் அறிவுரை செய்வதற்கு இது சிறந்த போதனையாக இருக்கலாம்; ஆனால் செயல் உலகில் இந்த போதனைக்கு செயல்படுவதற்கு ஆயத்தமாக இருக்க மாட்டார். இது போன்று உணர்வுகளுடன் விளையாடி முஸ்லிம்களை ஆட்சேபனைக்கு இலக்காக ஆக்க முயற்சிப்பது தம் அறிவீனத்தை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும். இயேசு கிறிஸ்துவிற்கு எதிரில் ஓர் உண்மையான சட்டத்தை கொண்டு வந்த ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் போதனையை முன்னிறுத்திப் பாருங்கள். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் சட்டத்தினுடைய உண்மையை நன்கு புரிந்தவர்களாக இருந்தார்கள். அல்லது கிறிஸ்தவர்களுடைய கூற்றை எடுத்துக் கொள்ளாமல் அவர்களுடைய செயல் நடவடிக்கைகளின் ஒளியில் சூழ்நிலையை பரிசோதித்துப் பாருங்கள்! செயல் களத்தில் எந்தவொரு மார்க்கமும் இஸ்லாத்திற்கு எதிரே நிற்க முடியாது என்ற உண்மை புலப்பட்டு விடும்.

ஏனெனில், இஸ்லாம் எதை கூறுகிறதோ அதைதான் செய்கிறது. இஸ்லாத்தினுடைய கூற்று ஒன்றோ, செயல் ஒன்றோ கிடையாது. இஸ்லாத்தினுடைய கூற்றும் செயலும் எப்படிப்பட்ட மேலான தரத்தில் உள்ளது என்றால், எந்தவோர் அறிவாளியும், மார்க்க துவேஷமற்ற மனிதரும் அதன் மீது ஆட்சேபனை செய்ய மாட்டார். மாறாக, உள்ளத்திலிருந்து அதைப் புகழ்வார். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் போதனையைப் போன்று எந்நிலையிலும் பழிவாங்கியே தீர வேண்டும் என்றோ, சூழ்நிலையை ஆராய்ந்து பார்க்காமல் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்றோ இஸ்லாம் கூறவில்லை. அதேபோன்று கிறிஸ்தவ போதனையை போன்று எந்நிலையிலும் தண்டனை கொடுக்கக் கூடாது என்றோ ஒரு குற்றவாளி ஏதேனும் குற்றம் செய்யும்போது, அந்தக் குற்றத்தின் நோக்கத்தை தம் சார்பாக உதவி செய்து இன்னும் பலப்படுத்த வேண்டும் என்றோ இஸ்லாம் கூறவில்லை. மாறாக, எந்நிலையிலும் கடினமான போதனையை மேற்கொள்ள வேண்டும் என்றோ, எந்நிலையிலும் மென்மையை கடைபிடிக்க வேண்டும் என்றோ இஸ்லாம் கூறவில்லை. மாறாக நடுநிலையான போதனையை இஸ்லாம் எடுத்து வைக்கின்றது. அந்த போதனை உலகில் உண்மையான அமைதிக்கான அடித்தளத்தை அமைக்கின்றது. அந்த போதனை இதுவாகும்:

وَجَزٰٓؤُا سَيِّئَةٍ سَيِّئَةٌ
مِّثْلُهَا ۚ فَمَنْ عَفَا وَاَصْلَحَ فَاَجْرُهٗ عَلَى اللّٰهِ

பொருள்: ஒவ்வொரு தீங்கிற்குரிய தண்டனையும் அதன் பொருத்தமான சூழ்நிலை மற்றும் அதன் கடுமைக்கேற்ப இருக்க வேண்டும். ஆனால், மன்னித்து விடுவதாலோ அல்லது மென்மை காட்டுவதாலோ சீர்திருத்தம் ஏற்படக் கூடிய வாய்ப்பு இருக்கும் என்றால் மன்னிப்பதோ அல்லது மென்மை காட்டுவதோ சிறந்ததாகும். அவ்வாறான மனிதர் இறைவனிடத்தில் நற்கூலிக்குரியவராக இருக்கின்றார்.

இது இவ்விஷயத்தை குறித்து இஸ்லாம் வழங்கிய போதனையாகும். இது மிகச் சிறந்த போதனை என்பதை எந்த அறிவுள்ளவரும் மறுக்க மாட்டார். இந்த போதனையில் மனித தேவைகளின் அனைத்து அம்சங்களும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. தண்டனை கொடுக்க வேண்டிய சூழ்நிலையிலும், பொருத்தமான வரம்பை விட்டு தாண்டக் கூடாது என்றும், உடல்களை சிதைக்கக் கூடிய கொடூரமான செயல்களை செய்யக் கூடாது என்றும் இஸ்லாம் வரையறுத்துள்ளது. ஆனால், இதற்கு எதிரில் கிறிஸ்தவ மக்களுடைய நிலை எவ்வாறு உள்ளது என்றால், காட்சிக்கு மட்டுமே உதவும் இயேசு கிறிஸ்துவின் போதனை இருந்தபோதிலும் அவர்கள் எதிரிகளுடன் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்றால், போர்களில் எப்படிப்பட்ட செயல்களை மேற்கொண்டார்கள்; மேற்கொள்கிறார்கள் என்றால் அது உலக வரலாற்றில் திறந்த

பக்கமாக உள்ளது. அதை மீண்டும் இங்கே எடுத்துக் கூற வேண்டிய அவசியம் கிடையாது.

அவர்கள் என்னவெல்லாம் செய்கிறார்கள்;

இப்பொழுது இன்னொரு போரைப் பற்றி எடுத்துக் கூறுவேன். இது ஸீ கரத் போர் என்று அழைக்கப்படுகின்றது. இந்த போர் எப்போது நிகழ்ந்தது? என்பதைக் குறித்து வரலாற்று ஆசிரியர்களிடத்திலும், ஹதீஸ் வல்லுநர்களிடத்திலும் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. ஹதீஸ் வல்லுனர்கள் இதை ஹுதைபியா சமாதானத்திற்கு பிறகு கைபர் போருக்கு முன்பு ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு துல்கஅதா மற்றும் ஹிஜ்ரீ 7, முஹர்ரம் மாதத்திற்கு இடையில் நடைபெற்றதாக கருகிறார்கள். வரலாற்று ஆசிரியர்களை பொறுத்த வரை, இது லிஹ்யான் போருக்கு பிறகு அதாவது ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு ஜமாஅதில் ஊலாவில் நிகழ்ந்ததாக கருதப்படுகின்றது. இமாம் புஹாரி மற்றும் இமாம் முஸ்லிம் ஆகியோரை பொருத்த வரை, கைபர் போருக்கு மூன்று நாட்களுக்கு முன்பு இந்தப் போர் நிகழ்ந்ததாக கூறுகின்றனர் . அவர்கள் ஹுதைபியா சமாதான உடன்படிக்கைக்குப் பிறகு கைபருக்கு முன்னால் இந்தக் குறிப்பை எடுத்துக் கூறியுள்ளனர். அல்லாமா இப்னு ஹஜர் அவர்கள் எழுதுகிறார்கள்:

இமாம் அஹ்மத் மற்றும் இமாம் முஸ்லிம் ஆகியோர் அயாஸ் பின் சல்மாவிடமிருந்து அறிவிப்பை எடுத்து கூறி இருக்கின்றார்கள். அது இந்த படையெடுப்பு கைபர் போரிலிருந்து மூன்று நாட்கள் முன்பு நிகழ்ந்ததை உறுதிப்படுத்துகின்றது. அறிவிப்பில் ஹஸ்ரத் ஸல்மா பின் அக்வா (ரலி) அவர்கள், முதலில் ஹுதைபியா சமாதானத்தைப் பற்றியும் பிறகு ஸீ கரத் போர் சம்பவத்தையும் எடுத்துக் கூறுகின்றார்கள். இறுதியில், நாங்கள் அதற்கு பிறகு மதீனா திரும்பி விட்டோம் ; மூன்று நாட்கள்தான் மதீனாவில் தங்கி இருந்தோம். அதற்குப் பிறகு கைபர் போருக்காக புறப்பட்டோம் என்று கூறியுள்ளார்கள். ஆனால் இதற்கு எதிராக வரலாற்று ஆசிரியர்களில் அல்லாமா இப்னு இஸ்ஹாக் மற்றும் இப்னு ஸஅது ஆகியோர், ஸீ கரத் போர் ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டில் ஹுதைபிய்யா சமாதானத்திற்கு முன்பு நிகழ்ந்ததாக குறிப்பிடுகிறார்கள்.

இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு ஆய்வு மேற்கொண்டுள்ளார்கள். அது முழுமையான ஆய்வறிக்கை கிடையாதுதான். ஆனால், தம்முடைய நூலின் எஞ்சிய பகுதிகளுக்காக எந்தெந்த தலைப்புகளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்களோ அதில் ஸீ கரத் போரை கைபர் போருக்கு முன்பு ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டில் முஹர்ரம் மாதத்தில் நிகழ்ந்ததாக குறிப்பிட்டுள்ளார்கள். ஸீ கரத் போர், காபா போர் என்றும் கூறப்படுகின்றது. ஏனெனில், பெருமானார் (ஸல்) அவர்களின் ஒட்டகங்கள் இங்கு மேய்ந்து வந்தன.

காபா என்பது மதீனாவில் இருந்து சிரியாவை நோக்கி செல்லும் திசையில் நான்கு மைல் தொலைவில் உஹது மலைக்கு பின்புறம் இருந்த ஒரு நிலப்பிரதேசமாகும். அதை ஸீ கரத் என்று ஏன் அழைத்தார்கள்? என்றால், உயைனா பின் ஹிஸ்ன் என்பவர் பெருமானார் (ஸல்) அவர்களின் ஒட்டகங்களை தாக்கி அதை ஓட்டிச் சென்றார். பெருமானார் (ஸல்) அவர்கள் ஸீ கரத் வரை அவரைப் பின் தொடர்ந்து சென்றார்கள். ஸீ கரத், மதீனாவில் இருந்து ஏறக்குறைய 12 மைல் தொலைவில் உள்ள ஒரு நீர்ச்சுனை ஆகும். இதனுடைய விபரம் பின்வருமாறு உள்ளது:

பெருமானார் (ஸல்) அவர்களின் 20 பெண் ஒட்டகம் - அவை பால் கொடுக்கக் கூடிய ஒட்டகங்களாக இருந்தன - அதனுடன் மற்ற ஒட்டகங்களும் மதீனாவில் இருந்து கைபர் செல்லும் வழியில் பைஸா எனும் மேய்ச்சல் நிலத்திலும், பைஸாவிலிருந்து மலையின் கடைசி பகுதி வரையிலும் மேய்ந்து வந்தன. அங்கு பஞ்சம் ஏற்பட்டபோது அவை காபாவின் பக்கம் கொண்டு வரப்பட்டன. ஒரு மேய்ப்பாளர் தினமும் மக்ரிப் நேரத்தில் அவற்றின் பாலை கறந்து பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் கொண்டு வருவார். உயைனா பின் ஹிஸ்ன் ஃபஸாரீ என்பவர் பனூ ஃகத்ஃபானுடைய 40 குதிரை வீரர்களுடன் அங்கு தாக்குதல் நடத்தி அந்த பெண் ஒட்டகங்களை ஓட்டிச் சென்றார். ஓர் அறிவிப்பின்படி, அவர்களின் தலைவர் உயைனாவுடைய மகன் அப்துர் ரஹ்மான் தாக்குதல் நடத்தினார் என்றும் உயைனா அவர்களின் உதவிக்காக ஓரிடத்தில் இருந்தார் என்றும் உள்ளது. தாக்குதல் நடத்தப்பட்டபோது ஹஸ்ரத் அபூ ஸர் (ரலி) அவர்களின் மகனான ஸர் ஐ எதிரிகள் கொன்று விட்டார்கள். அவர் அந்த பெண் ஒட்டகங்களை மேய்த்து வந்தார். ஹஸ்ரத் அபூ ஸர் (ரலி)அவர்களின் மனைவி லைலா அவர்களை கைது செய்து கொண்டு சென்றார்கள். மகனுடைய மனைவியும் அங்கிருந்தார். அவர் எதிரியிடம் இருந்து தப்பித்துக் கொண்டார்.

உயைனா பின் ஹிஸ்ன் என்பவர் யார்? என்பதை பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. உயைனா என்பவர் அகழ் போரின் போது பனூ ஃபஸாரா கோத்திரத்தின் தலைவராக இருந்தார். அகழ் போரின் போது காஃபிர்களின் மூன்று படைகள் பனூ குறைழாவை சந்தித்து விட்டு மதீனா மீது கடும் தாக்குதல் நடத்த எண்ணம் கொண்டிருந்தன. அப்போது அந்த படைகளில் ஒரு படைக்கு உயைனா தலைவராக இருந்தார். அவர் மக்கா வெற்றிக்கு பிறகு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். ஓர் அறிவிப்பின் அடிப்படையில், உயைனா மக்கா வெற்றிக்கு முன்பு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார் என்றும் மக்கா வெற்றியில் கலந்து கொண்டதாகவும் தெரிகிறது. அதே போன்று ஹுனைன் போரிலும் தாயிஃப் போரிலும் கலந்து கொண்டதாகவும் வருகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ தமீம் ஐ தண்டிப்பதற்காக இவரை 50 வீரர்களுடன் அனுப்பி வைத்தார்கள். அவர்களுள் எந்தவோர் அன்ஸார் ஸஹாபியும், முஹாஜிர் ஸஹாபியும் இடம் பெற்றிருக்கவில்லை.

இந்த போருக்கான காரணமாக அமைந்தது என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்களால் நியமிக்கப்பட்டிருந்த (ஸதக்கா) வசூல் செய்பவர்களை சதக்கா கொண்டு செல்ல விடாமல் பனூ தமீம் தடுத்தார்கள். பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் கிளர்ச்சி செய்த முர்தத்களுடன் சேர்ந்து கொண்டு இவர்களும் குழப்பத்தை ஏற்படுத்தினார்கள். துலைஹா என்பவன் நபித்துவ வாதம் செய்தபோது, அவனுடன் இவர்கள் சேர்ந்து கொண்டார்கள். இவர்கள் முதலில் முஸ்லிம்கள் ஆனார்கள்; பிறகு முர்தத் ஆனார்கள். அவனிடம் பைஅத் செய்தார்கள். பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடத்தில் சிறைபிடிக்கப்பட்டு வந்தார்கள். அன்னார் அவர்கள் மீது பேருகாரம் செய்தவாறு மன்னித்து விட்டார்கள். பிறகு அவர்கள் மீண்டும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள்.

அவர்களின் ஈமானிய நிலை இப்படிப்பட்டதாகதான் இருந்தது.

அறிவிப்பில் வருகிறது: பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ ஸர் ஃகஃபாரீ அவர்களை காபா செல்ல வேண்டாம் என்று தடுத்தார்கள். ஆனால், அன்னாருடைய எச்சரிக்கைக்கு பிறகும் ஹஸ்ரத் அபூ ஸர் ஃகஃபாரீ அவர்கள் காபா சென்று விட்டார்கள். இதனுடைய விளக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

உயைனாவுடைய தாக்குதலுக்கு முன் ஹஸ்ரத் அபூ ஸர் ஃகஃபாரீ (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒட்டகங்களில் மேய்ச்சல் இடங்களை நோக்கி செல்வதற்கு அனுமதி கேட்டார்கள். அதற்கு அன்னார்(ஸல்), உங்கள் மீது அப்பகுதியில் எதிரி தாக்குதல் நடத்தலாம் என்று உம்மைக் குறித்து எனக்கு அச்சம் உள்ளது. ஏனெனில், நாம் உயைனா மற்றும் அவனுடைய கூட்டாளிகளிடமிருந்து பாதுகாப்பாக இல்லை. அந்த இடமும் அவர்கள் பகுதியில்தான் உள்ளது என்றார்கள். ஹஸ்ரத் அபூ ஸர் ஃகஃபாரீ (ரலி) அவர்கள் வலியுறுத்தினார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்:

உமது மகன் கொலை செய்யப்பட்டு, உமது மனைவி சிறைபிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்படலாம் என்றும், மேலும் நீர் ஒரு கைத்தடியின் துணையுடன் வருவீர் என்றும் எனக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஹஸ்ரத் அபூ ஸர் ஃகஃபாரீ அவர்கள் கூறுகிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் என் விஷயத்தில் அச்சமாக உள்ளது என்று கூறியபோதும் நான் பிடிவாதம் செய்து கொண்டிருந்ததை நினைத்து எனக்கு வியப்பாக உள்ளது. அல்லாஹ்வின் மீது ஆணையாக! அன்னார் (ஸல்) என்ன கூறினார்களோ அவ்வாறுதான் நிகழ்ந்தது. நான் வீட்டில் இருந்தேன். அன்னாரின் பெண் ஒட்டகங்கள் தொழுவங்களுக்கு திரும்ப கொண்டு வரப்பட்டு விட்டிருந்தன. அவற்றுக்கு நீர் இறைக்கப்பட்டு விட்டன. அதாவது, தண்ணீர், தீவனம் போன்றவை கொடுக்கப்பட்டு விட்டன. அவற்றின் பால் கறக்கப் பட்டு முடிந்து விட்டது. பிறகு நாங்கள் தூங்கி விட்டோம். இரவு நேரத்தில் உயைனா 40 வீரர்களுடன் வந்து எங்கள் மீது தாக்குதல் நடத்தினர். அவர்கள் கொஞ்சம் நேரம் நிறுத்தி குரல் எழுப்பிய போது என்னுடைய மகன் வெளியே சென்றான். அவனை அவர்கள் கொன்று விட்டார்கள்.

இச்சம்பவத்தில் ஹஸ்ரத் ஸலமா பின் அக்வா (ரலி) அவர்கள் எதிரிகளை விரட்டிச் சென்றதைப் பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கின்றது. புஹாரீயில் இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் ஸலமா பின் அக்வா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஃபஜ்ருக்கு பாங்கு கொடுக்கப்படுவதற்கு முன்பாகவே நான்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

புறப்பட்டேன். ஸீ கரத் என்னுமிடத்தில் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் (பால் தரும்) ஒட்டகங்கள் மேய்ந்து கொண்டிருந்தன.

ஹஸ்ரத் ஸலமா (ரலி) அவர்களுடன் அப்போது பெருமானார் (ஸல்) அவர்களின் அடிமையான ரபாஹூம் இருந்தார்.

ஹஸ்ரத் ஸலமா அறிவிக்கின்றார்கள்: அப்போது அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களின் ஒரு மகன் என்னைச் சந்தித்து இறைத் தூதர் (ஸல்) அவர்களின் பால் தரும் ஒட்டகங்கள் பிடித்துச் செல்லப்பட்டு விட்டன என்று கூறினான். அவற்றை யார் பிடித்துச் சென்றது? என்று நான் கேட்டேன். அதற்கு அவன், ஃகத்ஃபான் கோத்திரத்தார் என்று பதிலளித்தான். உடனே நான் மூன்று முறை உரக்கச் சப்தமிட்டு யா ஸபாஹஹு என்று கூறினேன்.

இது ஆபத்தின் போது கூறப்படும் வாக்கியம் ஆகும்.

உரத்தக் குரலில் அவர் குரல் கொடுத்தார். அவர் உரத்த குரலுக்கு சொந்தக்காரராக இருந்தார்.

பிறகு ரபாஹை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தகவல் கூறுவதற்காக அனுப்பி வைத்தேன். நான் நேராக விரைந்து சென்று தாக்குதல் நடத்திய கொள்ளையர்களை அடைந்தேன். அவர்கள் தம் கால்நடைகளுக்கு நீர் புகட்டிக் கொண்டிருந்தனர். நான் அக்வஃ உடைய மகன், அற்பர்கள் இன்று அழியும் நாள் என்று கூறியபடி அவர்களின் மீது அம்பெய்தத் தொடங்கினேன். நான் அம்பெய்வதில் தேர்ச்சி பெற்றவனாக இருந்தேன்.

அவர்கள் தனியாகவே சண்டையிட சென்று விட்டார்கள்.

உரத்த குரலில் நான் இதை பாடிக் கொண்டிருந்தேன். நான் மரங்களுக்கிடையே இருக்கும்போது அவர்கள் மீது அம்பெய்வேன். குறுகலான பள்ளத்தாக்குகள் வரும்போது மலை மீது ஏறி அவர்கள் மீது கற்களை எறிந்து வந்தேன். எந்த அளவுக்கென்றால், அவர்களிடமிருந்து அனைத்து ஒட்டகங்களையும் விடுவித்து விட்டேன்.

ஸஹீஹ் முஸ்லிமில், நான் அவர்களை விரட்டிச் சென்றேன். எந்த அளவுக்கென்றால் அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களின் அனைத்து ஒட்டகங்களையும் விடுவித்தான். நான் அவற்றை எனக்குப் பின்னால் விட்டுச் சென்றேன் என்ற சொற்கள் வருகின்றன.

மேலும் அவர்களிடமிருந்து 30 சால்வைகளையும் நான் பிடுங்கிக் கொண்டேன். அவர்கள் ஓடிச் செல்லும் போது சுமையை குறைப்பதற்காக அதை எறிந்து விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களும் அன்னாருடைய ஸஹாபிகளும் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்கள் எதையெல்லாம் எறிந்து சென்றார்களோ அதற்கு மேல் அடையாளமாக கற்களை வைத்துக் கொண்டே சென்றேன். மேலும் அவர்களை பின்தொடர்ந்து விரட்டிக் கொண்டே சென்றேன். அவர்கள் மீது அம்பெய்து கொண்டு தனியாக சண்டையிட்டுக் கொண்டே சென்றேன்.

வரலாற்று நூல்களிலும் வாழ்க்கை வரலாற்று நூல்களிலும் இந்த சம்பவம் எடுத்துரைக்கப்பட்டும்போது, அனைத்து ஒட்டகங்களும் திரும்ப பெறப்படவில்லை என்றும் சில ஒட்டகங்களை எதிரிகள் தம்முடன் அழைத்து செல்வதில் வெற்றி பெற்று விட்டார்கள் என்றும் எழுதப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த சம்பவத்தின் செய்தி சென்றடைந்தபோது அபாய நேரம் என்று மதீனாவில் அறிவிப்பு செய்யப்பட்டது. அல்லாஹ்வின் வீரர்களே! புறப்படுங்கள் என்று அங்கு கூறப்பட்டது. அப்போதே குதிரை வீரர்கள் அன்னாரை சுற்றி ஒன்று கூடி விட்டார்கள். அனைவரையும் விட முதலில் மிக்தாத் அவர்கள் அன்னாரிடம் வந்தார்கள். பிறகு ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர், ஸஅத் பின் ஸைத், உஸைத் பின் ஹுஸைர், உக்காஷா, முஹ்ரிஸ் பின் நஸ்லா, அபூ கதாதா மற்றும் அபூ அய்யாஷ் ஆகியோர் வந்து விட்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஅத் பின் ஸைத் (ரலி) அவர்களை அமீராக நியமித்தார்கள். எதிரிகளை விரட்டி செல்லுங்கள் ; நானும் மக்களுடன் உங்களை வந்து சந்திக்கிறேன் என்று கூறினார்கள். அதாவது, நீங்கள் முன்னால் செல்லுங்கள்; நான் பின்னால் வருகிறேன் என்றார்கள். அன்னார் 500 ஸஹாபிகளுடன் புறப்பட்டார்கள். 700 ஸஹாபிகளுடன் புறப்பட்டார்கள் என்றும் கூறப்படுகிறது. அன்னார் மதீனாவில் ஹஸ்ரத் இப்னு உம்மு மக்தூம் (ரலி) அவர்களை தம் பிரதிநிதியாக நியமித்தார்கள். ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்களை 300 ஸஹாபிகளுடன் மதீனாவை பாதுகாப்பதற்காக பின்னால் விட்டு சென்றார்கள். ஹஸ்ரத் மிக்தாத் பின் அஸ்வத் (ரலி) அவர்களின் ஈட்டியில் கொடியை கட்டினார்கள்.

இந்த போர் நடவடிக்கையில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை பற்றிய குறிப்பு இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அபூ அய்யாஷ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் என்னிடம், அபூ அய்யாஷே நீங்கள் உங்களை விட சிறந்த வீரருக்கு உங்களுடைய குதிரையை கொடுக்க மாட்டீர்களா? அவர் விரைவாக எதிரியை சென்றடைந்து விடுவார் என்று கூறினார்கள். அதற்கு நான்,அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, நான் அனைவரையும் விட சிறந்த வீரனாவேன் என்று கூறினேன். நான் இவ்வாறு கூறிவிட்டு என்னுடைய குதிரையை முன்னால் ஓட்டிய போது அது 50 கஜ தூரம் தான் சென்றிருக்கும். அது என்னை நிலத்தில் விழ செய்து விட்டது. உம்மை விட சிறந்த சவாரிக்கு குதிரையை கொடுங்கள் என்று அன்னார் (ஸல்) இப்பொழுதுதானே கூறினார்கள். நான் அனைவரையும் விட சிறந்த குதிரை வீரன் ஆவேன் என்று கூறி வந்தேனே என்று எனக்கு வியப்பு ஏற்பட்டது. பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த குதிரையை ஹஸ்ரத் முஆஸ் பின் மஆஸ் (ரலி) அவர்களுக்கு கொடுத்தார்கள்.

ஹஸ்ரத் ஸலமா அவர்களோ எதிரியை பின் தொடர்ந்து விரட்டிச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: பகல் விழிந்த போது உயைனா அவர்களுக்கு உதவி செய்வதற்காக வந்திருந்தார்.

உயைனா அங்குதான் இருந்தார் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. அவர் ஒரு குறுகலான பள்ளத்தாக்கில் இருந்தார். ஸலமா அவர்கள் கூறுகிறார்கள்: நான் மலை மீது ஏறிக் கொண்டேன். அப்பொழுது உயைனா தம் தோழர்களிடம், இவர் யார் ? என்று கேட்டார். காலையிலிருந்து இப்பொழுது வரை இவர் எங்களை பின்தொடர்ந்து கொண்டிருக்கிறார். எங்கள் மீது அம்பெய்தும் வருகிறார். தம்முடைய கால்நடைகளை விடுவித்துக் கொண்டிருக்கிறார். இவர் எங்களுடைய அனைத்து பொருட்களையும் பிடுங்கிக் கொண்டார் என்று அவர்கள் கூறினார்கள். இவருக்கு பின்னால் மக்கள் வருவார்கள் என்ற உறுதி இவருக்கு இல்லாவிட்டால் இவர் எப்போதோ உங்களை விட்டுச் சென்றிருப்பார் என்று உயைனா கூறினார்.

அவர் சுதாரிப்பான மனிதராக இருந்தார். இவருக்கு பின்னால் நிச்சயமாக ஏதேனும் படை வரும் என்று கருதினார்.

உங்களில் சிலர் அவரை நோக்கி செல்லுங்கள் என்று தன் கூட்டாளிகளிடம் கூறினார். ஆகவே அவர்களிலிருந்து நான்கு பேர் என்னை நோக்கி வந்தார்கள். அவர்கள் மலை மீது ஏறினார்கள். நான் அவர்களிடம், நீங்கள் என்னை அறிவீர்களா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் நீ யார்? என்று கேட்டார்கள். நான் இப்னு அக்வா ஆவேன். பெருமானார் (ஸல்) அவர்களை கண்ணியத்துடன் அனுப்பிய அந்த இறைவன் மீது ஆணையாக, உங்களில் எவரும் என்னை பிடிக்க முடியாது; நான் ஒருவரை விரட்டிச் சென்றால் அவர் என்னிடம் இருந்து தப்பிக்க முடியாது என்று கூறினேன். அவர்களுள் ஒருவன், என்னுடைய கருத்தும் இதுதான் என்று கூறினான். பிறகு அவர்கள் பயந்து திரும்பிச் சென்று விட்டார்கள்.

இது புஹாரீயுடைய அறிவிப்பாகும்.

ஹஸ்ரத் ஸலமா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அந்த இடத்திலிருந்து நகர்ந்திருக்கக் கூட இல்லை. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமக்கு முன்னால் அனுப்பி வைத்திருந்த குதிரைப் படையினர் மரங்களிடையே புகுந்து வருவதை நான் பார்த்தேன். அவர்களில் முதல் ஆளாக முஃரில் பின் நஸ்லா அக்ரம் அஸதீ அவர்கள் இருந்தார்கள். அவருக்குப் பின்னால் அபூகதாதா அன்ஸாரீ அவர்கள் இருந்தார்கள். அவரைத் தொடர்ந்து மிக்தாத் பின் அஸ்வத் அவர்கள் இருந்தார்கள்.

நான் அக்ரம் அவர்களது குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டேன். (அப்போது அவர்கள் நால்வரும் புறமுதுகிட்டு ஓடிக் கொண்டிருந்தனர்) நான், அக்ரமே, அவர்களிடம் எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள்; அவர்கள் உம்மை கொன்று விட வேண்டாம். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும் அவர்களுடைய தோழர்களும் வந்து சேரும் வரை முன்னால் செல்ல வேண்டாம்; பொறுமையாக இருங்கள் என்று கூறினேன். அதற்கு அக்ரம் அவர்கள், ஸலமா, நீங்கள் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டவராயிருந்தால், சொர்க்கம் உண்மை; நரகம் உண்மை என நீர் அறிந்திருந்தால் எனக்கும் ஷஹாதத்துக்குமிடையே குறுக்கிடாதீர் என்று கூறினார்.

அவர்கள் மிக துணிவுடன் இதைக் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஸலமா கூறுகின்றார்கள்: ஆகவே அவரை நான் விட்டுவிட்டேன். அவரும் அப்துர் ரஹ்மான் பின் உயைனாவும் மோதிக் கொண்டனர். அக்ரம் அவர்கள் அப்துர் ரஹ்மானுக்கும் அவனது குதிரைக்கும் காயத்தை ஏற்படுத்தினார்கள். அப்துர் ரஹ்மான், அக்ரம் (ரலி) அவர்கள் மீது ஈட்டியைப் பாய்ச்சி அவர்களை ஷஹீதாக்கி அவர்களின் குதிரையுடன் திரும்பிச் சென்று விட்டார்.

ஹஸ்ரத் அக்ரம் (ரலி) அவர்களை அவ்பார் ஷஹீத் ஆக்கினான் என்றும் வருகிறது. அவ்பாரும் அவனுடைய மகனும்

ஒரே ஒட்டகத்தில் அமர்ந்திருந்தனர். ஹஸ்ரத் உக்காஷா (ரலி) அவர்கள் ஈட்டியைக் கொண்டு தாக்கி இருவரையும் ஒரே தாக்குதலில் கொன்று விட்டார்கள்.

இன்னோர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் அக்ரம் (ரலி) அவர்களை மஸ்அதா ஷஹீத் ஆக்கினான் என்று வருகிறது.

ஷஹாதத் சம்பவம் தொடர்பாக ஒரு கனவைப் பற்றிய குறிப்பும் உள்ளது. ஹஸ்ரத் அக்ரம் (ரலி) அவர்கள் எதிரியுடன் சண்டையிடுவதற்கு ஒரு நாள் முன்பு ஒரு கனவை கண்டார்கள். தமக்காக வானம் திறந்து இருப்பதாகவும், தாம் வானத்தில் நுழைவதாகவும் கண்டார்கள். எந்த அளவுக்கு என்றால், ஏழாம் வானம் வரை சென்று விட்டார்கள். பிறகு ஸித்ரத்துல் முன்தஹா வரை சென்றடைந்து விட்டார்கள். இதுதான் உமக்குரிய இடம் என்று அவர்களிடம் கூறப்பட்டது. ஹஸ்ரத் அக்ரம் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் இந்தக் கனவை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறியபோது, நீங்கள் அடையவிருக்கின்ற ஷஹாதத் உங்களுக்கு வாழ்த்துக்குரியதாக ஆகட்டுமாக என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஹ்ரிஸ் அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூ கத்தாதாவும் வந்தடைந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் குதிரை வீரரான ஹஸ்ரத் அபூ கதாதா (ரலி) அவர்கள் அப்துர் ரஹ்மான் பின் உயைனாவை எதிர்கொண்டார்கள். அவர்கள் இருவரும் ஈட்டியால் தாக்கிக் கொள்ள ஆரம்பித்தார்கள். உயைனாவின் மகன், ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்களின் குதிரையை வெட்டினான். ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்கள் அவனைக் கொன்று அவனுடைய குதிரை மீது அமர்ந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்கள் மஸ்அதா அஃப்ஸாரீ என்பவனோடு சண்டையிட்ட சம்பவத்தின் குறிப்பும் காணக் கிடைக்கின்றது.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில், ஹஸ்ரத் அபூ கதாதா (ரலி) அவர்களுக்கு எதிரி தாக்குதல் நடத்திய செய்தி கிடைத்தபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் தம் ஸஹாபிகளுடன் மதீனாவில் இருந்து புறப்பட்டு ஸூபாபு எனும் இடத்தை வந்தடைந்து இருந்தார்கள். அந்த இடம், ஸனியத்துல் விதாவில் இருந்து இறங்கும்போது, உஹது மலை செல்லும் வழியில் இருந்த ஒரு சிறிய கருப்பு மலையாகும். ஹஸ்ரத் அபூ கத்தாதா அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அபூ கத்தாதாவே! முன்னால் செல்லுங்கள்; அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்வான் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் புறப்பட்டேன்; என்னுடைன் இன்னொரு நபரும் இருந்தார்; நாங்கள் விரைவாகவே எதிரியை சென்று அடைந்து விட்டோம். அபூ கத்தாதாவே இவர்களை எதிர்கொள்ள நமக்கு ஆற்றல் இல்லையே; நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? பெருமானார் (ஸல்) அவர்கள் வரும்வரை நாம் காத்திருக்கலாம் என்றார். அதாவது நாம் இருவர் தாக்குதல் நடத்துவதற்கு பதிலாக முழு படையும் பின்னால் வந்து சேரட்டும்; அப்பொழுது நாம் தாக்குதல் தொடுக்கலாம் என்றார். அதற்கு அபூ கத்தாதா நீங்கள் ஒரு பக்கமாக தாக்குதல் நடத்துங்கள்; நான் இன்னொரு பக்கமாக தாக்குதல் நடத்துகிறேன் என்றார்கள். ஆகவே அந்த இருவரும் எதிரியை கஷ்டத்தில் ஆழ்த்தி விட்டார்கள். எதிரி அவர்கள் மீது அம்பு எறிந்த போது அம்பு ஒன்று அவருடைய நெற்றியில் பட்டது. அபூ கதாதா கூறுகிறார்கள்: நான் அந்த அம்பை வெளியே எடுத்தேன். ஓர் உலோக துண்டை எடுத்தது போன்று இருந்தது. நான் முன்னேறி சென்ற போது, வேகமாக வந்த குதிரையில் ஒரு வீரன் எனக்கு முன்னால் வந்தான். அவன் கவசம் அணிந்து இருந்தான். அவன் என்னை அடையாளம் கண்டு கொண்டான். ஆனால் என்னால் அவனை அடையாளம் கண்டு கொள்ள இயலவில்லை.

அவன் என்னைப் பார்த்து, அபூ கத்தாதாவே! அல்லாஹ் உம்மையும் என்னையும் சந்திக்க வைத்து விட்டான் என்று கூறியவாறு தன் முகத்தில் இருந்த கவசத்தை கழற்றினான். அவன் மஸ்அதா ஃபஸாரீ ஆக இருந்தான். நீர் என்ன விருப்பப்படுகிறீர்? என்று கேட்டான். அதாவது வாளால் சண்டையிட வேண்டுமா? ஈட்டியால் சண்டையிட வேண்டுமா? அல்லது குஸ்தி செய்ய வேண்டுமா? எவ்வாறு சண்டையிட விரும்புகறீர் என்று கேட்டான். அதற்கு நான் அதை உம்மிடமே விட்டு விடுகிறேன்; நீ விரும்பியதை செய்யலாம் என்று கூறினேன். அதற்கு அவன் குஸ்தி செய்யலாம் என்றான். பிறகு அவன் தனது சவாரியிலிருந்து இறங்கினான்.

அந்த காலத்தின் போர் முறைகளும் வினோதமானதாக இருந்தன.

அவன் தன் சவாரியில் இருந்து இறங்கினான். நான் எனது குதிரையை மரத்தில் கட்டினேன். எனது ஆயுதங்களை அங்கே வைத்தேன். அவனும் அவ்வாறே செய்தான். பிறகு தாங்கள் சண்டையிட ஆரம்பித்தோம். அவனை வெற்றிக் கொள்ளக் கூடிய வாய்ப்பை அல்லாஹ் எனக்கு வழங்கினான். நான் அவன் மீது ஏறிக் கொண்டேன். என்னுடைய வாளை எடுத்து வர நான் விரும்பினேன். அவனும் அவனுடைய வாளை எடுத்துக் கொள்ளட்டும் என்று நினைத்தேன்.

நாங்கள் இரண்டு படைகளுக்கு இடையே இருந்தோம். ஆகவே எங்கள் மீது யாரேனும் எப்பொழுது வேண்டுமானாலும் தாக்குதல் நடத்துவதற்கு வாய்ப்பு இருந்தது. அப்போது என்னுடைய தலையில் ஏதோ பட்டது. நாங்கள் சண்டையிட்டுக் கொண்டே மஸ்அதா ஃபஸாரீ உடைய ஆயுதங்கள் இருக்கும் இடத்தை அடைந்து விட்டிருந்தோம். நான் கையை நீட்டி அவருடைய வாளை எடுத்துக் கொண்டேன். என்னுடைய கையில் வாள் இருப்பதை அவன் பார்த்தபோது, அபூ கத்தாதாவே! என்னை கொஞ்சம் கருத்தில் கொள்ளுங்கள் என்று கூறினான். அதற்கு நான், இல்லை உனது வசிப்பிடம் இப்போது நரகமாகும்; அதை பார்த்துக் கொள் !என்று கூறி அவனை கொன்று விட்டேன். அவனை எனது சால்வையில் சுற்றினேன். பிறகு நான் அவனது உடைகளை அணிந்து கொண்டேன்; அவனது ஆயுதங்களை எடுத்துக் கொண்டேன்; அவனது குதிரையில் அமர்ந்து கொண்டேன். ஏனெனில், நாங்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தபோது என்னுடைய குதிரை எதிரியின் பக்கம் ஓடி விட்டது. அவர்கள் அதை வெட்டி விட்டார்கள். நான் விரைவாக முன்னால் சென்றேன். மஸ்அதாவின் சகோதரனுடைய மகனை கண்டேன். அவனுடன் 17 வீரர்கள் இருந்தனர். நான் அவர்களுக்கு சைகை செய்த போது அவர்கள் நின்று விட்டார்கள். நான் அவர்களுக்கு அருகில் சென்று அவர்களை தாக்கினேன். மஸ்அதா உடைய சகோதரன் மகனையும் ஈட்டி எறிந்து அவனுடைய கழுத்தை உடைத்தேன். அவனுடைய கூட்டாளிகள் ஓடிவிட்டனர். ஹஸ்ரத் ஸலமா பின் அக்வா (ரலி) அவர்கள் தாக்கிய போது எதிரிகள் விட்டுச் சென்றிருந்த என்னுடைய ஒட்டகங்களை நான் கையகப்படுத்திக் கொண்டேன்.

இந்த போருடைய சம்பவங்கள் இன்னும் உள்ளன. இனி வரக் கூடிய காலத்திலும் தொடரும் இன்ஷா அல்லாஹ்!

தமிழாக்கம்
மவ்லவி A.P.Aதாரிக் அஹ்மது

* * * * *

**முதல் பக்கத் தொடர்ச்சி...**
**(ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பொன்மொழிகள்)**

உண்மைக்கான அடையாளங்களின் மீதே தாக்குதல் தொடுக்க ஆரம்பித்து விட்டனர். ஏனெனில், நான் இவ்வாறு வஹீ மற்றும் இல்ஹாம் வருவதாக வாதம் செய்து 25 வருடங்களுக்கும் அதிகமாக கடந்து விட்டது என்பது இந்த மக்களுக்கு தெரியும். அது பெருமானார் (ஸல்) அவர்கள் நபியாக அனுப்பப்பட்ட அந்தக் காலகட்டத்தை விட அதிகமானதாகும். அது வெறும் 23 வருடங்களாக இருந்தது. இது 30 வருடங்களை நெருங்கி விட்டது. எதுவரை இறைவன் எனது அழைப்பிற்கான இந்த நாட்களை வைத்துள்ளான் என்பது இப்போது தெரியாது. எனவே இந்த மக்கள் தம்மை மவ்லவிகள் என்று கூறிக் கொண்ட பிறகும், இறைவன் மீது இட்டுக்கட்டக் கூடிய ஒருவர், தமக்கு இல்ஹாம் வருவதாக கூறக்கூடிய ஒருவர், தான் இட்டுக்கட்டி கூறிய அந்த நாளிலிருந்து 30 வருடங்கள் வரை கூட இருக்கலாம் என்று கூறுகின்றனர். மேலும் அவருக்கு இறைவன் தனது ஆதரவையும், உதவியையும் வழங்க முடியும் என்று கூறுகின்றனர். இதற்கு இணையான ஒன்றை கொண்டு வந்து காட்டுங்கள். அசட்டு துணிச்சல் கொண்ட மக்கள் பொய் கூறுவதும் சாணத்தை உண்பதும் சமமான ஒன்றேயாகும். இறைவன் என்னுடன் எந்த அளவிற்கு அருளுடனும், கருணையுடனும் நடந்து கொண்டான் என்றால் இந்த நீண்ட காலகட்டத்தில் ஒவ்வொரு நாளும் எனக்கு முன்னேறத்தின் நாளாக இருந்தது. என்னை அழிப்பதற்காக தொடுக்கப்பட்ட ஒவ்வொரு வழக்கிலும் இறைவன் எதிரிகளை இழிவடையச் செய்தான். இது போன்ற நீண்ட காலகட்டம் மற்றும் இறை உதவிக்கு இணையான ஒன்று உங்களிடம் இருந்தால் அதனை நீங்கள் முன் வையுங்கள். அவ்வாறில்லையென்றால் لَوْ تَقَوَّلَ عَلَيْنَا என்ற இந்த வசனத்தின் மூலமாக இந்த இறை அடையாளமும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அது தொடர்பாக நீங்கள் கேள்வி கேட்கப்படுவீர்கள்.

(ஹக்கீத்துல் வஹீ, ரூஹானீ கஸாயீன், பாகம் 23, பக்கம் 213)

* * * * *

## அல்லாஹ்வின் பால் அழைப்பதில் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு இருந்த உணர்வும் ஹுஸூர் அன்வர் (அலை) அவர்களின் அறிவுரைகளும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பொறுப்புகளும்

(மதிப்பிற்குரிய முரப்பி ஃபாதிஹுத்தீன் ஸாஹிப், நாயிப் அமீர் டெல்லி )
காதியான் ஜல்ஸா -2024 சொற்பொழிவு

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
قُلْ اِنَّ صَلَاتِيْ وَنُسُكِيْ وَمَحْيَايَ
وَمَمَاتِيْ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ
(அல் அன்ஆம்: 163)

وَّدَاعِيًا اِلَى اللّٰهِ بِاِذْنِهٖ وَسِرَاجًا مُّنِيْرًا

(அல் அஹ்ஸாப் : 47)

தற்போது உங்களுக்கு முன்னால் சூரா அல் அன்ஆமுடைய 163-வது வசனமும், சூரா அல் அஹ்ஸாபுடைய 47 வசனமும் ஓதப்பட்டன. அதன் பொருள் இவ்வாறாகும்:

நீர் கூறுவீராக! எனது இறை வணக்கமும், எனது தியாகங்களும், எனது வாழ்வும், எனது மரணமும் எல்லா உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்விற்கே உரியன.

அல்லாஹ்வின் பக்கம் அவனது கட்டளைக்கு ஏற்ப அழைக்கக் கூடியவர் ஓர் ஒளிமயமாக்கக் கூடிய சூரியனைப் போன்றவர் ஆவார்.

நீங்கள் செவிமடுத்தது போன்று எனது சொற்பொழிவின் தலைப்பு அல்லாஹ்வின் பால் அழைப்பதில் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு இருந்த உணர்வும் ஹுஸூர் அன்வர் (அலை) அவர்களின் அறிவுரைகளும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பொறுப்புகளும் என்பதாகும்.

ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த வாழ்வளிக்கும் நீரூற்றானது உங்களை பாதுகாக்கும். நான் என்ன செய்வேன்; மேலும் எவ்வாறு இந்த நற்செய்தியை மக்களின் உள்ளங்களின் நிலைநிறுத்துவேன். உங்களின் இறைவன் இவன் ஆவான் என்பதை மக்கள் கேட்கும் பொருட்டு நான் எந்த முரசு கொண்டு கடைவீதிகளில் அறிவிப்பேன். கேட்பதற்கு மக்களின் காதுகளை திறக்கும் பொருட்டு நான் எந்த மருந்து கொண்டு சிகிச்சை செய்வேன்.

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயீன் தொகுதி 19, பக்கம் 22)

கண்ணியமிக்கவர்களே! நான் எனது சொற்பொழிவின் துவக்கத்தில் ஓதிய இந்த திருக்குர்ஆன் வசனத்தில் அல்லாஹ்விடத்தில் தன்னை மாய்த்துக் கொள்கின்ற நமது அன்பிற்குரிய எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் தன்னிகரற்ற அந்த உயர்தரமான அந்தஸ்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்தமான வாழ்க்கையின் எத்தகைய மனம் கவர் சித்திரம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்றால் அது எல்லா ரீதியிலும் நிகரற்றதாக இருக்கின்றது. மேலும், இந்த இறுதிக் காலத்தில் அல்லாஹ் தூய ரஸூல் (ஸல்) அவர்களின் மகத்தான ஆன்மிக மகனும், அன்னாரின் உண்மைப் பேரன்பருமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களுக்கு இந்த நற்பேறை வழங்கியிருக்கின்றான். அதாவது அன்னார் (அலை) முற்றிலும் தமது எஜமானரான ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் நிறத்தை தன்னகத்தே மேற்கொண்டார்கள். அதாவது உண்மைப் பேரன்பரின் இருப்பு தமது எஜமானர் (ஸல்) அவர்களின் முழுமையான நிழலாக மாறிவிட்டது. அன்னாரது வாழ்க்கை ஈருலக எஜமானரின் அடிமைத்துவத்தின் கீழ் ஒவ்வோர் அடியிலும் பின்தொடர்ந்தவாறு இந்த திருக்குர்ஆன் வசனத்திற்கு உயிருள்ள ஒரு சித்திரமாகிவிட்டது.

கண்ணியத்திற்குரியவர்களே! ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களிடம் இருந்த மார்க்கத் தன்மானமும், இஸ்லாத்தை பரப்புவதற்காக இருந்த துடிப்பும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடமும் நிரம்பியிருந்தது. நமது அன்பிற்குரிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மார்க்கத்திற்காக இருந்த அதே வேதனை அன்னாரிடம் இருந்தது. மார்க்கத்தின் வெற்றிக்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் துடித்தது போன்றே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும் துடித்து வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மார்க்கத் திட்டங்களில் எத்தகைய துன்பங்களையும், வேதனைகளையும் கடந்து சென்றார்களோ அந்த துன்பங்களிலும், வேதனைகளிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும் பங்கு பெற்றார்கள். அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பரப்புகின்ற பணியில் முழுவதுமாக ஈடுபட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை (நவூதுபில்லாஹ்) பைத்தியக்காரர் என்றும் சூனியக் காரர் என்றும் மக்கள் கூறினர். அதேபோன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கும் நவூதுபில்லாஹ் மக்கள் காஃபிர் என்றும் தஜ்ஜால் என்றும் பெயர் சூட்டினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிம்மதியிழந்த நிலையில் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் வீழ்ந்து மன்றாடிய காட்சி தென்படுவதைப் போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும் வேதனை மிகுந்த நிலையில் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் ஸஜ்தாவில் வீழ்ந்து மார்க்கத்தின் வெற்றிக்காக மன்றாடி வந்தார்கள்.

சுருக்கமாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பராக இருந்ததன் அடிப்படையில் தமது எஜமானர் மற்றும் தமது அன்பிற்குரிய நேசர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் நிறத்தை முழுமையாக மேற்கொண்டு விட்டார்கள். இவை அனைத்தும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு அன்னாரின் பேரன்பிற்குரிய எஜமானரின் ஒப்புமையின் பக்கம் சுட்டி காட்டுகின்றது.

கண்ணியத்திற்குரிய அவையோர்களே! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உள்ளத்தில் அல்லாஹ்வின் பால் அழைக்கும் பணிக்காக இருந்த உணர்வை நான் எடுத்துரைப்பதற்கு முன்னார் அக்காலத்தில் இஸ்லாத்தின் நிலை என்னவாக இருந்தது? என்பதை ஆய்வு செய்வது உகந்ததாக இருக்கும். இஸ்லாம் எனும் கப்பல் எப்படிப்பட்ட அபாயகரமான புயலுக்கு மத்தியில் நின்று கொண்டிருந்தது? என்பதன் மீது சற்று பார்வையிடுவோம்!

1890 காலகட்டம் எப்படிப்பட்ட காலகட்டமாக இருந்தது? என்றால், அப்போது முழு இந்தியாவும் கிறிஸ்தவத்தின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. எல்லாப் பக்கமும் கிறிஸ்துவத்தின் பிரச்சாரம் மிகவும் உச்சத்தில் இருந்தது. முஸ்லிம்கள் முற்றிலும் ஆதரவற்றவர்களாக இருந்தனர். கிறிஸ்துவத்தின் அலை அவர்களை மெதுவாக அடித்துச் சென்று கொண்டிருந்தது. இந்த நிலையைக் கண்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உள்ளத்தில் மிகுந்த துன்பமும், வேதனையும் உருவானது. மேலும் இஸ்லாத்தின் சேவைக்காக அன்னாரிடத்தில் எல்லையற்ற உணர்வு இருந்தது. அன்னாருடைய அந்த நிலையை அன்னாருடைய வேதனை நிறைந்த இந்த எழுத்துக்களிலிருந்து நம்மால் சற்று அனுமானித்துக் கொள்ள முடியும். அன்னார் (அலை) கூறினார்கள்:

குறுகிய காலத்திலேயே இந்த இந்திய நாட்டில் சுமார் ஒரு இலட்சம் மக்கள் கிறிஸ்தவ மார்க்கத்தை மேற்கொண்டனர் என்பது உண்மை இல்லையா? பெரும் பெரும் கண்ணியம் மிகுந்த குடும்பங்களின் மக்கள் தமது தூய மார்க்கத்தை கைவிட்டு விட்டனர். எந்த அளவுக்கு என்றால், தூதரின் குடும்பத்தினர் என்று அழைக்கப்பட்டவர்களும் கூட கிறிஸ்தவத்தின் ஆடையை அணிந்து கொண்டு இறைத் தூதரின் எதிரிகளாக ஆகிவிட்டனர்……… ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்து அவதூறாகவும், இழிவாகவும், ஏசிபேசியும் எந்த அளவிற்கு நூல்கள் அச்சிடப்பட்டன மேலும் வெளியிடப்பட்டன என்றால் அதனை கேட்கும்போது உள்ளம் நடுங்கி விடுகின்றது.மேலும், இந்த மக்கள் நமது கண்களுக்கு முன்னால் எமது பிள்ளைகளைக் கொலை செய்தாலோ மேலும் எமது உயிரான மற்றும் உலகின் நேசத்திற்குரிய எமது அன்பர்களை துண்டு துண்டாக்கிவிட்டாலோ மேலும் எம்மை மிகவும் இழிவாக கொன்று விட்டாலோ ……….மேலும் எமது அனைத்து செல்வங்களையும் அபகரித்துக் கொண்டு விட்டாலோ கூட எமக்கு இந்த அளவுக்கு வேதனை ஏற்பட்டிருக்காது. அதாவது அல்லாஹ்வின் மீது ஆணையாக! மீண்டும் கூறுகின்றேன்; அல்லாஹ்வின் மீது ஆணையாக! எமது இறைத் தூதர் (ஸல்) அவர்களை ஏசிபேசுவதாலும், அவமரியாதை செய்வதாலும் எமக்கு ஏற்பட்ட துன்பமும் உள்ளம் அடைந்த வேதனையும் ஒருபோதும் அந்நிலையில் ஏற்பட்டிருக்காது என்று உள்ளம் அழுது அழுது சாட்சி கூறுகின்றது. இஸ்லாத்தின் அவலநிலையின் மீது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உள்ளத்தில் நிலவி வந்த வேதனைகளை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எந்தக் காலத்தில் தோன்றினார்களோ அப்போது எல்லாப் பக்கமும் இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுனர் மீது உள்ளத்தை புண்படுத்துகின்ற தாக்குதல்கள் நடந்து கொண்டிருந்தன. ஆனால், அன்னார் (அலை) அல்லாஹ்வின் உதவி மற்றும்

ஒத்தாசையுடன் எந்த அளவிற்கு துடிப்புடனும், உத்வேகத்துடனும், முழுமையான ஆர்வத்துடனும் நேர்வழியை பரப்புதலின் பணியை முழுமை செய்கின்ற கடமையை நிறைவேற்றினார்கள் என்றால் அதற்கு நிகரான உதாரணம் நமக்கு எங்கும் கிடைப்பதில்லை. மேலும் அன்னார் (அலை) இஸ்லாத்திற்கு ஆற்றிய சேவைகளும், இஸ்லாத்தின் மீது கொண்டிருந்த நேசமும் எப்படிப்பட்ட நிகழ்வுகள் என்றால் அவை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுவதற்கு தகுதி வாய்ந்தவையாகும். இந்த துடிப்பையும், உத்வேகத்தின் வெளிப்பாட்டையும் அன்னார் (அலை) கவிதைகளின் வடிவில் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி வந்தார்கள். உண்மை இதுவே ஆகும். அதாவது அன்னார் (அலை) தமது முழு வாழ்வையும் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் மார்க்கத்தைப் பரப்புவதற்காக முற்றிலும் அர்ப்பணித்து விட்டார்கள்.

அன்னார் (அலை) ஒரு பாரசீக கவிதையில் கூறுகின்றார்கள்:

ஜானம் ஃபிதா ஷவத் பர்ஹே தீனே முஸ்தஃபா ஈன் அஸ்த் காமே தில் அகர் ஆயிதே முயஸ்ஸரம்

பொருள்: எனது உயிர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் மார்க்கத்திற்காக அர்ப்பணம் ஆகட்டும். இதுவே எனது உள்ளத்தின் ஆசையாகும். அந்தோ! இந்த நோக்கம் எனக்கு கிடைத்து விட வேண்டுமே!

1885-ம் ஆண்டில் நிகழ்ந்த சம்பவம்- மார்க்கத்தை பரப்புவதற்கான அன்னாரின் துடிப்பு இவ்வாறு வெளிப்பட்டது; ஹஸ்ரத் ஸூஃபீ அஹ்மது ஜான் ஸாஹிப் லூதியானவி அவர்கள் ஹஜ்ஜிற்காக சென்ற அந்த தருணத்தில் வெளிப்பட்டது. அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அன்னாரிடம் கீழ் காணும் துஆவை எழுதி கொடுத்தனுப்பினார்கள். மேலும், இந்த துஆவை குறிப்பாக கஅபத்துல்லாஹ்விலும், அரஃபா மைதானத்திலும் நீங்கள் செய்ய வேண்டும் என்று அவர்களுக்கு கட்டளை வழங்கினார்கள். அந்த வேதனை மிகுந்த துஆ இதுவாகும்:

கருணையாளர்களில் மிகவும் சிறந்தவனே! எந்தப் பணியை பரப்புவதற்காக நீ என்னை நியமித்துள்ளாயோ மேலும் எந்த தொண்டிற்காக நீ எனது உள்ளத்தில் உத்வேகத்தை ஏற்படுத்தி இருக்கின்றாயோ அதனை உனது அருளாலேயே முழுமை செய்து கொடுப்பாயாக! மேலும், இந்த எளியவனின் கரங்களால் இஸ்லாத்தின் எதிரிகள் மீதும் மேலும் இது வரை இஸ்லாத்தின் சிறப்புகளைக் குறித்து அறியாதவர்களாக இருக்கும் அந்த அனைவரின் மீதும் சான்றுகளை முழுமைப்படுத்துவாயாக! (தாரீகே அஹ்மதிய்யத், தொகுதி 1, பக்கம் 265)

கண்ணியத்திற்குரியவர்களே! இது எத்தகைய காலகட்டமாக இருந்தது என்றால் அந்நேரத்தில் இஸ்லாத்தின் மீது தாக்குதல்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. மேலும், இஸ்லாத்தின் கப்பல் ஒரு புதைகுழியில் சிக்கியிருந்ததைப் போன்ற காட்சி தென்பட்டுக் கொண்டிருந்தது. இஸ்லாத்தின் மீது கவலையும், வேதனையும், துன்பமும் நிறைந்திருந்த அந்தக் காலத்தில் தான் அஹ்மதிய்யத் எனும் ஒளி உதித்தது. மேலும் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக ஒரு மகத்தான இயக்கம் வெளிப்பட்டது. சிறுவர் பருவம் முதலே அன்னாருக்கு இஸ்லாத்தின் மீதும், இஸ்லாத்தின் தோற்றுநர் மீதும் இறைவனால் வழங்கப்பட்ட ஓர் எல்லையற்ற நேசம் இருந்தது. மேலும் இறை வணக்கங்களின் மீதான நேசம் அன்னாரின் உள்ளத்தில் நிறைந்திருந்தது. மஸ்ஜிதின் மீது அன்னாருக்கு எத்தகைய நேசம் இருந்தது என்றால், சிலமுறை, அன்னார் எங்கே? என்று எவரேனும் அன்னாரைக் குறித்து அன்னாரின் தந்தையாரிடம் விசாரித்தால் மஸ்ஜிதிற்கு சென்று பாருங்கள்; ஏதாவது ஒரு ஸஃப்பில் படுத்துக் கிடப்பார் என்று கூறுவார்கள். (ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடத்தில் மார்க்கத்தை பரப்புவதற்காக எந்த அளவிற்கு உத்வேகம் இருந்து வந்தது என்றால் அதனை அனுமானம் செய்வது என்பது மனித சிந்தனைக்கும், புரிதலுக்கும் அப்பாற்பட்டதாகும். அன்னார் (அலை) தமது எழுத்துக்களில் அந்த துடிப்பை பலமுறை வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நான் கண்ணியத்திற்குரிய அந்த எஜமானனுக்கு இதற்காகவும் நன்றி செலுத்துகின்றேன். ஏனெனில், அவன் இஸ்லாத்தை பரப்புவதற்காக ஈமானிய உத்வேகத்தை எனக்கு எந்த அளவிற்கு அருளியுள்ளான் என்றால் அந்த வழியில் ஒருவேளை எனக்கு எனது உயிரை அர்ப்பணம் செய்ய நேரிட்டால் என் மீது அந்த பணி இறைவனின் அருளால் எவ்வகையிலும் சுமையாக இருக்காது. நான் இவ்வுலக மக்கள் மீது எல்லா வகையிலும் நம்பிக்கையிழந்து விட்டாலும் கூட வல்ல இறைவனின் மீது நான் மிகவும் உறுதியாக நம்பிக்கை வைத்திருக்கின்றேன். எனவே எனக்கு தெரியும்; நான் தனித்தவன் ஆவேன்; எனினும் நான் தனித்தவன் கிடையாது. அந்த கண்ணியத்திற்குரிய எஜமானன் என்னுடன் இருக்கின்றான். மேலும் அவனை விட எனக்கு மிகவும் நெருக்கமானவர் எவரும் கிடையாது. அவனது அருளினாலேயே எனக்கு இந்த நேசம் கொண்ட ஆன்மா கிடைத்துள்ளது. அதாவது துன்பங்களை சுமந்தாலும் அவனது மார்க்கத்திற்கு தொண்டாற்ற வேண்டும் என்ற ஆன்மா எனக்கு கிடைத்துள்ளது. மேலும், இஸ்லாமிய திட்டங்களை ஆர்வத்துடனும், உண்மையுடனும் நிறைவேற்ற வேண்டும் என்ற ஆன்மா கிடைத்துள்ளது. அவன் எந்த பணிக்காக என்னை நியமித்து இருக்கின்றானோ அதிலிருந்து இனி எவரும் என்னை தடுக்க முடியாது. எனது முழு வாழ்நாளும் அதற்கான தொண்டுகளிலேயே கழிய வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். மேலும், இறை மார்க்கத்திற்கான சேவையிலும், அதனை பரப்புவதிலும் கழிகின்ற வாழ்வே உண்மையில் மகிழ்ச்சிகரமான மற்றும் அருளுக்குரிய வாழ்க்கை ஆகும். (ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம், ரூஹானீ கஸாயீன் தொகுதி 5, பக்கம் 35- 36)

கண்ணியத்திற்குரியவர்களே!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் ( அலை) வருகையின் நோக்கமே இஸ்லாத்தின் மறுமலர்ச்சி மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த வாழ்க்கையை செயல் வடிவில் உலகிற்கு முன்னால் எடுத்து வைப்பதாக இருந்தது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: எமது அதிகாரத்திற்கு உட்பட்ட விஷயமாக இது இருந்திருந்தால் பின்னர் நாம் யாசகர்களைப் போன்று வீடு வீடாக சுற்றித் திரிந்து இறைவனின் உண்மையான மார்க்கத்தை பரப்புவோம்; மேலும் உலகில் பரவியிருக்கின்ற அந்த அழித்து விடக் கூடிய இணை வைத்தல் மற்றும் நிராகரிப்பிலிருந்து மக்களை பாதுகாப்போம். வல்ல இறைவன் எமக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்தால் பின்னர் நாம் சுயமே சுற்றித் திரிந்தும், சுற்றுப் பயணம் மேற்கொண்டும் பிரச்சாரம் செய்வோம். மேலும், இதே பிரச்சாரத்தில் நாம் கொல்லப்பட்டாலும் சரியே! வாழ்வை முடித்துக் கொள்வோம். (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 219, 2013-ம் ஆண்டு பதிப்பு)

உண்மையைத் தேடுபவர்களுக்கு ஆன்மிக வாழ்வு கிடைத்துவிட வேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பரிசுத்த வாழ்வின் ஒவ்வொரு தருணமும் மார்க்கத்தை பரப்புவதிலேயே கழிந்து வந்தது. அன்னாரின் வாழ்க்கை வரலாற்றின் இந்த அம்சம் தன்னகத்தே ஒரு பொலிவையும், ஈர்ப்பையும் கொண்டிருக்கின்றது. இஸ்லாத்தின் மீது அன்னார் (அலை) கொண்டிருந்த துடிப்பும், அன்னார் செய்த இஸ்லாமியப் பிரச்சாரமும் அன்னாருடைய முழு வாழ்க்கையிலும் நிறைந்திருக்கின்றது. இதுவே அன்னாரின் வாழ்வின் நோக்கமாக இருந்தது. இதற்காகவே அன்னார் (அலை) உலகிற்கு வந்தார்கள். மேலும், இதிலேயே அன்னார் (அலை) தமது வாழ்வின் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் கழித்தார்கள்.

ஆக, ஹஸ்ரத் மவ்லவி ஃபத்ஹூ தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் சமூகத்தில் பெரும்பாலும் ஆஜராகி வந்தேன். மேலும் பல முறை ஹுஸுர் (அலை) அவர்களிடமே இரவில் தங்கி வந்தேன். ஒரு முறை நான் கண்டேன்; பாதி இரவு கழிந்த நிலையில் ஹஸ்ரத் ஸாஹிப் மிகவும் நிம்மதியிழந்து துடித்துக் கொண்டிருந்தார்கள். மேலும், ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலையின் பக்கம் துடித்தவாறு சென்று கொண்டிருந்தார்கள். தண்ணீரிலிருந்து வெளியேற்றப்பட்ட மீன் துடிப்பது போன்று அன்னார் (அலை) துடித்து வந்தார்கள் அல்லது ஒரு நோயாளி கடுமையான வேதனையின் காரணமாக துடிப்பது போன்று அன்னார் (அலை) துடித்துக் கொண்டிருந்தார்கள். நான் இந்த நிலையைக் கண்டு மிகவும் அச்சமடைந்து விட்டேன். மேலும் மிகவும் கவலையடைந்தேன். மேலும், உள்ளத்தில் சிறிது எத்தகைய அச்சம் உருவானது என்றால், அந்நேரத்தில் நான் ஆச்சரியத்தால் அப்படியே படுத்துக் கொண்டேன். எதுவரை என்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அந்த நிலை நீங்கியது.

நான் காலையில் இந்த சம்பவத்தை ஹுஸுர் (அலை) அவர்களிடம் குறிப்பிட்டேன். இரவில் எனது கண்கள் இவ்வாறான காட்சியைக் கண்டது. ஹுஸுர் (அலை) அவர்களுக்கு ஏதாவது வேதனை இருந்ததா? அல்லது சிறுநீரகத்தில் வலி ஏதும் ஏற்பட்டு விட்டதா? என்று நான் கேட்டேன்.

அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறினார்கள்:

மியான் ஃபத்ஹே தீன்! நீங்கள் அந்த நேரத்தில் விழித்திருந்தீர்களா? அசல் விஷயம் என்னவென்றால், இஸ்லாத்தின் திட்டங்கள் எமக்கு நினைவு

வரும்போதெல்லாம் மேலும் தற்போது இஸ்லாத்திற்கு என்னென்ன ஆபத்துகள் வந்து கொண்டிருக்கின்றனவோ அவற்றைக் குறித்த எண்ணம் வரும்போது எமது இயல்பு கடுமையாக நிம்மதியிழந்து விடுகின்றது. இஸ்லாத்தின் மீதான வேதனையே எம்மை இவ்வாறு நிம்மதியிழக்கச் செய்து விடுகின்றது.

(ஸீரத்துல் மஹ்தி, பாகம் 3, பக்கம் 29)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இஸ்லாத்தின் பிரச்சாரத்திற்காக பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டு வந்தார்கள். தப்லீஃக்கிற்காக புத்தம் புதிய பல்வேறு அணுகுமுறைகளை மேற்கொண்டு வந்தார்கள். அவற்றை விரிவாக எடுத்துரைப்பது சாத்தியமற்றதாகும். ஆயினும், அவற்றை சைகையாக குறிப்பிடாமல் செல்வதும் உகந்ததாக தெரியவில்லை. எனவே நேரத்தை கருத்தில் கொண்டு சில அம்சங்களை எடுத்துரைக்கின்றேன்:

எல்லாவற்றிற்கும் முதலாக அன்னார் (அலை) வேதனை மிகுந்த துஆக்கள் செய்தார்கள். மேலும் இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுனர், திருக்குர்ஆனின் மேன்மைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 85-ற்கும் கூடுதலான நூல்களை அன்னார் (அலை) எழுதினார்கள். அவை ஓர் ஆன்மிக கருவூலமாக இருக்கின்றது. பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. மார்க்க விவாதங்கள் செய்தார்கள்.உலகியல் அரசர்கள் மற்றும் உலகத் தலைவர்களுக்கு கடிதங்கள் எழுதினார்கள். தொலை தூரப் பயணங்களை மேற்கொண்டார்கள். பல்வேறு அமர்வுகளை நடத்தினார்கள். கூட்டங்கள் நடத்தினார்கள். சந்திப்புகளின் தொடர்களை நிகழ்த்தினார்கள். பத்திரிகைகள் மற்றும் நாளிதழ்களை தொடங்கினார்கள். மேலும் தம்மை சந்திக்க வருகின்ற மக்கள் தங்குவதற்கும், அவர்களின் உணவிற்காகவும் லங்கர் கானா எனும் விருந்தினர் இல்லத்தை அமைத்தார்கள். ஸஹாபிகளை தயார்படுத்தினார்கள். மேலும் அவர்களிடத்திலும் தப்லீஃக்கிற்கான உத்வேகத்தை உருவாக்கினார்கள். ஸஹாபிகளோ தப்லீஃக் வழியில் சந்தித்த இழிவை கண்ணியமாக கருதினார்கள். மேலும் அதில் சந்தித்த துன்பத்தில் இன்பத்தை உணர்ந்தார்கள். அதற்கான ஒரு உதாரணம் மவ்லானா புர்ஹானுதீன் ஸாஹிப் ஜஹ்லமீ (ரலி) அவர்கள் ஒரு தப்லீஃக் பயணத்தில் பின்தங்கி விட்டபோது நமக்கு காணக் கிடைக்கின்றது. அதாவது எதிரிகள் அந்தப் பயணத்தில் அன்னாரை பிடித்து விட்டனர். மேலும் அன்னார் மீது அநீதியிழைத்தனர். மேலும் அன்னாரின் முகத்தில் சாணத்தை தடவினார்கள். ஆனால், அன்னாரின் நாவிலிருந்து சீ என்ற வார்த்தை கூட வெளிப்படவில்லை. மாறாக, அன்னார் (ரலி) அந்த விஷயத்தை அருட்கொடையாக கணக்கிட்டவாறு, புர்ஹானே! இந்த அருட்கொடைகள் எங்கிருந்து கிடைக்க முடியும்? என்று கூறினார்கள். அதாவது மார்க்கத்திற்காக ஒருவர் மற்றொருவருக்கு துன்பம் கொடுக்கும்போது அது நற்பேறாக அந்த நபருக்கு அமைகின்றது. இவை அனைத்தும் அன்னார் (அலை) அவர்களின் உள்ளத்தை ஈர்க்கும் வகையில் அமைந்த தப்லீஃக் பணிகளின் பல்வேறு அம்சங்களாக இருக்கின்றன.

கண்ணியத்திற்குரியவர்களே! காலத்தின் இமாமின் உள்ளத்தின் நிலைமையைக் குறித்த மிகவும் மனம் கவர்ந்த ஒரு சம்பவம் இருக்கின்றது.

ஒருமுறை காதியானில் கடுமையான வெப்பம் நிலவியது. தெருவீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. கடை வீதிகள் அடைக்கப்பட்டிருந்தன. எத்தகைய வெப்பமாக இருந்தது என்றால் ஒவ்வொரு நபரும் அபயம்! அபயம் என முழங்கிக் கொண்டிருந்தார்.

மவ்லவி அப்துல் கரீம் ஸாஹிப் ஸியால் கோட்டி கடுமையான வெப்பத்தை பற்றி குறிப்பிட்டவாறு தமக்கே உரிய சிறப்பான இனிமையான தொனியில் இவ்வாறு கூறினார்கள்:

எந்த அளவிற்கு கடுமையான வெப்பம் நிலவியது என்றால் அனைவரின் நிலைமையும் மோசமாகி விட்டது. எந்த அளவிற்கு என்றால், இறைவனின் பணியும் நின்று விட்டது.

இதன் பொருள் என்னவென்றால், எந்தவொரு நிலையிலும் எந்தவொரு காலநிலையிலும் இறைப் பணியிலிருந்து ஒருபோதும் சோர்வடையாத ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூட அந்த நாட்களில் ஓய்வு எடுக்கும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி விட்டார்கள்.அந்த அளவிற்கு அந்நாட்களில் காதியானில் வெப்பம் நிலவியது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு இந்த செய்தி சென்றடைந்தபோது, அன்னார் (அலை) கூறினார்கள்: நாமோ இந்த காலநிலையிலும் கூட ஒரு நொடிப் பொழுது கூட பணியை நிறுத்தி விடவில்லை.

(திக்ரே ஹபீப், பக்கம் 161, ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் ஸாஹிப் (ரலி) அவர்கள்)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இறுதி மூச்சு வரை எழுத்து ரீதியிலான ஜிஹாது தொடர்ந்து கொண்டிருந்தது. அன்னாருக்கு இது தொடர்பாக பல முறை சில பிரச்சனைகளையும் எதிர்கொள்ள நேரிட்டது. இது தொடர்பாக முன்ஷீ ஸஃபர் ஸாஹிப் கபூர்தல்வீ கூறுகின்றார்கள்:

ஒருமுறை ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுக்கு கைகளில் கடுமையான அரிப்பு நோய் ஏற்பட்டது. கை முழுவதும் வீங்கி இருந்தது. எழுதுவது அல்லது மற்ற இதர தேவைகளை நிறைவேற்றுவது கடினமாக இருந்தது. தொடர்ந்து சிகிச்சையும் எடுத்து வந்தார்கள். ஆனால், அரிப்பு நீங்கவில்லை. ஒருநாள் நான் ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களின் சமூகத்தில் ஆஜரானேன். அப்போது அஸர் நேரம் சமீபமாக இருந்தது. நான் கண்ட காட்சி என்னவாக இருந்தது என்றால், அன்னாருடைய கரம் முற்றிலும் தூய்மையாக இருந்தது. எனினும், அன்னாரின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. நான் தைரியத்துடன் ஹுஸூர் (அலை) அவர்களே! இன்று வழக்கத்திற்கு மாற்றமாக தங்களின் கண்களில் இருந்து ஏன் கண்ணீர் வழிந்தோடுகின்றது? என்று கேட்டு விட்டேன். ஹுஸூர் (அலை) கூறினார்கள்: எனது உள்ளத்தில் ஒரு பாவத்திற்குரிய எண்ணம் தோன்றிவிட்டது. அதாவது அல்லாஹ்வோ எம்மிடத்தில் இத்தனை பெரிய பணியை ஒப்படைத்திருக்கின்றான் ; மற்றொரு பக்கமோ எனது உடல்நிலை எவ்வாறு இருக்கின்றது என்றால் அனுதினம் ஏதாவது ஒரு பிரச்சனை ஏற்படுகின்றதே என்ற எண்ணம் தோன்றியது. அப்போது எனக்கு இந்த இல்ஹாம் இறங்கியது:

நாம் உமது ஆரோக்கியத்தை குத்தகைக்கு எடுத்துள்ளோமா என்ன ?

அப்போது நான் ஏன் அவ்வாறு எண்ணம் கொண்டேன்? என்று எனது இதயத்தில் எல்லையற்ற உருக்கமும், அச்சமும் உருவாகி விட்டது. இங்கோ இல்ஹாம் இறங்கியது. ஆனால், எழுந்த போது கை முற்றிலும் சரியாகிவிட்டது. மேலும் தோல் அரிப்புக்கான அடையாளம் கூட எஞ்சியிருக்கவில்லை. ஒருபக்கம் இதில் இல்ஹாமின் மகிமையைக் காண்கிறேன். மற்றொரு புறம், அல்லாஹ்வின் அந்த அருள் மற்றும் கருணையை காண்கிறேன். ஆக எனது உள்ளத்தில் அல்லாஹ்வின் மகத்துவம் மற்றும் கம்பீரம் மற்றும் அவனது கருணை மற்றும் பரிவைக் கண்டு எல்லையற்ற உத்வேகம் உருவாகிவிட்டது. மேலும் என்னையும் அறியாமல் கண்ணீர் வந்து விட்டது.

( தத்கிரா, பக்கம் 685 - 686)

அன்பிற்குரிய நண்பர்களே! இந்த அழகிய சம்பவத்தை சற்று சீர்தூக்கிப் பாருங்கள்! இறைவனின் ஓர் அடியார் அவனது மார்க்கத்திற்காக நீரிலிருந்து வெளியேற்றப்பட்ட மீனைப் போன்று துடித்துக் கொண்டிருந்தார். அப்போது அல்லாஹ் எவ்வாறு அவருடன் நடந்து கொண்டான் என்று பாருங்கள்! அவரது துஆவை செவிமடுத்தான். மேலும் அத்துடன் எச்சரிக்கையும் செய்தான். இது இறைவனுடன் அன்னாருக்கு இருந்த தொடர்பின் வெளிப்பாட்டிற்கு ஓர் அழகிய காட்சியாகும். இது இஸ்லாத்தின் தப்லீஃக்கில் அன்னாருக்கு இருந்த உணர்வு மற்றும் அல்லாஹ்வின் மீதான நேசத்தின் வெளிப்பாட்டிற்கான ஓர் அழகிய படிப்பினையாகும். அல்ஹம்துலில்லாஹ்! இது வரை மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இந்த எழுத்துக்களின் மூலமாக லட்சக்கணக்கான நற்பேறு பெற்ற ஆன்மாக்கள் பயனடைந்தனர். மேலும், அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணையக் கூடியவர்களில் முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் மற்றும் ஏனைய மார்க்கத்தைச் சேர்ந்த மக்களும் அடங்குவர். இந்த நூல்களின் பயன்கள் கியாமத் வரை நிலை பெற்றிருக்கும்! இன்ஷா அல்லாஹ்!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உயர்தரமான எதிர்பார்ப்புகளை இந்த சம்பவத்திலிருந்து சிறந்த முறையில் அனுமானித்துக் கொள்ள முடியும். ஹஸ்ரத் முஃப்தீ முஹம்மது ஸாதிக் ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை மதிப்பிற்குரிய அஹ்ஸன் அம்ரூஹி ஸாஹிப் அவர்களிடமிருந்து அறிவிப்பு செய்கின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்

ஹஸ்ரத் முஃப்தீ முஹம்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை ஹுஸூர் (அலை) அவர்களின் அறையில் கதவு தட்டப்பட்டது. ஹுஸூர் (அலை) அவர்கள் தமது மும்முரமான பணியின்



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

காரணமாக அந்நேரத்தில் அன்னாருடன் இருந்த முஃப்தீ முஹம்மது ஸாதிக் ஸாஹிப் (ரலி) அவர்களிடம் வெளியே சென்று யார் என்று பாருங்கள்! என்று கூறினார்கள். முஃப்தீ ஸாஹிப் வெளியே சென்றார்கள். மேலும், சென்று வந்து, மவ்லவி முஹம்மது ஹஸன் ஸாஹிப் அவர்கள் இதனை கூறுவதற்காக வந்துள்ளார்கள். அதாவது இன்ன மவ்லவியுடன் அன்னாருக்கு விவாதம் நடந்தது. மேலும் அதில் அன்னார் அவரை தோற்கடித்து விட்டார்கள்.

அதற்கு, ஹுஸுர் (அலை) கூறினார்கள்:அவர் இவ்வளவு கடுமையாக கதவை தட்டியதை வைத்து ஐரோப்பாவே முஸ்லிம் ஆகிவிட்டதோ! என்று நான் கருதினேன். மேலும் அவரோ இந்த செய்தியைக் கொண்டு வந்துள்ளார்.

கண்ணியத்திற்குரியோர்களே! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் செய்த இந்த எழுதுகோல் ஜிஹாது மற்றும் இஸ்லாத்தை தற்காக்கும் பணியானது ஜமாஅத் மக்களுக்கு மட்டும் ஆன்மிக வாழ்வளிக்கவில்லை மாறாக, அந்நியர்களிடத்திலும் இஸ்லாத்தின் புதிய ஆன்மாவை ஊதுகின்ற பணியை செய்தது.

கண்ணியத்திற்குரியவர்களே! அல்லாஹ்வின் நபிமார்கள் விண்ணுலக அரசாட்சியின் பிரதிநிதிகளாக இருக்கின்றனர். மேலும் அவர்களுக்கு பூவுலக அரசாட்சியுடன் எந்த தொடர்பும் இருப்பதில்லை. எனவே இந்த அழியக் கூடிய உலகின் கண்ணியம் மற்றும் பெருமிதத்தற்கு பகரமாக அந்த உண்மையான படைப்பாளன் மற்றும் எஜமானனின் நெருக்கத்தில் தங்களுக்கு இடம் கிடைக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். எனவே அவர்கள் அந்த உலகியல் மன்னர்களுக்கு உண்மையின் தூதுச் செய்தியை எட்ட வைத்து தங்களின் கடமைகளை ஆற்றி இளைப்பாறிக் கொள்கின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உலகியல் மன்னர்களுக்கும் அவர்களின் அரசாட்சிக்கும் வாழ்த்துகள்; எமக்கு அவர்களின் அரசாங்கம் மற்றும் செல்வத்தைக் குறித்து எந்த நோக்கமும் இல்லை. எமக்கு விண்ணுலக அரசாட்சியே போதுமானதாகும். ஆயினும் நல்லெண்ணத்துடனும் உண்மையான நல்விருப்பத்துடனும் மன்னர்களுக்கும் விண்ணின் தூதுச் செய்தியை எட்ட வைப்பது அவசியமாகும். ( தஹ்ஃபா கைஸரிய்யா, ரூஹானீ கஸாயின், தொகுதி 12, பக்கம் 265)

தற்போது நான் எனது சொற்பொழிவின் இரண்டாவது பகுதியான ஹுஸுர் அன்வர் (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கு வழங்கிய அறிவுரைகள் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பொறுப்புகள் என்ற தலைப்பின் பக்கம் வருகின்றேன்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

தப்லீஃக் என்பது ஒன்றும் எளிய பணி கிடையாது. இன்னும் கூறப்போனால் இது ஒரு கடினமான பணியாகும். ஒரு மாளிகையை கட்டுவது என்பது எளிதாகும். ஆனால், ஒரு நபரின் உள்ளத்தை மாற்றிவிடுவது எளிதல்ல. ஏனெனில், உகந்த திட்டமும், சான்றுகளும் இன்றி எவருடைய உள்ளத்தையும் மாற்றிவிட முடியாது. (குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 6, பக்கம் 125)

நமக்கு முன்பு இருந்த மக்கள் வாளின் நிழலில் (அதாவது போர்ச் சூழலிலும்) கூட தப்லீஃகில் சோம்பலாக இருந்தது கிடையாது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் முஸ்லிம்களின் நிலை இவ்வாறாக இருந்தது. அதாவது அவர்கள் எல்லா புறமிருந்தும் எதிரிகளால் சூழப்பட்டிருந்தார்கள். கிஸ்தன்தனீயாவில் கிறிஸ்தவர்களின் ஆட்சி இருந்தது. இவர்கள் பாதி உலகத்தின் மீது ஆதிக்கம் செலுத்தியிருந்தனர்.மற்றொரு பக்கம் ஈரானில் இருந்த அரசாங்கத்திற்கும் பாதி உலகத்தின மீது ஆதிக்கம் இருந்தது. அந்நேரத்தில் எல்லா புறமிருந்தும் முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால், முஸ்லிம்கள் வாள்களை எதிர்கொள்வதற்கு அஞ்சியது கிடையாது. அவ்வாறிருக்கும் போது இன்று நாம் எதிரியின் நாவிற்கும் அவனுடைய பணத்திற்கும் அஞ்சலமா? எனவே நாம் அதற்காக தயாராக இருக்க வேண்டும். மேலும், எந்த தியாகத்திற்கு தேவை இருக்குமோ அவை அனைத்திற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும். (குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 8, பக்கம் 47 - 48)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு அறிவுரை செய்தவாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நமக்கு வழங்கியுள்ள அந்த சான்றுகளின் மூலமாகவும், ஆன்மிக கருவூலங்களிலிருந்து பயன்பெற்றவாறும் நமது தப்லீக் முயற்சிகளை துரிதப்படுத்துவது அவசியமாகும். அதற்காக செயல் முன்மாதிரியின் பக்கமும், அறிவு மற்றும் ஆன்மிக முன்னேற்றத்தை நோக்கியும் முன்னேறுவது அவசியமாகும். இறையச்சத்தில் முன்னேற்றம் அவசியமாகும்.ஏனெனில், நமது ஆன்மிக முன்னேற்றம் ஏற்படாத வரை நமது தப்லீஃக் முயற்சிகளிலும் பரக்கத் ஏற்பட முடியாது. எனவே இறைவன் பால் அழைப்பவராக ஒருவர் ஆகுவதற்கு இந்த விஷயம் அவசியமாகும். மேலும் இது இறைவன் பால் மக்களை அழைப்பவர் மட்டுமே நினைவில் கொள்ள வேண்டிய விஷயம் கிடையாது. மாறாக ஒவ்வொரு அஹ்மதியும் அவர் செயல்மிக்கவராக தஃப்லீக் செய்தாலும் சரி; இல்லையென்றாலும் சரி; இன்ன நபர் அஹ்மதி ஆவார் என்று உலகம் அறிந்திருந்தால் ; இன்ன நபர் அஹ்மதி ஆவார் என்பதை சமூகமும், சூழலும் அறிந்திருந்தால் பின்னர் அந்த அஹ்மதி நினைவிற் கொள்ளட்டும்; அவர் அஹ்மதி என்ற சொல்லால் அழைக்கப்படுகின்றார். அவர் தப்லீஃக் செய்யவே இல்லை என்றாலும் அப்போதும் அவர் அஹ்மதியாக இருப்பது அவரை இறைவன் பால் அழைக்கக்கூடியவராக அமைதியாக ஆக்கி விடுகின்றது.

தன்னை அஹ்மதி என்று கூறிக் கொள்ளும் ஒவ்வோர் அஹ்மதியின் மீதும்; தன்னை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடன் இணைத்துக் கொள்ளும் ஒவ்வொரு அஹ்மதியின் மீதும் இந்த விஷயம் கடமையாகும். அதாவது அவர் மீது அனைவரின் பார்வையும் இருக்கின்றது என்பதை கருத்தில் கொண்டு அவர் தமது செயல்களை சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். ஒருவருக்கு இறைவன் பால் மக்களை அழைக்கும் பணியில் செயல் மிக்கவராக இருக்கும் அளவிற்கு ஒருவரின் மார்க்க ஞானம் இல்லை என்றாலும் கூட அப்போதும் அவரது ஒவ்வொரு செயலும், கூற்றும் பிறரின் கவனத்தை ஈர்ப்பதற்கு காரணியாக ஆகிவிடுகின்றது. அவரிடத்தில் நற்செயல்கள் இருந்தால் பின்னர் மக்கள் அவரின் நன்மையினால் தாக்கத்திற்கு ஆளாகி அருகில் வந்து விடுவர். உள்ளத்தை ஈர்ப்பது இறைவனின் பணியாகும். மேலும் தப்லீஃக் செய்வது நபிமார்களுக்கு மட்டுமின்றி இறை ஜமாஅத்துகளின் உறுப்பினர்களின் பணியுமாகும்.

(குத்பா ஜுமுஆ, ஏப்ரல் 9,2010, அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், ஏப்ரல் 30, 2010, பக்கம் 5 -7)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஓர் அறிவுரையுடன் நான் எனது சொற்பொழிவை நிறைவு செய்கிறேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தற்போது காலம் குறுகியதாக இருக்கின்றது. நான் மீண்டும், மீண்டும் அறிவுரை செய்கின்றேன். தற்போது 18,19 வயது தான் ஆகின்றது; இன்னும் நிறைய காலம் மீதமிருக்கின்றது என்று எந்தவோர் இளைஞரும் நம்பிக்கை கொள்ள வேண்டும். உடல் ஆரோக்கியம் கொண்டவர் தமது உடல் ஆரோக்கியத்தின் மீது பெருமிதம் கொள்ள வேண்டாம். இதே போன்று சிறப்பான நிலையில் இருப்பவர் தமது செழிப்பின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டாம். காலம் புரட்சியின் கீழ் உள்ளது. இது இறுதிக் காலம் ஆகும். அல்லாஹ் உண்மையாளரையும், பொய்யரையும் சோதிக்கின்றான். தற்போது உண்மையையும், விசுவாசத்தையும் வெளிப்படுத்துவதற்கான காலமாகும். மேலும் இறுதி வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த நேரம் மீண்டும் உங்கள் கையில் கிடைக்காது. இது எந்தவொரு காலம் என்றால், அனைத்து நபிமார்களின் முன்னறிவிப்பும் இங்கு வந்து முற்றுப் பெற்று விடுகின்றது. எனவே மனித குலம் உண்மை மற்றும் சேவையை வெளிப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட இறுதி வாய்ப்பு இதுவாகும். இதற்குப் பிறகு வேறு எந்த வாய்ப்பும் கிடைக்காது. இந்த சந்தர்ப்பத்தை தவற விட்டுவிடுபவர் மிகவும் பேறிழந்தவர் ஆவார். வெறும் நாவினால் பைஅத் உடன்படிக்கையை ஒப்புக் கொள்வது ஒன்றுமற்றதாகும். மாறாக, முயற்சி செய்யுங்கள்; மேலும் வல்ல அல்லாஹ் உங்களை உண்மையாளராக ஆக்கி விட வேண்டும் என்று நீங்கள் துஆ செய்யுங்கள். இதில் கவனமின்மையுடனும், சோம்பலுடனும் செயல்படாதீர்கள்.மாறாக சுறுசுறுப்பாகி விடுங்கள். மேலும், நான் உங்கள் முன் எடுத்து வைத்துள்ள போதனையின்படி செயலாற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும், நான் முன் வைத்துள்ள வழியில் நடந்து செல்லுங்கள்.

(மல்ஃபூஸாத், தொகுதி 6, பக்கம் 163 - 264,1984-ம் ஆண்டு பதிப்பு)

தமிழாக்கம்
மவ்லவி
A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

# ஜுமுஆ பேருரை

**கரத் படையெடுப்பு & ஹஸ்ரத் அபான் பின் ஸயீத் (ரலி) படையெடுப்பு மற்றும் ஃஹைபர் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**

ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான், என் தாய், தந்தையர் தங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக! என் மீது ஓர் அம்பு பட்டது. தங்களுக்கு கண்ணியம் வழங்கியவன் மீது ஆணையாக! நான் அந்த அம்பை எடுத்து விட்டதாக நினைத்தேன் என்று கூறினேன். பெருமானார் (ஸல்) அவர்கள், அபூ கத்தாதாவே! என் அருகில் வா! என்று கூறினார்கள்.

நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அருகில் சென்றேன். பெருமானார் (ஸல்) அவர்கள் மென்மையாக அம்பை எடுத்து விட்டார்கள். மேலும், தமது அருளுக்குரிய உமிழ்நீரை வைத்தார்கள். பிறகு, தமது கையை அதன் மீது வைத்தார்கள்.

ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பெருமானார் (ஸல்0 அவர்களுக்கு நபித்துவம் வழங்கியவன் மீது ஆணையாக! எனக்கு எந்த அடியும் படாதது போன்றும், காயமும் ஏற்படாதது போன்றும் தோன்றியது

ஃஹைபர் போருக்காகப் புறப்படுவதற்கு முன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்பான் பின் ஸயீது (ரலி) அவர்களின் தலைமையில் நஜ்தை நோக்கி ஒரு படையை அனுப்பி வைத்தார்கள். நஜ்து ஒரு பாதி பாலைவனப்பகுதியாகும்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 31 ஜனவரி 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஸுல்ஹ் மாதம் 31 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

சென்ற குத்பாவில் ஸீ கரத் போர் பற்றி கூறப்பட்டு வந்தது. அது குறித்து இவ்வாறு கூறப்பட்டிருந்தது; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது இந்தப் போருக்காக செல்வதற்கு முன்பு ஸஹாபிகள் சிலரை எதிரிகள் பக்கம் அனுப்பி வைத்திருந்தார்கள். பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுக்குப் பின்னால் தமது படையை அழைத்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள்.

இது தொடர்பாக மேற்கொண்டு இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஸஹாபா பெருமக்களும் வந்தபோது, எதிரிகளின் படையினர் அவர்களைப் பார்த்ததும் ஓடிப் போய் விட்டனர். முஸ்லிம்கள் எதிரிகள் முகாமிட்டிருந்த இடத்தை அடைந்தபோது, ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்களின் குதிரை அங்கு இருந்தது. அதன் கால்கள் துண்டிக்கப்பட்டிருந்தன. ஸஹாபி ஒருவர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, அபூ கத்தாதா (ரலி) அவர்களின் குதிரைக்கோ கால்கள் துண்டிக்கப்பட்டுள்ளனவே என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதற்கு அருகில் நின்றார்கள். உனக்கு நன்மை உண்டாகட்டும். போரில் உனக்கு எவ்வளவு எதிரிகள் இருக்கிறார்கள்? என்று இரண்டு முறை கூறினார்கள். பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் ஸஹாபிகளும் முன்னால் சென்று விட்டார்கள். ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்களும் மஸ்அதாவும் மல்யுத்தம் செய்த இடத்தை அடைந்தார்கள்.

இது பற்றி கடந்த குத்பாவில் கூறப்பட்டது.

அப்போது அவர்கள் ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்கள் போர்வையில் சுற்றப்பட்டுள்ளார்கள் என்று நினைத்தார்கள். ஸஹாபி ஒருவர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அபூ கத்தாதா (ரலி) ஷஹீது ஆகிவிட்டதாகத் தெரிகிறது என்று கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அல்லாஹ் அபூ கத்தாதா (ரலி) மீது கருணை புரிவானாக! எனக்கு கண்ணியம் வழங்கியவன் மீது ஆணையாக! அபூ கத்தாதாவோ எதிரிகளுக்குப் பின்னால் (விரட்டிச்) சென்று கொண்டிருக்கிறார். மேலும், புகழ் பாடிக் கொண்டிருக்கிறார் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் குழு படை எனது குதிரையை அதன் கால்கள் துண்டிக்கப்பட்டிருப்பதைப் பார்த்ததும், கொல்லப்பட்டவன் எனது போர்வையில் சுற்றப்பட்டிருப்பதைப் பார்த்ததும் அவர்கள் நான் ஷஹீது ஆகி விட்டேன் என்று கருதினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் விரைவாக முன்னால் சென்றார்கள். அவர்கள் போர்வையை விலக்கியதும், மஸ்அதாவின் முகத்தைக் கண்டார்கள். மேலும், அல்லாஹு அக்பர்! அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் உண்மையைக் கூறினார்கள்; அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது மஸ்அதா என்று அவர்கள் இருவரும் கூறினார்கள். இதனால் ஸஹாபிகளும் தக்பீர் கூறினர்.

பிறகு, சிறிது நேரத்திற்குப் பிறகே ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்கள் ஒட்டகங்களை ஓட்டியவாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான சமூகத்திற்கு வந்து விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அபூ கத்தாதாவே உமது முகம் வெற்றி பெற்று விட்டது. அபூ கத்தாதா குதிரை வீரர்களின் தலைவர் ஆவார். அபூ கத்தாதாவே அல்லாஹ் உம்மிடம் பரக்கத்தை வைத்து விடுவானாக என்று கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உம் சந்ததிகள் மற்றும் சந்ததிகளின் சந்ததிகளில் பரக்கத்தை வைத்து விடுவானாக.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூ கத்தாதாவே! இது உமது முகத்தில் என்னாயிற்று? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான், என் தாய், தந்தையர் தங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக! என் மீது ஓர் அம்பு பட்டது. தங்களுக்கு கண்ணியம் வழங்கியவன் மீது ஆணையாக! நான் அந்த அம்பை எடுத்து விட்டதாக நினைத்தேன் என்று கூறினேன். பெருமானார் (ஸல்) அவர்கள், அபூ கத்தாதாவே! என் அருகில் வா! என்று கூறினார்கள்.

நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அருகில் சென்றேன். பெருமானார் (ஸல்) அவர்கள் மென்மையாக அம்பை எடுத்து விட்டார்கள். மேலும், தமது அருளுக்குரிய உமிழ்நீரை வைத்தார்கள். பிறகு, தமது கையை அதன் மீது வைத்தார்கள்.

ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பெருமானார் (ஸல்0 அவர்களுக்கு நபித்துவம் வழங்கியவன் மீது ஆணையாக! எனக்கு எந்த அடியும் படாதது போன்றும், காயமும் ஏற்படாதது போன்றும் தோன்றியது.

அம்பையோ ஹஸ்ரத் கத்தாதா (ரலி) அவர்கள் சுயமே வெளியே எடுத்தார்கள் என்று கடந்த முறை கூறப்பட்டது.

ஆனால், அதன் முனை ஏதும்

உள்ளேயே இருந்து விட்டிருக்கலாம். அதை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வெளியே எடுத்தார்கள். அதன் தடயம் தென்பட்டுக் கொண்டிருந்தது. ஓர் அறிவிப்பில் இருக்கிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபூ கத்தாதா (ரலி) அவர்களைப் பார்த்ததும், அல்லாஹ்வே, இவரது முடியிலும், தோலிலும் பரக்கத் வைத்து விடுவாயாக என்று கூறினார்கள். மேலும் உமது முகம் வெற்றி பெற்று விட்டது என்றும் கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களது முகம் வெற்றி பெற்று விட்டது என்று பணிவுடன் கூறினேன்.

பிறகு, எழுபது வயதில் ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்கள் மரணமடைந்தபோது, அப்பொழுதும் அவர்கள் முகத்தால் 15 வயது உள்ளவர் போன்று தெரிந்தார்கள் என்று கூறுகிறார்கள். அதாவது, இளமை முகமாகத் தென்பட்டது.

இந்தப் போரில் ஹஸ்ரத் ஸலமா (ரலி) அவர்கள் ஸூ கர்த் எனும் இடத்தில் எதிரியுடன் மோதியது பற்றிய குறிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் ஸலமா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எதிரிகளுக்குப் பின்னால் வேகமாக சென்று கொண்டிருந்தேன். எதுவரை என்றால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கண்ணியம் வழங்கியவன் மீது ஆணையாக, எனக்கு எனக்குப் பின்னால் ஸஹாபா தென்படவில்லை. அவர்களது சுவடு கூட தென்படவில்லை. எதிரிகள் சூரியன் மறைவதற்கு முன் ஒரு பள்ளத்தாக்கை அடைந்து விட்டனர். அங்கு ஸூ கரத் என்ற பெயரில் ஒரு நீரூற்று இருந்தது. அவர்கள் அங்கிருந்து தண்ணீர் அருந்த நினைத்தனர். அப்பொழுது நான் அவர்களுக்குப் பின்னால்தான் இருக்கிறேன் என்பதை அவர்கள் பார்த்தனர். எனவே அவர்கள் அதிலிருந்து விலகி விட்டனர்.

சூரியன் மறைந்து விட்டிருந்தது. நான் ஒருவனைப் பார்த்தபோது அவன் மீது அம்பு எய்தேன். நான் காலையிலும் அவன் மீது அம்பு எய்திருந்தேன். இப்பொழுது அவன் மீது இரண்டாவது அம்பை எய்தேன். இரண்டு அம்புகளும் அவன் மீது பட்டன. அவர்கள் (எல்லாரும்) இரண்டு குதிரைகளை விட்டு விட்டு ஓடிவிட்டனர். எனவே நான் அவை இரண்டையும் பிடித்து விட்டேன். அதற்குள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வருகை தந்து விட்டார்கள். பிறகு அவற்றை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஓட்டிக் கொண்டு வந்தேன்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸூ கரத் எனும் இடத்தை அடைந்தது பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ஸலமா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இஷா நேரத்தில் வந்து சேர்ந்தார்கள். நான் எதிரிகளை தடுத்து நிறுத்திய அந்த நீரூற்றில் முகாமிட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஒட்டகங்களையும்,நான் எதிரிகளிடமிருந்து பறித்துக் கொண்டிருந்த அனைத்தையும் ஆதிக்கத்தில் எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் எதிரிகளிடமிருந்து பறிக்கப்பட்ட ஒட்டகங்களிலிருந்து ஓர் ஒட்டகத்தை அறுத்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக அதன் ஈரலையும், கூம்பையும் நெருப்பில் போட்டார்கள். ஹஸ்ரத் ஸஅது பின் உபாதா (ரலி) அவர்கள் பேரீத்தம் பழங்களை சுமந்திருக்கும் 10 ஒட்டகங்களை அனுப்பினார்கள். அது அவர்களுக்கு ஸூ கரத் எனும் இடத்தில் கிடைத்தது.

ஹஸ்ரத் ஸலமா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான், எதிரிகளை அவர்கள் தாகமாக இருக்கும் போது, தண்ணீரை விட்டும் தடுத்திருந்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள் என்னைப் போராளிகள் 100 பேருடன் அனுப்பி வையுங்கள்; நான் அவர்களைத் துரத்திச் சென்று அவர்களின் எல்லா ஒற்றர்களையும் கூட கொன்று விடுகிறேன் என்று பணிவுடன் கூறினேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் புன்சிரிக்கத் துவங்கினார்கள். எதுவரை என்றால் நெருப்பின் வெளிச்சத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய பற்கள் தென்பட ஆரம்பித்தன.

அன்னார் (ஸல்), ஸலமாவே! உம்மால் இப்படி செய்ய முடியுமா? என்று கேட்டார்கள் அதற்கு நான், தங்களுக்கு கண்ணியம் வழங்கியவன் மீது ஆணையாக, ஆம் முடியும் என்று கூறினேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள்,

مَلَكْتَ فَأَسْجِحْ

என்று கூறினார்கள்.

பொருள்: நீர் அவர்கள் மீது ஆதிக்கம் பெற்று விட்டால், மென்மையாக நடந்து கொள்வீராக!

இது அரேபியாவின் பழமொழிகளில் ஒரு பழமொழியாகும். அதன் பொருள், மென்மையாக நடந்து கொண்டு கடுமை காட்டாமல் இருப்பதே சிறந்த மன்னிப்பாகும் என்பதாகும். அவர்கள் சென்று விட்டார்கள் என்றால், சென்று விட்டார்கள். இப்பொழுது பின்தொடர்வதற்கான தேவையில்லை.

இந்தப் போரின் நிகழ்வுகளில் ஹஸ்ரத் ஸலமா (ரலி) அவர்கள் ஒரு நிகழ்வை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்: காலை நேரத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இன்றைய சிறந்த குதிரை வீரர் அபூ கத்தாதா ஆவார். சிறந்த காலாற்படை வீரர் ஸலமா பின் உக்பா ஆவார். ஹஸ்ரத் ஸலமா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் எனக்கு சவாரி மற்றும் காலான் ஆகிய இரண்டிலும் பங்களித்தார்கள். பிறகு என்னைத் தமது ஒட்டகத்தில் தமக்குப் பின்னால் அமர்த்திக் கொண்டார்கள்.

இந்தப் பயணத்தில் ஹஸ்ரத் ஸலமா (ரலி) அவர்களின் மற்றோர் அறிவிப்பு பற்றியும் குறிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் ஸலமா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: மதீனாவுக்குத் திரும்பி வரும்போது, நாங்கள் மதீனாவுக்கு அருகில் வந்து சேர்ந்த போது, வேகமாக ஓடக் கூடிய அன்ஸாரி ஸஹாபி ஒருவர் அறிவிப்பு செய்து, என்னுடன் ஓட்டப்பந்தயத்தில் போட்டி போடுபவர் எவரும் உண்டா? என்று கேட்டார். அதாவது தூய மதீனா நகரம் வரை என்னுடன் ஓடுபவர் எவரும் இருக்கிறாரா? எனக் கேட்டார். அவர் இதே சொற்களை மீண்டும், மீண்டும் கூறினார்.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் அன்னாரது ஒட்டகத்தில் அமர்ந்திருந்தேன். நான் அந்த அன்ஸாரி ஸஹாபியிடம், நீர் எந்த கண்ணியத்திற்குரியவரையும் மதிப்பதில்லையா? ; இப்படி அறிவிப்பு செய்து கொண்டு இருக்கிறீரே? உமக்கு கண்ணியமான நபர் எவரைப் பற்றியும் அச்சமில்லையா? என்று கேட்டேன். அதற்கு அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைத் தவிர எனக்கு யாரிடமும் அச்சம் இல்லை என்று கூறினார். அப்பொழுது நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என் தாய் தந்தையர் தங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக! எனக்கு அந்த மனிதனுடன் ஓட்டப்பந்தயம் ஓடுவதற்கு அனுமதி தாருங்கள் என்று பணிவுடன் கேட்டுக் கொண்டேன்.

அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள், சரி! நீர் விரும்பினால் ஓடுங்கள் என்று கூறினார்கள். நான் அந்த நபரிடம் போகலாம் என்று கூறினேன். பிறகு கூறினார்கள்: நான் எனது கால்களைத் திருப்பி, தாவி குதித்து ஓடத் துவங்கினேன். நான் ஒன்று அல்லது இரண்டு (சிறு) பள்ளத்தாக்குகள் அவரை விடப் பின்னால் ஓடினேன். அதாவது, அவர் முன்னால் இருந்தார். நான் பின்னால் இருந்தேன். எனது ஆற்றலை மிச்சப்படுத்திக் கொண்டிருந்தேன். பிறகு நான் வேகம் எடுத்தேன். அவரை அடைந்து விட்டேன். நான் அவரது தோளுக்கு நடுவில் கையால் தட்டினேன். மேலும் அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உம்மை முந்தி விட்டேன் என்று கூறினேன். அவர் புன்சிரித்தார். நானும் அப்படிதான் நினைக்கிறேன் என்று கூறினார். இவ்வாறு நான் அந்த ஓட்டத்தில் முந்திச் சென்று விட்டேன். எதுவரை என்றால், நாங்கள் மதீனாவை வந்தடைந்து விட்டோம்.

இந்தப் போருக்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எவ்வளவு காலம் வெளியே இருந்தார்கள் என்பதன் விளக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் புதன்கிழமை அன்று காலை புறப்பட்டார்கள். அன்னார் எதிரிகளைப் பற்றிய செய்தி எதுவும் தெரியும் பொருட்டு ஓர் இரவும், ஒரு பகலும் ஸூ கரத் எனும் இடத்தில் தங்கினார்கள். பிறகு, திங்கட்கிழமை அன்று மதீனாவுக்குத் திரும்பி வந்தார்கள். இவ்வாறு அன்னார் ஐந்து இரவுகள் மதீனாவை விட்டு வெளியே இருந்தார்கள்.

இந்தப் போரில் ஷஹீதான ஸஹாபிகளின் விபரம் பின்வருமாறு: முஸ்லிம்களில் ஹஸ்ரத் முஹ்ரிஸ் பின் நஸ்லா ஷஹீது ஆனார்கள். இப்னு ஹிஷாம் அவர்களின் கூற்றுப்படி இப்னு வக்காஸ் பின் முஜஸ்ஸஸ் அவர்களும் ஷஹீது ஆனார்கள். இவர்கள் மட்டுமின்றி, ஹஸ்ரத் அபூ ஸர் (ரலி) அவர்களின் மகன் போருக்கு முன்னாலேயே ஒட்டகங்களின் கொட்டகையில் ஷஹீது ஆக்கப்பட்டு விட்டார்கள்.

நிராகரிப்பாளர்களைப் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: காஃபிர்களில் அப்துர் ரஹ்மான் பின் உயைனா, ஹுபைப் பின் உயைனா, மஸ்அதா பின் ஹகமா, ஃபஸாரீ அவ்பார் மற்றும் அவன் மகன் அம்ர் ஆகியோர் கொல்லப்பட்டார்கள்.

ஹஸ்ரத் அபூ ஸர் (ரலி) அவர்களின் மனைவியை எதிரிகள் சிறைபிடித்துச்

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

சென்றிருந்தார்கள். இதைப் பற்றி முன்னர் கூறப்பட்டது. தாக்குதல் தொடுத்தவர்கள் ஹஸ்ரத் அபூ ஸர் (ரலி) அவர்களின் மனைவியைப் பிடித்து உடன் அழைத்துச் சென்று விட்டனர். அவர்கள் அவரைக் கட்டி வைத்திருந்தார்கள். அந்த மக்கள் இரவில் தங்களுடைய கால்நடைகளைத் தங்களது வீட்டிற்கு முன்பு வைப்பார்கள். ஓர் இரவு அந்தப் பெண் கட்டப்பட்டதிலிருந்து விடுபட்டு விட்டார். பக்கத்திலேயே கட்டி வைக்கப்பட்டிருந்த ஒட்டகங்களிடம் அவர் சென்றார். அவர் எந்தவோர் ஒட்டகத்தின் பக்கம் சென்றாலும் அது உறுமும். அவர் அதை விட்டுவிடுவார். அது கூப்பாடு போடும். எதுவரை என்றால், அஸ்பா என்ற ஒட்டகம் - இது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒட்டகம் ஆகும். இதை எதிரிகள் சூறையாடி உடன் எடுத்துக் கொண்டு வந்திருந்தார்கள். அதற்கு அருகில் சென்றார். அது உறுமவில்லை. எதுவும் சத்தம் போடவில்லை. மிகவும் அமைதியாக இருந்தது. அது மேம்படுத்தப்பட்ட ஒட்டகமாக இருந்தது. அந்தப் பெண் அதன் மீது ஏறிக் கொண்டார். அதை ஓட்டினார். அது புறப்பட்டு விட்டது.

அந்த மக்களுக்கு அந்தப் பெண் தப்பித்த செய்தி கிடைத்து விட்டது. அவர்கள் அவரைப் பிடிக்க நினைத்தனர். ஆனால்,அவர் பிடிபடவில்லை.

அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: அந்தப் பெண் அல்லாஹ்விடம், அல்லாஹ் அந்த ஒட்டகத்தின் மூலமாகத் தன்னைக் காப்பாற்றி விட்டால், தான் கண்டிப்பாக அதை அறுத்து பலியிடுவதாக வேண்டிக் கொண்டார். அவர் மதீனாவுக்கு வந்ததும், மக்கள் பார்த்தபோது, இதுவோ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒட்டகம் அஸ்பா ஆகும் என்று கூறினார்கள். அந்தப் பெண் அல்லாஹ் ஒட்டகத்தின் மூலமாகத் தன்னைக் காப்பாற்றினால் தான் அதைக் குர்பானி கொடுப்பதாக வேண்டியுள்ளதாகக் கூறினார். இந்த விவாவத்தினால் மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான அவையில் ஆஜரானார்கள். அன்னாரிடம் இந்த விஷயம் அனைத்தையும் கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஸுப்ஹானல்லாஹ், இந்தப் பெண் அந்த ஒட்டகத்துக்கு எவ்வளவு மோசமான கைமாறு செய்திருக்கிறாள். இது அவளைக் காப்பாற்றி கொண்டு வந்துள்ளது; ஆனால் இவள் அதற்கு இந்தக் கைமாறு செய்கிறாள். அதாவது அல்லாஹ் இந்த ஒட்டகத்தின் மூலமாக அவளைக் காப்பாற்றினால் அவள் அதை அறுத்து விடுவாள்; இதுவோ நல்ல கைமாறு அல்ல.

பிறகு கூறினார்கள்: இறைவனுக்குக் கட்டுப்படாமையான எந்த வேண்டுதலையும் நிறைவேற்றக் கூடாது. மேலும் எதற்கு அடியார் உரிமையாளர் இல்லையோ அதில் வேண்டிக் கொள்வது ஆகுமானதல்ல. நீ அதற்கு உரிமையாளரே கிடையாது. பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இது எனது ஒட்டகம் ஆகும். நீ அல்லாஹ்வின் பெயரைக் கூறி நன்மையுடனும், இரக்கத்துடனும் வீட்டுக்கு செல்.

இப்பொழுது ஒரு படையெடுப்புப் பற்றி கூறுவேன். இது நஜ்தை நோக்கி ஹஸ்ரத் அப்பான் பின் ஸயீத் (ரலி) அவர்களது படையெடுப்பு ஆகும். இந்தப் படையெடுப்பு ஹிஜ்ரீ 7-ம் ஆண்டு முஹர்ரம் மாதம் நடைபெற்றது. ஆனால், ஓர் அறிவிப்பில் இந்தப் படையெடுப்பின் தேதி ஹிஜ்ரீ 7-ம் ஆண்டு ஜமாதிஸ் ஸானீயில் நிகழ்ந்ததாக் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களும் இந்தப் படையெடுப்பை ஹிஜ்ரீ 7-ம் ஆண்டு முஹர்ரம் மாதத்தில் நிகழ்ந்ததாக எழுதியுள்ளார்கள்.


இந்தப் படையெடுப்பின் தேதி ஹிஜ்ரீ 7-ம் ஆண்டு முஹர்ரம் மாதம் என்பது அதிகம் ஏற்புடையதாக இருக்கிறது. ஏனெனில், அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளது: ஃகைபரை நோக்கிப் புறப்படுவதற்கு முன்பு மதீனாவில் இருந்து நஜ்தை நோக்கி ஹஸ்ரத் அப்பான் பின் ஸயீது (ரலி) அவர்களை அனுப்பினார்கள். ஃகைபரை நோக்கி புறப்பட்டது ஹிஜ்ரீ 7-ம் ஆண்டு முஹர்ரம் மாதத்தில் நடைபெற்றது.

ஹஸ்ரத் அப்பான் (ரலி) அவர்களின் அறிமுகம் இதுவாகும்; ஹஸ்ரத் அப்பான் (ரலி) அவர்களின் தந்தை குறைஷியர்களின் பெரியவர்களில் ஒருவராக இருந்தார். இவர்களின் சகோதரர்களான அம்ரும், ஃகாலிதும் முதலில் முஸ்லிமாகி விட்டார்கள். எத்தியோப்பியாவுக்கு ஹிஜ்ரத் செய்து சென்றவர்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அப்பான் அவர்கள் இணை வைப்பாளர்கள் தரப்பிலிருந்து கலந்து கொண்டிருந்தார்கள். இவர்கள் ஹுதைபியா சமரச உடன்படிக்கையின் போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு அடைக்கலம் வழங்கியிருந்தார்கள்.

அம்ரும், ஃகாலிதும் எத்தியோப்பியாவிலிருந்து திரும்பி வந்ததும், அவர்கள் அஃப்ஃபானுக்குத் தூதுச் செய்தி அனுப்பினார்கள். இது எதில் முடிந்தது என்றால், மூவரும் ஒன்றாக ஃகைபர் நாட்களில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான அவைக்கு வந்தார்கள். அப்பான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஓர் அறிவிப்பில் இருக்கிறது. ஹஸ்ரத் அப்பான் பின் ஸயீது (ரலி) அவர்கள் ஹுதைபியா சமரச உடன்படிக்கைக்கும் ஃகைபர் போருக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் இஸ்லாத்தை ஏற்றார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணத்தின்போது, அப்பான் பஹ்ரைனில் பொறுப்பாளராக இருந்தார்கள். அதற்குப் பிறகு, அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். பிறகு சிரியாவுக்குச் சென்று விட்டார்கள். ஹிஜ்ரீ 13-ம் ஆண்டு ஷஹீதானார்கள். ஓர் அறிவிப்புக்கு ஏற்ப, ஹிஜ்ரீ 27-ம் ஆண்டு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத்தில் மரணமடைந்தார்கள்.

ஃகைபர் போருக்காகப் புறப்படுவதற்கு முன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்பான் பின் ஸயீது (ரலி) அவர்களின் தலைமையில் நஜ்தை நோக்கி ஒரு படையை அனுப்பி வைத்தார்கள். நஜ்து ஒரு பாதி பாலைவனப்பகுதியாகும். ஆனால், பசுமையான பகுதியாகும். அதில் பல்வேறு தாழ்வான பகுதிகளும் மலைகளும் உள்ளன. இது தெற்கில் ஏமன் வரையும், வடக்கில் சிரியாவின் பாலைவனங்கள் வரையும் ஈராக் வரையும் சென்றடைகிறது. இதன் மேற்கில் ஹஜ்ஜாஸ் பாலைவனம் இருக்கிறது. இந்தப் பகுதி நிலப்பரப்பிலிருந்து 1200 மீ உயரமானதாகும். இந்த உயரத்தின் அடிப்படையில் இதை நஜ்து என்று அழைக்கின்றார்கள்.




ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இல்லாதபோது, மதீனாவை எதிரி கோத்திரங்களிடமிருந்து பாதுகாப்பாக வைப்பது இந்தப் படையின் நோக்கமாக இருந்தது. இந்தக் கோத்திரங்கள் எப்பொழுதும் தக்க சந்தர்ப்பம் எப்போது கிடைக்கும். மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்கலாம் என்ற சிந்தனையிலேயே இருந்து வந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸஹாபா பெருமக்களுடன் மதீனாவை விட்டு வெளியே செல்வது, மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு முற்றிலும் பொருத்தமான சந்தர்ப்பமாகக் கருதப்பட்டு வந்தது.

இப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவிலிருந்து வெளியே இருக்கிறார்கள்; மக்களும் அன்னாருடன் இருக்கிறார்கள்; படை உடன் இருக்கிறது. மதீனாவில் மிகவும் குறைவான மக்களே இருக்கிறார்கள். எனவே, நாம் தாக்குதல் தொடுத்து மதீனாவை வெற்றிக் கொண்டு விடலாம் என்று எதிரிகள் நினைத்து வந்தனர். இந்த ஆபத்தின் அடிப்படையில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எப்பொழுது எந்தவொரு போருக்காக சென்றாலும், இத்தகைய கோத்திரங்கள் பக்கமும் ஸஹாபா சிலரை அனுப்பி விடுவார்கள்.

இந்தப் படையெடுப்பை பற்றி ஸஹீஹ் புஹாரியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்பான் (ரலி) அவர்களை ஒரு படையெடுப்பில் நியமித்து மதீனாவிலிருந்து நஜ்தை நோக்கி அனுப்பினார்கள். ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, இவர்கள் ஃகைபர் வெற்றிக்குப் பிறகு, வந்து சேர்ந்தார்கள்; எனவே இவர்களுக்குப் பங்கு வழங்காதீர்கள் என்று பணிவுடன் கேட்டுக் கொண்டேன்.

அதில் அதாவது, ஃகைபரின் போர்ச் செல்வத்தில் அவர்களுக்கு எந்தப் பங்கும் இருக்கக் கூடாது. இதனால் அவர்கள் இருவரும் மாறி, மாறி பேசிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அமருவீராக என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுக்குப் பங்கு வழங்கவில்லை. ஏனெனில், இவர்கள் ஃகைபர் போரில் நேரடியாக கலந்து கொள்ளவில்லை. இதுவே காரணமாக இருக்கலாம்.

பிறகு, ஒரு போரைப் பற்றிய குறிப்பு வரலாற்றில் கிடைக்கிறது. மிகவும் பிரசித்திப் பெற்றது. அது ஃகைபர் போர் என்று அழைக்கப்படுகிறது. ஃகைபர் ஒரு பரந்து விரிந்த பச்சைப்பசேலான பகுதியாகும். அது நீரூற்றுகள் மற்றும் அதிகமான நீர்மட்டங்களால் செழித்து இருக்கிறது. அரேபியாவில் பேரீத்தம் பழங்களின் மிகப் பெரிய தோப்புகளில் ஒன்றாக கணக்கிடப்படுகிறது. இதன் வளத்தை இதை வைத்தே கணிக்கலாம்.

அதாவது, கதீபா என்ற பெயரைக் கொண்ட ஃகைபரின் ஒரு தாழ்வுப் பகுதியில் மட்டும் 40,000 பேரீத்தம் மரங்கள் இருந்தன. ஃகைபர் பகுதி மதீனாவில்

இருந்து வடக்குப் பக்கம் ஏறத்தாழ 96 மைல் தொலைவில் இருந்தது. இங்கு யூதர்கள் மிகவும் தொன்று தொட்டு வாழ்ந்து வந்தனர்.

வரலாற்று அறிவிப்புக்கு ஏற்ப ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் காலத்தில் இருந்து இங்கு இஸ்ரவேலர்களின் யூதர்கள் வாழ்ந்து வந்தனர். வரலாற்றாசிரியர்கள் சிலரது கூற்றுப்படி, பஃஹதே நஸ்ரின் காலத்தில் யூதர்கள் இங்கு குடியேறினார்கள். இன்னும் சில அறிவிப்புகளும் உள்ளன. அவற்றிலிருந்து ஃஹைபரில் தொன்று தொட்டே யூதர்கள் வாழ்ந்து வந்தார்கள் என்ற முடிவு கிடைக்கிறது. மேலும் பெரும், பெரும் கோட்டைகளைக் கட்டி இந்த மக்கள் இங்கு வாழ்ந்து வந்தார்கள். இவர்களது பார்வையில் இந்த இடத்திற்குப் பெரும் முக்கியத்துவம் இருந்தது இப்போதும் இருப்பதாகக் கூறுகிறார்கள்.

எபிரேய மொழிகளில் ஃஹைபர் என்றாலும், கோட்டை என்றுதான் பொருள். யூதர்களின் சில கோத்திரங்கள் மதீனாவிலும் இருந்தனதான்; ஆனால், ஒரு விஷயம் ஃஹைபரின் யூதர்களைத் தனிச்சிறப்புப் பெற்றவர்களாக ஆக்கிக் காட்டியது. அதாவது, இங்கிருந்த யூதர்கள் மற்ற யூதர்கள் அனைவரைக் காட்டிலும், வீரத்திலும் போரிலும் உறுதிப்பாட்டைக் காட்டுவதிலும் மிகைத்திருந்தார்கள். மற்றவர்களைக் காட்டிலும் அவர்களிடம் ஒருவர் மற்றவருடன் ஒற்றுமையும் இருந்தது. இதனால் இது அரேபிய தீபக்கற்பத்தில் ஆற்றல் மற்றும் பலத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படும் சமுதாயமாக இருந்தது. மதீனாவின் யூதர்களாட்டும்; ஃஹைபரின் யூதர்கள் ஆகட்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் குறித்தும், இஸ்லாத்தைக் குறித்தும் அவர்களுடைய சதித்திட்டங்களும் மறைவான சூழ்ச்சிகளும் கிளர்ச்சி அளவுக்கு மிகைத்திருந்தன.

காழ்ப்புணர்ச்சியிலும், உள்ளப்பகைமையிலும் அதிகரித்துக் கொண்டே சென்ற இந்த சமுதாயம் இஸ்லாத்தையும், மாநபி (ஸல்) அவர்களையும் கூட இல்லாமல் செய்வதற்கு தம்முடைய எல்லா ஆற்றல்களையும், பயன்பாட்டில் கொண்டு வருவதில் எந்தக் குறையும் விட்டு வைக்கவில்லை. ஆனால், இதற்கு எதிரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எப்பொழுதும் மதீனாவின் யூதர்களோடு மென்மையாகவே நடந்து கொண்டார்கள். அவர்களுடன் சமரச உடன்படிக்கைகளை செய்து கொண்டார்கள். அவர்கள் உடன்படிக்கையை மீறும் போது அல்லது அதற்கு மாறு செய்யும்போதெல்லாம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முதல் முயற்சி மன்னிப்பதும், கண்டும்காணாமல் இருப்பதுமாக இருந்தது. எதுவரை என்றால், அந்த மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் கொல்வதற்குப் பலமுறை முயற்சி செய்தார்கள்.

உடன்படிக்கையை மீறியவாறு மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதில் வெளிநாட்டு சக்திகளுக்கு உதவினார்கள். அதற்குப் பகரமாக தண்டனையாக அந்த யூதர்கள் அனைவருக்கும் கடுமையிலும் கடுமையான தண்டனையும் கொடுக்கப்பட்டிருந்தாலும் அது சரியாக நீதி, நியாயத்துக்கு ஏற்ப இருந்திருக்கும். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் எல்லை கடந்த மன்னிப்பு மற்றும் கருணையின் நிலை எப்படி இருந்தது? என்றால் பிறகு அவர்களுக்கு எவ்வாறு அமைதி வழங்கினார்கள் என்றால், என்னவெல்லாம் உடன் எடுத்துச் செல்ல முடியுமோ எடுத்துச் செல்லுங்கள் என்று கூறித் தான்) அவர்களை மதீனாவை விட்டு நாடு கடத்தினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நோக்கம் அடக்குமுறையாக இருந்திருந்தால், நவூதுபில்லாஹ் (அவ்வாறு கூறுவதை விட்டும் நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்) அவ்வாறு இருந்திருந்தால், மதீனாவின் யூதர்கள் மீண்டும், மீண்டும் உடன்படிக்கையை மீறியதற்கு அவர்களை ஒருபோதும் மன்னித்திருக்க மாட்டார்கள். கண்ணியத்திற்குரிய மாநபி (ஸல்) அவர்களின் நோக்கம் இரத்தம் சிந்த வைப்பதாக இருந்திருந்தால், பனூ கைனுக்கா மற்றும் பனூ நஸீர் ஆகிய கோத்திரங்களுக்கு உயிருக்கு உத்திரவாதம் வழங்கி பாதுகாப்பாக மதீனாவை விட்டு செல்ல விட்டிருக்க மாட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அழகான முறையில் நடந்து கொள்ளுதல், பெரும் கருணை புரிதல், கண்டும் காணாமல் விட்டுவிடுதல், மன்னித்தல் என அந்த மதீனத்து யூதர்களை நடத்தியதற்கு, நியாயப்படி இந்த மக்கள் ஃஹைபரில் குடியமர்ந்த பிறகு, இஸ்லாத்திற்கும், இஸ்லாத்தின் தோற்றுநர் (ஸல்) அவர்களுக்கும் சாதகமாக சமரசம், அமைதி மற்றும் சமாதான சூழலில் இருந்திருக்க வேண்டும்.

மதீனாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட பிறகு மதீனாவின் யூதர்களின் ஒரு எண்ணிக்கை ஃஹைபருக்குச் சென்று குடியமர்ந்து விட்டது. ஆனால், ஏற்கனவே மிகப் பெரிய ஒரு போர் ஆற்றலாக இருந்த ஃஹைபர் இப்பொழுது முஸ்லிம்களுக்கு எதிராக பயங்கரமான சதித் திட்டங்கள் தீட்டுவதற்கான தலைமையகம் ஆகிவிட்டது. இந்த ஃஹைபரின் யூதர்கள்தான் ஃஹைபரின் பெரும் யூதத் தலைவர்கள் இருந்த ஒரு பெரிய குழுவை அழைத்துக் கொண்டு மக்கத்து இணை வைப்பாளர்களை சந்திப்பதற்காக மக்காவுக்குச் சென்றார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய இயல்பையும், இஸ்லாத்தையும் இல்லாமல் செய்வதற்கான ஒரு திட்டம் வகுத்தார்கள். அவர்களை சம்மதிக்க வைத்த பிறகு, அக்கம்பக்கத்தின் பலதரப்பட்ட கோத்திரங்களுக்கு அவர்களது குழு சென்றது. ஒரு கோத்திரத்தை ஆயத்தம் செய்து 15 ஆயிரம் பேரைக் கொண்ட அப்போதைய வரலாற்றின் ஒரு மிகப் பெரும் படையை ஆயத்தம் செய்து மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்து விட்டது. அது இஸ்லாமிய வரலாற்றில் அஹ்ஸாப் போர் அல்லது அகழ்ப் போர் என்ற பெயரால் பிரசித்திப் பெற்றுள்ளது.

இதைப் பற்றி முன்னர் கூறப்பட்டு விட்டது. அல்லாஹ்வின் சிறப்பான உதவியும், ஆதரவும் இஸ்லாத்துடன் இல்லாமல் இருந்திருந்தால், முஸ்லிம்களோடு சேர்ந்து மதீனாவின் பெயரும், அடையாளமும் கூட இல்லாமல் போயிருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இந்த பயங்கரமான சதித் திட்டத்தின் தலைவர்களாக ஃஹைபரின் யூதர்களும் இருந்தார்கள் என்பதிலும் எந்த சந்தேகமும் இல்லை. அவர்கள் இப்பொழுது எந்நேரமும் முஸ்லிம்களை அழித்து விடுவதில் மூழ்கியிருந்தார்கள். மதீனாவில் இருந்த பனூ குறைழா கோத்திரத்தினருக்கு அவர்களது உடன்படிக்கை மீறலுக்கு முதல் முறை வழங்கப்பட்ட கடுமையான தண்டனையும் கூட ஃஹைபரின் யூதர்கள் தம்முடைய நடைமுறையில் மாற்றம் ஏற்படுத்திக் கொள்வதற்குக் காரணமாக அமைய முடியவில்லை.

எனவே இந்த உடன்படிக்கையை மீறக் கூடிய சதி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய சமுதாயத்துக்கு எதிராக நேரடியாக ஏதாவது அடியெடுத்து வைப்பது இப்பொழுது அவசியமாக இருந்தது. அப்போதுதான் பகுதிகளின் அமைதி திரும்ப முடியும். ஒவ்வொருவரும் தத்தமது இடத்தில் அமைதியாகவும், நிம்மதியாகவும் அச்சமின்றி, ஆபத்தின்றி தத்தமது மதத்திலும், நம்பிக்கையிலும் يَكُوْنَ الدِّيْنُ لِلّٰهِ என்ற வகையில் அதாவது மார்க்கம் அல்லாஹ்வுக்காக மட்டுமே ஆகிவிட வேண்டும் என்ற வகையில் அமல் செய்ய முடியும். அதாவது மார்க்கத்தில் எவ்வித பலவந்தமும் இருக்கக் கூடாது. ஏனெனில், இது அல்லாஹ்வுக்கும் அவனுடைய அடியாருக்கும் இடைப்பட்ட விவகாரமாகும்.

மண்ட்கொம்ரீ வாட் என்பவர் ஒரு பிரசித்திப் பெற்ற கிழக்கத்திய ஆய்வாளர் ஆவார். அவர் இஸ்லாத்திற்கும், இஸ்லாத்தின் தோற்றுநர் (ஸல்) அவர்களுக்கும் எதிராக நஞ்சைக் கக்குவதற்குத் தயங்க மாட்டார். அவரும் தனது நூலில் எழுதுகிறார். அதன் மொழியாக்கம் இதுவாகும்;

ஃஹைபர் மீது தாக்குதல் தொடுப்பதற்கான நேரடியான மற்றும் எளிய காரணம் என்ன இருந்தது? என்றால், ஃஹைபர் மக்கள் தங்களுடைய செல்வங்களைத் தயங்காமல் பயன்படுத்தித் தம் அண்டை அயலாரான அரேபியர்களை முஸ்லிம்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தத் தூண்டினார்கள்.

ஆக, கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் இறைவனின் கை அசைவுக்குக் கட்டுப்பட்டு ஃஹைபரை நோக்கி தாம் முந்திச் செல்ல வேண்டுமென முடிவெடுத்தார்கள் என்பதுதான் அந்தக் குறிப்பான பின்னணியாக இருந்தது.

அல்லாமா இப்னு ஸஅத் அவர்கள் எழுதியுள்ளார்கள்: ஃஹைபர் போர் ஜமாஅதில் ஊலா ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு நடைபெற்றது. ஆனால், இப்னு அக்பா மற்றும் அல்லாமா இப்னு இஸ்ஹாக் அவர்களுடைய பார்வையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் துல் ஹஜ்ஜாவில் ஹுதைபியாவிலிருந்து மதீனாவுக்குத் திரும்பி வந்தபோது, அன்னார் (ஸல்) மதீனாவில் ஏறக்குறைய 20 இரவுகள் இருந்தார்கள். பிறகு, ஃஹைபரை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்கள். இது முஹர்ரம் மாதமாக இருந்தது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களும் ஸீரத் காத்தமுன்நபிய்யீன் என்ற நூலில் எஞ்சிய தலைப்புகளில் எழுதியுள்ள குறிப்புகளில் அன்னார் இந்த ஃஹைபர் போரை ஹிஜ்ரீ 7-ஆம் ஆண்டு முஹர்ரம் மற்றும் ஸஃபர் மாதம் நிகழ்ந்த போராகக் கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹுதைபிய்யாவிலிருந்து திரும்பி வந்ததற்கு ஐந்து மாதங்களுக்குப் பிறகு மதீனாவுக்கு எதிராக சுலபமாக சூழ்ச்சி செய்ய முடிந்த, மதீனாவிலிருந்து சில பயண வழியிடைத்தடங்கள் தொலைவு மட்டுமே இருந்த ஃஹைபரிலிருந்து யூதர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என தீர்மானித்தார்கள். எனவே ஹுஸூர் (ஸல்) அவர்கள் 1600 நபித்தோழர்களுடன் கி.பி

628 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஃகைஹபரை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்கள்.

வரலாற்றாசிரியர்கள் சிலர் ஹுதைபியா சமரச உடன்படிக்கைக்கு 5 மாதத்திற்குப் பிறகு என இதன் தேதியைக் கூறுகிறார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன் எனும் நூலில் இதைத்தான் கூறியுள்ளார்கள். எனினும், வரலாற்றாசிரியர்கள் மற்றும் ஹதீஸ் தொகுப்பாளர்களில் பெரும்பான்மையினர் ஹுதைபியா சமரச உடன்படிக்கைக்கு சில நாட்களுக்குப் பிறகு முஹர்ரம் மாதத்தில் இது நிகழ்ந்ததாகக் கூறுகின்றனர். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களும் இதைப் பற்றி இவ்வாறே எழுதியுள்ளார்கள். வல்லாஹு அஃலம் (அல்லாஹ்வே நன்கறிவான்).

அடிப்படையில் ஹுதைபியா சமரச உடன்படிக்கை ஒரு மிகப் பெரும் வெற்றியாக இருந்தது. திருக்குர்ஆன் இதை ஒரு மாபெரும் வெற்றி என்று வரைந்துள்ளது. அது குறித்து இவ்வாறு கூறியுள்ளது:

اِنَّا فَتَحْنَا لَكَ فَتْحًا مُّبِيْنًا

அதாவது நிச்சயமாக நாம் உமக்குத் தெள்ளத்தெளிவான வெற்றியை வழங்கியுள்ளோம். தெள்ளத்தெளிவான வெற்றிக்கான இந்த வாசல் வழியாக சென்றவாறே ஃகைஹபர் மற்றும் மக்கா போன்ற மகத்துவ மிக்க வெற்றிகள் கிடைத்தன. உண்மையில், அல்லாஹ் வாக்குறுதி அளித்து விட்டிருந்தான். ஹுதைபியா சமரச உடன்படிக்கைக்குப் பிறகு திரும்பி வந்து கொண்டிருக்கும்போது, மக்காவிற்கும் மதீனாவிற்கும் இடையில் சூரா ஃபத்ஹ் இறங்கியது.

இந்த சூராவில் ஃகைஹபர் வெற்றி பற்றிய நற்செய்தியை இவ்வாறு வழங்கினான்:

لَقَدْ رَضِيَ اللّٰهُ عَنِ الْمُؤْمِنِيْنَ اِذْ يُبَايِعُوْنَكَ تَحْتَ الشَّجَرَةِ فَعَلِمَ مَا فِيْ قُلُوْبِهِمْ فَاَنْزَلَ السَّكِيْنَةَ عَلَيْهِمْ وَاَثَابَهُمْ فَتْحًا قَرِيْبًا ۙ وَّمَغَانِمَ كَثِيْرَةً يَّاْخُذُوْنَهَا ؕ وَكَانَ اللّٰهُ عَزِيْزًا حَكِيْمًا وَعَدَكُمُ اللّٰهُ مَغَانِمَ كَثِيْرَةً تَاْخُذُوْنَهَا فَعَجَّلَ لَكُمْ هٰذِهٖ

பொருள்: நம்பிக்கையாளர்கள் மரத்திற்கடியில் உம்மிடம் உடன்படிக்கை செய்து கொண்டபோது நிச்சயமாக அல்லாஹ் அவர்களைக் குறித்து மிக்க மகிழ்ச்சி அடைந்து விட்டான். மேலும் அவன் அவர்களது உள்ளங்களிலிருந்த (நம்பிக்கை)தனை நன்கு அறிந்து கொண்டான். எனவே அதன் விளைவாக அவன் அவர்களுடைய உள்ளங்களில் நிம்மதியை இறக்கி, அண்மையில் வரவிருக்கும் ஒரு வெற்றியினை அவர்களுக்கு வெகுமதியாக வழங்கினான்.

அதாவது ஃகைஹபர் வெற்றி.

மேலும், அவர்கள் கைப்பற்றிக் கொண்டிருந்த மிகுதியான போர்ச் செல்வங்களையும் அவர்களுக்கு வழங்கினான்.

ஃகைஹபரின் செல்வங்களும் அவர்களுக்குக் கிடைத்தன.

மேலும், அல்லாஹ் வல்லோனும், நுட்பமான ஞானமுள்ளவனும் ஆவான். மேலும் நீங்கள் கைப்பற்றவிருக்கும் மிகுதியான போர்ச் செல்வங்களை அல்லாஹ் உங்களுக்கு வாக்களித்துள்ளான். மேலும் தற்போதைய இந்தப் போர்ச் செல்வத்தை உங்களுக்கு வாக்களிக்கப்பட்டவற்றிலிருந்து விரைவாக உங்களுக்கு வழங்கி விட்டான்.

படைக்கான ஆயத்தம் மற்றும் மதீனாவில் பிரதிநிதியை நியமித்தல் குறித்த விளக்கம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஃகைஹபரை நோக்கி செல்வதற்காக அறிவிப்பு செய்ய வைத்தபோது, ஹுதைபியா சமரச உடன்படிக்கையில் இணைந்திருந்தவர்கள் மட்டுமே உடன் செல்ல வேண்டும் என்று அறிவிக்கச் செய்தார்கள். ஓர் அறிவிப்புக்கு ஏற்ப, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

போர்ச் செல்வத்துக்காகப் புறப்படுபவர்கள் என்னுடன் புறப்பட வேண்டாம். ஜிஹாதில் ஆர்வமுள்ளவர்கள் மட்டும் என்னுடன் புறப்படட்டும்.

இப்னு ஹிஷ்ஷாம் அவர்களின் கூற்றுப்படி, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் நுமைலான் பின் அப்தில்லாஹ் லேஸீ (ரலி) அவர்களை மதீனாவில் தம் பிரதிநிதியாக நியமித்தார்கள். இமாம் புகாரீ அவர்களின் கூற்றுப்படி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸிபாஹ் பின் உர்ஃபஹ்வைப் பிரதிநிதியாக நியமித்தார்கள்.

அல்லாமா இப்னு இஸ்ஹாக் அவர்களும், இப்னு ஸஅத் அவர்களும் இவ்வாறு எடுத்துக் கூறுகிறார்கள்:

முதல்முதலாக, ஃகைஹபர் போரில் பெரிய கொடியைப் பற்றிய குறிப்பு கிடைக்கிறது. அதற்கு முன்னால் சின்ன சின்னக் கொடிகள்தான் இருந்து வந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹஸ:ரத் ஃஹுப்பாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா (ரலி) ஆகியோருக்குப் பெரிய கொடிகளை வழங்கினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெரிய கொடி கருப்பு நிறத்தில் இருந்தது. அது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடைய போர்வையால் செய்யப்பட்டிருந்தது.

அதன் பெயர் உக்காப் ஆகும். இந்தப் பெரிய கொடிதான் ஹஸ்ரத் ஃஹுப்பாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்களிடம் இருந்தது. அறிவிப்பில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கும் ஒரு பெரிய கொடி வழங்கப்பட்டது. ஏனெனில், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் புறப்பட முடியாமல் போனது. ஏனெனில், அவர்களுக்குக் கண் வலி பிரச்சனை இருந்தது. கண் நோய் இருந்தது. அவர்களுக்கு எதுவும் தென்படாமல் இருந்தது. ஆனால், பின்னர் நிம்மதியிழந்து அவர்கள் புறப்பட்டு விட்டார்கள். ஃகைஹபர் சென்றடைந்து விட்டார்கள். இவர்களுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

இந்தப் பயணத்தில் ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். ஓர் அறிவிப்புக்கு ஏற்ப பெண் ஸஹாபிகள் ஆறு, ஏழு பேரும் கூட இந்தப் போர்த் திட்டத்தில் உடன்இணைந்து கொண்டார்கள். ஓர் அறிவிப்புக்கு ஏற்ப பெண் ஸஹாபிகள் 20 பேர் இந்தப் போரில் கலந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் உம்மு ஸனான் அஸ்லமியா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஃகைஹபர் போருக்கு செல்ல நினைத்தபோது, நான் அன்னாரின் மேலான அவையில் ஆஜரானேன். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் அனுமதி அளித்தால் நான் உடன் செல்வேன்; நான் தோல்ப் பைகளை சுத்தம் செய்வேன்; படையின் பொருள்களைப் பாதுகாப்பேன். எவராவது நோய்வாய்ப்பட்டாலோ அல்லது காயம் அடைந்தாலோ அவருக்கு சிகிச்சை அளிப்பேன் என்று பணிவுடன் கேட்டுக் கொண்டேன்.

அவர்கள் கூறுகிறார்கள்: கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் எனக்கு அனுமதி வழங்கிவிட்டார்கள். இவ்வாறே பனூ ஃகஃப்பார் கோத்திரத்தின் பெண்கள் சிலர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேலான அவைக்கு வந்தனர். அல்லாஹ்வின் தூதுர் (ஸல்) அவர்களே, நாங்களும் போரில் கலந்து கொள்ள விரும்புகிறோம்; நாங்கள் காயமடைந்தவர்களைப் பார்த்துக் கொள்வோம்; எங்களால் இயன்ற அளவுக்குப் போராளிகளுக்கு உதவி புரிவோம் என்று பணிவுடன் கேட்டுக் கொண்டனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களுக்கும் அனுமதி நல்கி விட்டார்கள். மேலும் அவர்களுக்காக பரகத்துக்கான துஆ செய்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் ஸஹாபா பெருமக்களும் செய்யும் ஆயத்தம் பற்றி மதீனாவின் யூதர்களுக்குத் தெரிய வந்தபோது, அவர்களுக்கு இது மிகவும் கடினமாக இருந்தது.

அன்னார் ஃகைஹபரிலிருந்து நுழைந்து விட்டார்கள் என்றால், பனூ கைனுக்கா, பனூ நளீர் மற்றும் பனூ குறைழா அழிந்தது போன்று ஃகைஹபர் அழிந்து விடும் என்று அவர்கள் புரிந்து கொண்டார்கள். மதீனாவின் யூதர்கள் செல்வச் செழிப்பு மிக்கவர்களாக இருந்தனர். மதீனாவின் முஸ்லிம்கள் பொருளாதார நலிவு காரணமாக அவர்களிடம் கடன் வாங்கி வந்தார்கள். இப்பொழுது ஃகைஹபரின் யூதர்களின் பயனுக்காக மதீனாவின் யூதர்கள் முஸ்லிம்களுக்குத் தொல்லை கொடுப்பதற்காகவும், போரிலிருந்து தடுப்பதற்காகவும் உடனடியாகத் தமது கடனைத் திருப்பிக் கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

ஸஹாபி ஒருவரின் நிகழ்வு இவ்வாறு கிடைக்கப் பெறுகிறது: ஹஸ்ரத் இப்னு அபீ ஹத்ரது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அவர்கள் யூதன் அபூ ஷஹ்மின் 5 திர்ஹம்களை ஓர் அறிவிப்பில் வருகிறது. 4 திர்ஹம்களைக் கொடுக்க வேண்டி இருந்தது. யூதன் அதைத் திருப்பிக் கேட்டான். அவன் ஹஸ்ரத் இப்னு அபீ ஹத்ரது (ரலி) அவர்களிடம் கூறினான்: அவன் திருப்பித்தருமாறு கேட்டான். இப்னு அபீ ஹத்ரது அவர்கள் அவனிடம் எனக்குக் கால அவகாசம் கொடு; நான் ஃகைஹபரிலிருந்து உனது உரிமையைக் கொடுத்து விடுவேன்.


Proprietor off : 044- 2260 1886

**RAZIK XEROX & TELECOM**

AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE

AO MULTI COLOUR PLAN XEROX



- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET, ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

இன்ஷா அல்லாஹ். ஏனெனில், அல்லாஹ் தன் நபி (ஸல்) அவர்களிடம், ஃஹைபர் அன்னாருக்கு போர்ச் செல்வத்தை வழங்கும் என வாக்குறுதி அளித்துள்ளான் என்று கூறினார்கள்.

யூதன் அபூ ஹஷ்ம் பொறாமையாகவும், பகைமையுடனும் இவ்வாறு கூறினான்: நீங்கள் ஃஹைபர் வாசிகளுடன் சண்டையிடுவதை சாதாரண காட்டரபிகளுடன் சண்டையிடுவது போன்று நினைத்து விட்டீர்களா? தவ்ராத்தின் மீது ஆணையாக, அங்கு 10 ஆயிரம் பேர் வீரர்கள் இருக்கிறார்கள்.

அவர்கள் இருவரும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான அவையில் தமது விவகாரத்தை முன் வைத்தார்கள். அப்பொழுது போருக்கான அவசரகால நிலை இருந்தது. இந்த யூதன் காழ்ப்புணர்ச்சியின் எல்லையை எட்டி, ஃஹைபரின் யூதர்களுக்கு ஆதரவையும், அனுதாபத்தையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். மேலும் முஸ்லிம் போர் வீரர்களை கேலியும் செய்து கொண்டிருந்தான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ராஜாங்கத் தலைவராக இருந்தார்கள். அந்த யூதனுக்கு தண்டனை எதுவும் கூட கிடைத்திருக்கலாம். ஆனால், பெரும் கட்டுப்பாடு, மன தைரியம், நீதி நேர்மை மற்றும் மதநல்லிணக்கத்திற்கான எந்த அழகிய முன்மாதிரி காணக் கிடைத்தது என்றால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அந்த யூதனின் உரிமையை செலுத்தி விடுங்கள் என்று கூறினார்கள்.

இப்னு அபீ ஹத்ரது அவர்கள் கூறினார்கள்: தங்களை உண்மையுடன் அனுப்பியவன் மீது ஆணையாக, எனக்கு இப்பொழுது அவனுடைய உரிமையைத் திருப்பித் தருவதற்கான ஆற்றல் இல்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எப்படியானாலும் அவனுடைய உரிமையைக் கொடுத்து விடு. ஹஸ்ரத் இப்னு அபீ ஹத்ரது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் எனது தலையின் தலைப்பாகையை அவிழ்த்து, கீழாடையைக் கட்டிக் கொண்டேன். கீழாடையின் போர்வையை சந்தையில் விற்று அவனுடைய உரிமையை செலுத்தி விட்டேன். மேலும், நான் வேறு உடை அணிந்து கொண்டேன்.

இந்த வேறு உடை ஒரு போர்வையாகும். அதை ஸலமா பின் அஸ்லம் அவர்கள் அல்லது ஓர் அறிவிப்புக்கு ஏற்ப வயது முதிர்ந்த பெண் ஸஹாபி அவர்கள் அவர்களுக்குக் கொடுத்தார்கள். அந்த மூதாட்டிக்கு இந்த முழு நிகழ்வின் விபரம் பற்றி தெரிய வந்தபோது, அவர்கள் அன்பளிப்பு கொடுத்து விட்டார்கள். அல்லாஹ்வின் நியதியைப் பாருங்கள். ஃஹைபரில் அந்த ஸஹாபிக்குப் போர்ச் செல்வம் கிடைத்தது. அதில் ஒரு பெண்ணும் கிடைத்தாள். அதே யூதன் அபூ ஷஹ்மின் உறவினப் பெண்ணாக இருந்தாள். பிறகு, அவர்கள் அந்தப் பெண்ணை அதே யூதனுக்கு விற்று விட்டார்கள்.




ஃஹைபரை நோக்கி முன் கூட்டி செல்லும் செய்திகளினால் மதீனாவின் யூதர்கள் முஸ்லிம்களோடு வெறுப்பையும், பகைமையையும் மதவெறியையும் மட்டும் வெளிப்படுத்தவில்லை. அதற்கும் மேற்பட்டு, அஸ்ஜா கோத்திரத்தின் ஒரு காட்டரபியை வாடகைக்கு எடுத்து உடனடியாக ஃஹைபரை நோக்கி முஸ்லிம்களின் போர் ஆயத்தங்கள் மற்றும் அவசியமான தகவல்களையும் கொடுத்து அனுப்பினார்கள். அத்துடன் நிலைத்து நின்று முஸ்லிம்களை எதிர்கொள்ளுங்கள் என்றும் தூதுச் செய்தி அனுப்பினார்கள்.

எப்படிப்பார்த்தாலும் முஸ்லிம்களின் எதிரிகளுக்கு எந்த ஒற்றனும் தேவைப்படவில்லை. ஏனெனில், மதீனாவில் இருக்கும் நயவஞ்சகர்கள் இந்தப் பணியை மிகவும் வேகமாக செய்து வந்தார்கள். ஆக, இந்தத் தருணத்திலும் நயவஞ்சகர்களின் தலைவன் அப்துல்லாஹ் பின் அபீ ஸூலூல் அமைதியாக இருக்கவில்லை. மாறாக, தன் உதவியாளன் ஒருவன் மூலமாக ஒரு கடிதத்தை உடனடியாக ஃஹைபரின் யூதர்களை நோக்கி அனுப்பினான்.

கடிதத்தின் கருத்து இதுவாகும்: ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் உங்களை நோக்கி வரவிருக்கின்றார்கள். உங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கான திட்டங்களை வகுத்துக் கொள்ளுங்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் போர் புரிய போர்க் களத்துக்கு வந்து விடுங்கள். அவர்களுக்கு சற்றும் அஞ்சாதீர்கள். உங்களது எண்ணிக்கை மிகவும் அதிகமாக உள்ளது. முஹம்மது (ஸல்) அவர்களின் சமுதாயம் மிகவும் குறைவானது. அவர்களிடம் வெறும் கொஞ்ச ஆயுதங்கள் தான் இருக்கின்றன.

இது குறித்து, யூதர்களுக்கு தெரிய வந்தபோது, அவர்களது வழிகாட்டல்களின் கூட்டம் நடைபெற்றது. அதில் கூட்டத்தில் கருத்து வேறுபாடு பற்றிய குறிப்பு கிடைக்கின்றது.

அதன் குறிப்பு இவ்வாறு உள்ளது: ஃஹைபரின் யூதர்களுக்கு முஸ்லிம்களின் படை வருவது குறித்து தெரிய வந்ததும் அவர்கள் ஒரு கூட்டம் நடத்தினார்கள். அதில் இஸ்லாமியப் படையை எதிர்கொள்வதற்காக ஆலோசனை செய்யப்பட்டது. அந்த விவாதத்தில் யூதர்களின் வழிகாட்டிகளின் தரப்பிலிருந்து பல்வேறு விதமான ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டன.

ஒரு குழு என்ன ஆலோசனை கூறியது என்றால், யூதர்கள் கோட்டைக்குள் அடைபட்டு இருந்து கொண்டு, மதில்களுக்குப் பின்னால் இருந்து கொண்டு போர் புரியட்டும்; அதனால் இறுதியில் முஸ்லிம்கள் நொந்து போய் முற்றுகையை விட்டு விடுவார்கள்.

ஆனால், ஃஹைபரின் புகழ்பெற்ற தலைவன் மர்ஹபின் சகோதரன் அபு ஸைனப் இவ்வாறு ஆலோசனை கூறினான்: கோட்டைக்குள் அடைபட்டு எதிர்கொள்வதற்குப் பதிலாக, வெளியே போர்க் களத்திற்கு சென்று எதிர்கொள்ள வேண்டும். ஏனெனில், இதற்கு முன்பு மதீனாவின் யூதர்கள் கோட்டைக்குள் அடைபட்டு செய்த போருக்கான விளைவைப் பார்த்து விட்டிருக்கின்றார்கள். அதில் முஸ்லிம்களுக்கே வெற்றி கிடைத்தது.

ஆனால், நம்முடைய கோட்டைகள் அவர்களுடைய கோட்டைகளைக் காட்டிலும் பன்மடங்கு வலுவானவை என்று கூறி குழு அவனது இந்த ஆலோசனையை நிராகரித்து விட்டது.

மூன்றாவது ஓர் ஆலோசனை அதையும் விட ஆணவம் மிக்கதாக இருந்தது. அது யூதர்கள் தரப்பிலிருந்து மிகவும் துணிச்சல் மிக்கதாக இருந்தது. அது ஃஹைபரின் படைகளின் தளபதி ஸலாம் பின் மஷ்கம் தரப்பிலிருந்து இருந்தது. அவன் கூறினான்: நாமே மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்து விடுவோம். நம்முடைய கூட்டாளிகள் அனைவருடனும் சேர்ந்து இணைந்து முஸ்லிம்களை இல்லாமல் ஆக்கி விடுவோம்.

பெரும்பான்மை இந்தக் கருத்தோடு ஒத்துப் போனது. ஆனால், ஃஹைபரின் பெரிய தலைவன் கனானா பின் அபீ ஹூகைக் இதை எதிர்த்தான். அவன், நம்முடைய கோட்டைகள் யஸ்ரபின் (மதீனாவின்) கோட்டைகளைப் போன்று கிடையாது என்று கூறினான். ஆணவம் மற்றும் அகம்பாவம் எந்த நிலையில் இருந்தது என்றால், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஒருபோதும் நம் பக்கம் வருவதற்குத் துணிச்சல் கொள்ளமாட்டார் என்று அவன் கூறினான்.

எவ்வாறாயினும், வழிகாட்டிகள் அனைவரும் இந்த விஷயத்தில் கருத்தொருமித்தனர்: ஒரு குழுவை ஆயத்தம் செய்து அக்கம்பக்கத்து போர் புரியும் வீரக் கோத்திரங்களை நோக்கி, அவர்களிடம் இராணுவ உதவிக்கான விண்ணப்பம் வைக்க அனுப்ப வேண்டும். ஆகவே 14 பேரைக் கொண்ட ஒரு குழு தயாரானது. சில அறிவிப்புகளின்படி, அதற்கு ஃஹைபரின் பெரிய தலைவன் கனானா தலைமை தாங்கினான். இந்தக் குழு பனூ அஸத் கோத்திரம், ஃகத்ஃபான் கோத்திரம் மற்றும் பிற கோத்திரங்களை நோக்கிச் சென்றது. மேலும், ஃஹைபரின் ஒரு வருட விளைச்சலில் பாதியைத் தருகிறோம் என்ற சலுகையை முன்னிறுத்தி இராணுவ உதவி கேட்டார்கள். பனு மர்ரஹ் கோத்திரம் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டவாறு, இது போன்ற உதவி செய்ய மறுத்து விட்டது.

எனினும், பனு அஸத் மற்றும் பனு ஃகத்ஃபான் போன்ற போர் புரியும் கோத்திரங்கள் ஆயுதமேந்திய ஆயிரம் போர் வீரர்களை உள்ளடக்கிய படையையோ உடனடியாக அனுப்பி விட்டனர்.மேற்கொண்டு 4000 பேர் கொண்ட படையை வழங்குவதாக வாக்குறுதியளித்தவாறு அதற்கான ஆயத்தமும் மேற்கொள்ள ஆரம்பித்து விட்டனர்.

எவ்வாறு இருப்பினும், இதன் மேற்கொண்ட விபரம் உள்ளது. அதை இனி எடுத்துரைப்பேன். இன்ஷா அல்லாஹ். இப்பொழுது நான் மர்ஹூம்கள் சிலரைப் பற்றி கூற விரும்புகிறேன்.

முதற்குறிப்பு, முஹம்மது பஃஹ்ஷ் ஸாஹிப் அவர்களின் மகன் மண்டி பஹாவுத்தீனைச் சேர்ந்த மதிப்பிற்குரிய முஹம்மது அஷ்ரஃப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் இவர்கள் இறை நியதிக்கு ஏற்ப மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர்களுக்கு 3 மகள்களும், 6 மகன்களும் இருக்கின்றனர். இவர்களின் ஒரு மகன் காஷிஃப் ஜாவேத் ஸஹிப் அவர்கள் இன்றைய நாட்களில் செனிகாலில் இருக்கிறார்கள். பொறுப்பு மிஷனரீ இன்சார்ஜ் ஆக இருக்கின்றார். ஜமாஅத்தின் அமீராகவும் இருக்கின்றார். இதன் காரணமாக

இவர்களால் செனிகாலில் இருந்து தம் தந்தையின் ஜனாஸாவில் கலந்து கொள்ளவும் முடியவில்லை.

முரப்பியான இவர்களின் இந்த மகனே எழுதுகிறார்கள்: என் தந்தையார் மிகவும் எளிமையான , நல்லியல்புடைய இறைவனுக்கு அஞ்சக் கூடிய நபராக இருந்தார்கள். அஹ்மதிய்யத்துடனும், கிலாஃபத்துடனும் மிகவும் அதிகமாக அன்பு செலுத்தக் கூடிய நபராக இருந்தார்கள். தமது வம்சத்தில் தனி அஹ்மதியாக இருந்தார்கள். பெரும்பாலும், நாம் பெற்றதெல்லாம் அஹ்மதிய்யத்தால் பெற்றோம் என்றே கூறி வருவார்கள். தம் பிள்ளைகளுக்கும், எப்போதும் அஹ்மதிய்யத்துடனும், கிலாஃபத்துடனும் தொடர்பை ஏற்படுத்தி வைத்திருங்கள் என்றே எப்போதும் அறிவுரை கூறி வந்தார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: இவர்களின் தந்தை வழிப் பாட்டனாரான முஹம்மது அஃஸம் ஸாஹிப் அவர்கள் 1968-க்கு அருகில், சர்கோதாவில் ப்ஹாப்டா என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கிருந்து பைஅத் செய்தார்கள். முரப்பி ஸாஹிப் கூறுகிறார்கள்: என் தந்தையும் அஹ்மதி ஆகிவிட்டார்கள். இவர்கள் கூறுகிறார்கள்:

பிறகு தாயார் தரப்பிலிருந்து ஒற்றை சகோதரராக இருந்தார்கள். அஹ்மதி ஆனார்கள். மெட்ரிக் முடித்த பிறகு, அங்கிருந்து கிராமத்தை விட்டு விட்டு மண்டி பஹாவுத்தீனில் ஷாஹ்தாஜ் சர்க்கரை ஆலையில் வேலை பார்த்தார்கள். அங்கேயே மண்டி பஹாவுத்தீனிலேயே கடைசி வரை இருந்தார்கள்.

பெரிய வயதில் ஆர்வத்துடன் திருக்குர்ஆனை கற்றுக் கொண்டார்கள். பிறகு, எந்த அளவு கடினமாக உழைத்தும் அன்போடும் ஓதி வந்தார்கள் என்றால், ஒவ்வொரு மாதமும் ஓரிரு முறை கண்டிப்பாக ஓதி முடித்து விடுவார்கள். ரமலானில் இரண்டு மூன்று முறை முடித்து விடுவார்கள். ஏழைகளுக்கு குறிப்பாக உதவி செய்து வந்தார்கள். இவர்களிடம் யார் வந்தாலும் அவரை ஒருபோதும் வெறுங்கையோடு திருப்பி அனுப்ப மாட்டார்கள்.

முரப்பி கூறுகிறார்கள்: என்னிடமும் இவ்வாறு கூறிவந்தார்கள். அல்லாஹ் நம் மீது என்ன அருள் புரிகிறானோ இது நீ வாழ்வை அர்ப்பணித்துள்ளதன் பரக்கததால் ஆகும்.

ஒரு மகன் முபஷ்ஷிர் ஜாவேத் ஸாஹிப் கூறுகிறார்கள்: நான் செகரட்டரீ மால் ஆக இருக்கிறேன். கடந்த பல ஆண்டுகளாகவும், எப்பொழுதும் தந்தையார் அவர்கள் சந்தாக்களை முறையாக செலுத்தி வந்தார்கள். எப்பொழுது பென்ஷன் கிடைத்தாலும், ஆண்டு முழுவதற்குமான சந்தாவை செலுத்தி விட வேண்டும் என்று முயற்சி செய்வார்கள். மரண நேரத்திலும் எனது சந்தாக்கள் செலுத்தப்பட்டு விட்டனவா?இல்லையா? என்ற இதே கவலைதான் இருக்கும். மரண நேரத்தில் அல்லாஹ் எனது சந்தாக்கள் அனைத்தையும் செலுத்துவதற்கு எனக்கு நல்வாய்ப்பு வழங்கியுள்ளான் என்று இதில் இவர்கள் பெரிதும் நன்றி செலுத்தி வந்தார்கள். அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி கருணையுடன் நடந்து கொள்வானாக! அனைவருக்கும் பொறுமையையும் நிம்மதியையும் வழங்குவானாக!

இரண்டாவது நற்குறிப்பு கென்யாவின் இரண்டாம் நாயிப் அமீர் ஹபீப் முஹம்மத் ஷாத்ரீ ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் முஹம்மத் ஹபீப் ஷாத்ரீ ஸாஹிப் அவர்களின் மகனாவார்கள். இவர்கள் அரேபிய வம்சாவளி ஆவார்கள். கடந்த நாட்களில் 56 வது வயதில் இவர்கள் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூம் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் பெற்றோர் மட்டுமின்றி துணைவியாரும் மூன்று பிள்ளைகளும் இருக்கிறார்கள். கென்யாவின் ஜமாஅத் அமீர் மஹ்மூத் தாஹிர் ஸாஹிப் கூறுகிறார்கள்:

இவர்களின் மூதாதையர்கள் ஏமனைச் சேர்ந்தவர்கள் ஆவர். இவர்களின் தந்தையார் ஹபீப் ஷாத்ரீ ஸாஹிப் அவர்கள் 1982 ஆகஸ்டில் பைஅத் செய்தார்கள். மிகவும் கலப்பற்ற அஹ்மதியாக இருந்தார்கள். இந்த மர்ஹூம் அவர்கள் அன்னாரின் மூத்த மகனாவார்கள்.

தந்தையார் பைஅத் செய்து சில காலத்துக்குப் பிறகு, இவர்களும் பைஅத் செய்து விட்டார்கள். பைஅத்துக்கான உறுதிமொழியைப் மரண நேரம் வரை நிறைவேற்றினார்கள். மம்பாஸாவிலிருந்து அடிப்படை கல்வி கற்றார்கள். மிகவும் தகுதி வாய்ந்த திறமைபெற்ற மாணவராக இருந்தார்கள். பள்ளிக்கூடம் தரப்பிலிருந்து சிறது காலத்துக்கு இவர்கள் கல்விக்காக ஃபிரான்ஸுக்கும் அனுப்பப்பட்டார்கள்.

எப்பொழுதும் கலீஃபாக்களுடன் சந்திப்பின் நிகழ்வுகளை தமது வாழ்வின் சிறந்த நிகழ்வுகளாக எடுத்துரைத்து வந்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களை சந்தித்தார்கள். என்னையும் சந்தித்தார்கள். பல்வேறு வகையில் தொண்டாற்றும் நற்பேறு பெற்றுக் கொண்டிருந்தார்கள். மரண நேரத்திலும் தேசிய தஃலீம் செயலராகவும், கென்யாவில் இரண்டாம் நாயிப் அமீராகவும் தொண்டாற்றி வந்தார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: எனக்கு இவர்களை இருபது ஆண்டுகளாகத் தெரியும். வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு மிகவும் அதிகமாக கண்ணியம் அளிப்பவர் ஆவார்கள். இவர்கள் பொறுப்பில் என்ன பணி ஒப்படைக்கப்பட்டாலும் அவற்றை மிகவும் பொறுப்புணர்வோடு செய்வார்கள். ஒருபோதும் நினைவூட்டுவதற்கான தேவை ஏற்படவில்லை. தொழுகைகளைப் பேணிக்காப்பவர் ஆவார்கள். இறை அடையாளங்களையும், இறைவன் விதித்துள்ள எல்லைகளையும் நுணுக்கமாக கருத்தில் கொள்ளக் கூடியவர் ஆவார்கள். சந்தாக்கள் செலுத்துவதில் முறையாகவும் உன்னதமான ஒழுக்கங்களுக்கு சொந்தக்காரராகவும் , ஏழைகள் மீது அக்கறை காட்டுபவராகவும் இருந்தார்கள்.

பெற்றோர்களுக்குக் கட்டுப்பட்டவராகவும், உரிமைகளை செலுத்தக் கூடியவராகவும் சகோதர, சகோதரிகளுக்கான உரிமைகளையும் செலுத்தக் கூடியவராகவும் இருந்தார்கள். கருத்துத் தெரிவிக்கக் கூடிய நற்பண்பு கொண்ட, கலப்பற்றத் தன்மை உடைய, நன்றி உணர்வுள்ள மனிதராக இருந்தார்கள். பெரும், பெரும் கம்பெனிகளில் உயர் பதவியில் இருந்துள்ளார்கள். அல்லாஹ் இவர்களுக்கப் பொருள் வளத்தையும் வழங்கியிருந்தான். உலக அடிப்படையில் நல்ல தொழில் செய்பவர்கள். அரசியல்வாதிகள், அரசாங்க ஊழியர்கள் மற்றும் மதம் சார்ந்த மக்கள் ஆகியோருடன் தொடர்பு இருந்து வந்தது. ஆனால், ஒருபோதும் தமது அஹ்மதிய்யத்தை மறைத்து வைத்ததில்லை. மாறாக, வெளிப்படுத்தி தப்லீஃக்கும் செய்து வந்தார்கள்.

இதன் காரணமாகவே, இவர்களின் ஜனாஸாவில் பெருமளவில் மம்பாஸாவின் உயர் மட்டத்தில் இருக்கும் அரசாங்க அதிகாரிகள், தொழில் செய்பவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் சமூக பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள். அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி இவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களுடன் தொடர்புள்ள அனைவருக்கும் பொறுமையையும், மன தைரியத்தையும் வழங்குவானாக!

மூன்றாவது நற்குறிப்பு, மதிப்பிற்குரிய அனோங்கி மதோங்கோ ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் ஜிம்பாவேயின் ஒரு ஜமாஅத்தின் சத்ர் ஜமாஅத்தாக இருந்தார்கள். கடந்த நாட்களில் இவர்கள் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்களின் மகன் யூஸுஃப் அனோபி ஸாஹிப் ஜிம்பாவேயின் ஜமாஅத் சத்ர் ஆவார்கள்.

அவர்கள் எழுதுகிறார்கள்: இவர்கள் ஆரம்பத்தில் முதலில் சன்னி முஸ்லிமாக இருந்தார்கள். ஆரம்பத்தில் ஜமாஅத்தை எதிர்த்து வந்தார்கள். ஆனால், இவர்களது உள்ளத்தில் இஸ்லாத்தின் மீதான அன்பு இருந்தது. முதலில் இவர்கள் மலாவீயில் இருந்தார்கள். அங்கு வாழ்ந்து வந்தபோது, பெரும் எதிர்ப்பு இருந்து வந்தது. பிறகு ஜிம்பாவேவுக்கு மாறி விட்டார்கள். இங்கு வந்து இவர்களுக்கு இஸ்லாத்தின் மீதிருந்த அன்பின் காரணமாக இவர்கள் தமது அக்கம்பக்கத்து மக்களை ஒன்று திரட்டினார்கள். எந்தப் பகுதியில் இருந்தார்களோ அங்கு ஜமாஅத்தான தொழுகைக்கான ஏற்பாட்டைச் செய்தார்கள்.

தான் உண்மையான முஸ்லிம் ஆக வேண்டும் என்று இவர்களது உள்ளத்தில் ஒரு துடிப்பு இருந்தது. எவ்வாறு இருப்பினும், பிறகு இவர்களுக்கு ஜமாஅத்துடன் தொடர்பு ஏற்பட்டது. நம் முரப்பி ஸாஹிப் ஸமியுல்லாஹ் ஸாஹிப் அவர்களுடன் விரிவான விவாதம் நடைபெற்று வந்தது. இறுதியில் இவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்கள். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, இவர்களுக்கு எதிர்ப்பும் ஏற்பட்டது. இவர்கள் ஒன்று திரட்டியிருந்த மக்களும் இவர்களை விட்டு விட்டார்கள். அவர்கள் இவர்களிடம் கடுமையும் காட்டினார்கள்.

பிறகு மக்களை ஒன்று திரட்டுவதற்காகவும், ஜமாஅத்தான தொழுகைக்காகவும் இவர்கள் உருவாக்கியருந்த அந்த சென்டரையும் விட்டு விட்டார்கள். தம் வீட்டு மக்களுடன் தமது வீட்டிலேயே தொழுகைகளையும் ஜுமுஆவையும் நிறைவேற்றத் துவங்கி விட்டார்கள். எவ்வாறாயினும், இவர்கள் துணிவிழக்கவில்லை. தப்லீஃக் செய்து கொண்டே வந்தார்கள். மக்கள் பலர் இவர்களது தூதுச் செய்தியை செவிமடுத்தார்கள். ஜமாஅத்தின் தூதுச் செய்தியை செவிமடுத்தார்கள். இவர்கள் மூலமாக ஜமாஅத்தில் இணைந்தனர்.

தாக்கம் ஏற்படுத்தும் நபராக இருந்தார்கள். பல மக்கள் இவர்களைப் பார்த்து ஜமாஅத்தில் இணைந்தார்கள்.

சுயமாக பொருள் தியாகம் செய்து இவர்கள் நிலமும் வாங்கினார்கள். அதில் இன்றைய நாட்களில் ஜிம்பாவே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முதல் பள்ளிவாசல் கட்டப்பட்டு வருகிறது. எனத வாழ்வில் கட்டப்பட்டு விட வேண்டும் என்பதே இவர்களது ஆசையாக இருந்தது. ஆனால், அப்பொழுது ஆக முடியவில்லை. இப்பொழுது கட்டப்பட்டு வருகிறது.

மிகவும் நன்றியுணர்வுள்ள, தூய்மையாகப் பேசக் கூடிய நேர்மையான மனிதராக இருந்தார்கள். மக்களுக்கு இடையிலான பிரச்சனைகளை மிகவும் நுட்பமாக அகற்றுவார்கள். ஜமாஅத்தின் சத்ர் ஆகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னரும் கூட பெரும்பாலான மக்கள் இவர்கள் மீது நம்பிக்கை வைப்பார்கள். இவர்களும் சொந்த வழிவகைகளைக் கொண்டு தேவையுடையவர்களுக்கு உதவி செய்வார்கள். வீடு எப்போதும் விருந்தினர்களால் நிறைந்திருக்கும். ஜமாஅத்துடன் ஆழமான பற்றுறுதியின் தொடர்பு இருந்தது. ஒவ்வொருவரையும் ஜமாஅத்துடன் இணைந்திருக்குமாறு வலியுறுத்தி வந்தார்கள்.

இவர்கள் பின்விட்டுச் சென்றவர்களில் 8 பிள்ளைகள் இருக்கின்றனர். நான் கூறியது போன்று, இவர்களின் மூத்த மகன் ஜிம்பாவேயின் ஜமாஅத் சத்ர் ஆவார்கள். இவர்களின் மகன்வழிப் பேரர் ஒருவர் காஸிம் அனோபி அவர்கள் ஜிம்பாவேயில் முதல் தலைமையக முரப்பி ஆவார்கள். ஜாமிஆவிலிருந்து படித்து வந்துள்ளார்கள்.

அல்லாஹ் இவர்களுக்கு பாவமன்னிப்பு வழங்கி கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களுடைய சந்ததிகளில் ஜமாஅத்தின் போதனைகள் எப்பொழுதும் தொடரட்டுமாக! இந்த மக்கள் நன்மைகளை செய்து கொண்டே இருப்பார்களாக!

தமிழாக்கம்

மவ்லவி

அத்தாவுல் முஃக்னீ

* * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த ***TOLL FREE*** எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**24-ம் பக்கத் தொடர்ச்சி●●●●**
**(குத்பா பேருரை 07.2.25)**

அம்புகளினால் 50 முஸ்லிம்கள் காயமடைந்திருந்தனர். மாலை நேரமானபோது பெருமானார் (ஸல்) அவர்கள் ரஜீஃ எனும் இடத்தை நோக்கி புறப்பட்டு சென்றார்கள். மக்களும் புறப்பட்டு வருமாறு கட்டளையிட்டார்கள். இந்த இடம் ஹஸ்ரத் ஹுப்பாப் (ரலி) அவர்களின் ஆலோசனையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது இந்த இடம்தான் முஸ்லிம்களின் தலைமையகமாக இருந்தது. ஏற்கனவே கூறப்பட்டது போன்று இந்தக் கோட்டை யூதர்களின் மிக உறுதி வாய்ந்த கோட்டையாக இருந்தது. ஃகைபரின் பெரும் வீரனான, புகழ்பெற்ற போராளியான மர்ஹப் என்பவன் இந்தக் கோட்டைக்கு தலைமை வகித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு எப்படிப்பட்ட குதிரை வீரர்கள் உதவி செய்து கொண்டிருந்தார்கள் என்றால், அவர்கள் துணிச்சலிலும், வீரத்திலும் அவனை விட குறைவானவர்களாக இருக்கவில்லை. அவர்கள் அவனுடைய இரு சகோதரர்களான யாஸரும், ஹாரிஸும் ஆவார்கள். அறிவிப்பில் இருந்து தெரிய வருவது என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் 10 நாட்கள் தொடர்ச்சியாக போரிட்டுக் கொண்டிருந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களை தன்னுடன் அழைத்துக் கொண்டு புறப்படுவார்கள். முகாமிட்டிருந்த இடத்தில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கண்காணிப்பாளராக விட்டுச் செல்வார்கள். மாலை நேரத்தில் அன்னார் (ஸல்) அந்த இடத்திற்கு திரும்பி வருவார்கள். காயமடையக் கூடிய முஸ்லிம்களும் அங்குதான் கொண்டு வரப்பட்டார்கள். அங்கு அவர்களின் காயங்களுக்கு கட்டுப் போடப்பட்டுக் கொண்டிருந்தது.

இந்தப் போருடைய சம்பவங்களுள் மர்ஹப் ஒற்றைக்கு ஒற்றை சண்டைக்கு அழைத்த சம்பவத்தைப் பற்றிய குறிப்பும் ஆமிர் பின் அக்வஃ ஷஹாதத் ஆன சம்பவம் பற்றியக் குறிப்பும் காணக் கிடைக்கின்றது. அதன் விபரம் பின்வருமாறு வருகிறது: அந்நாட்களில் ஒரு நாள் யூத படைத் தளபதியான மர்ஹப் - துணிவிலும் வீரத்திலும் தனக்கு நிகரான ஒருவரை கொண்டிருக்காதவனாக அவன் இருந்தான் - கோட்டைக்கு வெளியே வந்து முஸ்லிம்களுக்கு அறைகூவல் விடுத்தவாறு ஆணவத்துடன் தம் வாளை வீசியவாறு,

قَدْ عَلِمَتْ خَيْبَرُ أَنِّي مَرْحَبُ
شَاكِي السِّلَاحِ بَطَلٌ مُجَرَّبُ
إِذَا الْحُرُوبُ أَقْبَلَتْ تُلَهَّبُ

என்ற கவிதையை பாட ஆரம்பித்தான். பொருள்: நானே மர்ஹப்; இது ஃகைபருக்குத் தெரியும். போர் உக்கிரமானால் நான் ஆயுதம் ஏந்திய, அனுபவமிக்க வீரனாவேன் என்று பாட ஆரம்பித்தான்.

மர்ஹப் உடைய அறைகூவலை கேட்ட ஹஸ்ரத் ஆமிர் பின் அக்வஃ (ரலி) அவர்கள் படைக்கு முன்னால் வந்து,

قَدْ عَلِمَتْ خَيْبَرُ أَنِّي عَامِرُ

شَاكِي السِّلَاحِ بَطَلٌ مُغَامِرُ

என்று பாடினார்கள்.

பொருள்: ஃகைபருடைய மூலை முடுக்களுக்கு எல்லாம் நான் ஆமீர் என்பது தெரியும். நான் ஆயுதம் ஏந்திய வீரனாவேன். போர் அலையின் ஆபத்துகளில் அச்சமற்று கவிதை பாடக் கூடியவனாவேன்.

அதற்குப் பிறகு, அந்த இருவரும் எதிரெதிரே வந்தார்கள். ஒருவர் மற்றவர் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்தார்கள். மர்ஹப் வாளைக் கொண்டு தாக்கியபோது ஹஸ்ரத் ஆமிர் (ரலி) அவர்கள் தம் கேடயத்தால் அதை தடுத்து, உடனே குனிந்து கொண்டு கீழ்ப்பக்கமாக அவனைத் தாக்கினார்கள். ஆனால் அவர்களின் வாள் சிறியதாக இருந்தது. எனவே அவன் மீது வாள் படுவதற்கு பதிலாக ஹஸ்ரத் ஆமிர் (ரலி) அவர்களுக்கே அவர்களின் வாள் ஆழமான காயத்தை ஏற்படுத்தியது. அதன் காரணமாக அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள்.

இவர்கள் இந்த போரின் இரண்டாவது ஷஹீதாக இருந்தார்கள். இருவரும் ஒரே கபரில் அதாவது ரஜீஃ எனும் இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

ஹஸ்ரத் ஸலமா பின் அக்வஃ (ரலி) அறிவிக்கிறார்கள்: என்னுடைய தந்தையின் சகோதரர் ஹஸ்ரத் ஆமிர் பின் அக்வஃ (ரலி) அவர்கள் தம் கைகளாலேயே ஷஹீதாகி போனார்கள். அப்போது சில ஸஹாபிகள், ஆமிருடைய செயல்களோ வீணாகி விட்டன என்று கூற ஆரம்பித்தனர்.

ஹஸ்ரத் ஸலமா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஆகவே, நான் அழுதவாறு பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்றேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஆமிருடைய செயல்கள் வீணாகி விட்டனவா என்று கேட்டேன். அதற்கு, யார் அவ்வாறு கூறியது? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். தங்களுடைய சில ஸஹாபிகள் இவ்வாறு கூறினார்கள் என்றேன். எவர் இதை கூறினாரோ அவர் தவறாக கூறியுள்ளார். அவருக்காக இரு கூலிகள் உள்ளன என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். தம் இரு விரல்களை ஒன்று சேர்த்து காட்டினார்கள். அதாவது இரண்டு என்ற எண்ணிக்கையை காட்டினார்கள். அவர் பெரும் ஜிஹாதியாக இருந்தார். அவரைப் போன்று குறைவானவர்கள்தான் அரேபியாவில் இந்த பூமியில் நடமாடி இருப்பார்கள் என்றார்கள்.

ஓர் அறிவிப்பில் அவரைப் போன்று குறைவானவர்கள்தான் இந்த பூமியில் நடமாடி இருப்பார்கள் என்பதற்கு பதிலாக, அவரைப் போன்று இந்த பூமியில் குறைவானவர்கள்தான் பிறந்திருப்பார்கள் என்று வந்துள்ளது. அதாவது ஆமிரைப் போன்ற ஒருவர் அரேபியாவில் பிறந்திருக்க மாட்டார் என்றார்கள். அவர் இரு கூலிகளை பெற்றுக் கொண்டார். அவருக்கு கூலி கிடைக்கவில்லை என்று கூறுபவர்கள் தவறாக கூறுகிறார்கள் என்றார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ரஜீஃ எனும் இடத்திலேயே தங்கி இருந்தார்கள். அங்கிருந்து கொண்டே நாயிம் கோட்டையை வெற்றிக் கொள்வதற்காக தொடர்ச்சியாக 10 நாட்கள் வரை ஸஹாபிகளை அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

இந்தத் தொடர் தோல்விகள், ஸஹாபிகள் காயம் அடைந்தது மற்றும் இரு ஸஹாபிகள் ஷஹீதானது ஆகியவற்றால் யூதர்களின் துணிவு இன்னும் அதிகரித்திருந்தது. **(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்....)**

தமிழாக்கம்

மவ்லவி A.P.A தாரிக் அஹ்மது

* * * * *

# ஜுமுஆ பேருரை

**ஃகைபர் போரின் பின்னணியில்**
**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**

பெருமானார் (ஸல்) அவர்கள் தமது ஒரு ஸஹாபியான ஹஸ்ரத் அபூ அபஸ்(ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: இப்பொழுது உங்களைப் போன்றோர் மிகவும் நிதி நெருக்கடியில் இருக்கிறீர்கள். எந்த இறைவனுடைய கையில் எனது உயிர் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக! நீர் உயிருடன் இருந்தால் நீண்ட வாழ்வை பெற்றால் சிறிது காலத்திற்குப் பிறகு உமது பயணப் பொருட்கள் பெரிதும் அதிகரித்து விடுவதை நீர் காண்பீர்!; உமது குடும்பத்தினர்களின் உணவிலும் பெரும் மிகுதி ஏற்பட்டு விடும்; உங்களிடத்தில் திர்ஹம், தீனார் ஆகியவை அதிகமாக வந்து விடும்; (உங்களிடத்தில் உள்ள) அடிமைகளின் எண்ணிக்கையும் பெருகி விடும்; ஆனால், இவை அனைத்தும் உங்களுக்கு அதிக நல்லது கிடையாது

ஹஸ்ரத் அபூ அபஸ்(ரலி) அவர்கள், பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்பு நிறைவேறுவதை தம் கண்களால் கண்டார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அன்னார் (ஸல்) என்ன கூறினார்களோ அவை அனைத்தும் முற்றிலும் அவ்வாறே நிகழ்ந்தது என்று அவர்கள் கூறி வந்தார்கள்

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 07 பிப்ரவரி 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **தப்லீஃக் மாதம் 07 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُولُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ○ الرَّحْمٰنِ الرَّحِيمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّينِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ○
صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّينَ ○

ஃகைபர் போர் பற்றி கூறப்பட்டு வந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஃகைபரை நோக்கி புறப்பட்ட விபரம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: பெருமானார் (ஸல்) அவர்களின் தலைமையில் உயிரை அர்ப்பணிக்க தயராக இருந்த 1600 வீரர்களைக் கொண்ட படை மதீனாவில் இருந்து புறப்பட்டது. அதில் 200 குதிரை வீரர்களும் இருந்தனர். ஆனால் புறப்படுவதற்கு முன்னர் பெருமானார் (ஸல்) அவர்கள் செய்தியை சேகரித்து வருவதற்காக ஒரு குழுவை முன்னால் அனுப்பி வைத்தார்கள். அதனுடைய வேலை, படைக்கு முன்னால் சென்று பாதைகளை கண்காணிக்க வேண்டும்; சூழ்நிலைகளையும் அறிந்து வர வேண்டும். அந்த குழுவுக்கு தலைவராக ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) அவர்கள் இருந்தார்கள். ஃகைபர் செல்லும் வழிகளை தெரிவிப்பதற்காக 20 ஸாஃ பேரீத்த பழக் கூலிக்கு இரு வழிகாட்டிகள் அழைக்கப்பட்டிருந்தார்கள். 20 ஸாஃ என்பது 50 கிலோ ஆகும். அவர்களின் பெயர் ஹஸீல் காரிஜா அஷ்ஜயீ மற்றும் அப்துல்லாஹ் பின் நுயைம் என்பதாகும். இந்த இருவரும் அஷ்ஜஃ கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். மதீனாவில் இருந்து ஃகைபர் செல்லும் போது, பல்வேறு இடங்களில் முகாமிட்டவாறு ஸஹ்பா என்ற இடத்தில் தங்கினார்கள். அங்கு தொழுகைக்கான நேரம் ஆனபோது, அங்கு தொழுகை நிறைவேற்றப்பட்டது. புஹாரீயுடைய அறிவிப்பில் இவ்வாறு வருகிறது:

ஸஹ்பாவில் அன்னார் (ஸல்) அஸ்ர் தொழுதார்கள். அதற்குப் பிறகு உண்ணுவதற்காக ஏதேனும் கொண்டு வரும்படி அன்னார் (ஸல்) கூறினார்கள்: படையினரிடம் சத்து மாவு மட்டுமே இருந்தது. பெருமானார்(ஸல்) அவர்களும், ஸஹாபிகளும் அதையே உண்டார்கள். அறிவிப்பாளர் கூறுகிறார்: பிறகு அன்னார் (ஸல்) மக்ரிப் தொழுகைக்காக எழுந்து நின்றார்கள். அன்னார் (ஸல்) வாய் கொப்பளித்தார்கள். மீண்டும் புதிதாக உளூ செய்யவில்லை. ஸஹ்பா மற்றும் ஃகைபருக்கு இடையில் 12 மைல் தூரம் இருந்தது.

பயணத்தின் போது சில சம்பவங்களும் நிகழ்ந்தன. அவ்வாறான அவசர சூழ்நிலையிலும் கூட பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளின் தர்பிய்யத்தை எந்த அளவு கருத்தில் கொண்டார்கள் என்பதை குறித்து தெரிய வருகிறது. ஒழுங்குமுறை, கட்டுப்படுதல், கீழ்ப்படிதல் போன்ற பண்புகளை உருவாக்குவதன் பக்கம் அன்னார் (ஸல்) கவனமூட்டி வந்தார்கள். இவ்வாறான ஒரு சம்பவம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது: ஓர் இரவில் படைக்கு முன்னால் ஏதோ ஒரு பொருள் மின்னிக் கொண்டிருப்பதாக தெரிந்தது. அதனால் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கவலை ஏற்பட்டது. அது என்னவென்று அறிந்தபோது, இஸ்லாமியப் படையைச் சார்ந்த ஒரு வீரர் படையை விட்டு எல்லாருக்கும் முன்னால் சென்று கொண்டிருந்தார்.

அவருடைய தலைக்கவசத்தில் இருந்த வெள்ளி மின்னிக் கொண்டிருந்தது. அவருடைய பெயர் அபூ அபஸ் ஆகும். அவரை தம்மிடம் அழைத்து வருமாறு அன்னார் கூறினார்கள். ஹஸ்ரத் அபூ அபஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் தவறு செய்திருந்தேன். ஆகவே என்னை குறித்து ஏதேனும் இறையறிவிப்பு இறங்கி விட்டதோ? என்று எனக்கு அச்சம் ஏற்பட்டது.

அவர் பயந்தவாறு அன்னாருடைய சமூகத்தில் ஆஜரானார். படையை விட்டு முன்னால் ஏன் சென்று கொண்டிருக்கின்றீர்கள்? என்று அன்னார் கேட்டார்கள். எவ்வாறிருப்பினும், அவர் வருத்தம் தெரிவித்தார். படையுடன்தான் செல்ல வேண்டும் என்று அன்னார்(ஸல்) வலியுறுத்திக் கூறினார்கள். அதற்கு பிறகு அன்னார் (ஸல்) அவருடன் பேச ஆரம்பித்தார்கள். இவரும் ஏழை ஸஹாபிகளில் ஒருவராக இருந்தார். போருக்கு செல்வதற்கு இவரிடம் எந்த பயணப் பொருட்களும் இருக்கவில்லை. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னிடம் எந்த பயணப் பொருட்களும் கிடையாது; வீட்டிலும் எந்த உணவும் கிடையாது என்று அன்னாருடைய சமூகத்தில் ஆஜராகி கூறினார்கள். ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் தம் போர்வை ஒன்றை அவருக்கு வழங்கினார்கள். இந்த விவேகமான ஸஹாபி அந்த போர்வையை எடுத்துக் கொண்டு கடைவீதிக்கு சென்றார். அதை பெருமானார் (ஸல்) அவர்கள் வழங்கியதாக கூறி 8 திர்ஹமிற்கு விற்றார். 2 திர்ஹமிற்கு பயணப் பொருட்களை வாங்கிக் கொண்டார். 4 திர்ஹமுக்கு தமக்காக போர்வையை வாங்கிக் கொண்டு படையில் வந்து சேர்ந்து விட்டார்.

பேசிக் கொண்டிருக்கும் போது பெருமானார் (ஸல்) அவர்கள், நான் வழங்கிய போர்வை எங்கே? என்று அவரிடம் கேட்டார்கள். அதற்கு, நான் அதை விற்று விட்டேன் என்று அவர் கூறி அந்த முழு விபரத்தையும் எடுத்துக் கூறினார். அபூ அபஸுடைய இந்த பேச்சைக் கேட்டு பெருமானார் (ஸல்) அவர்கள் சிரித்தார்கள். இப்பொழுது உங்களைப் போன்றோர் மிகவும் நிதி நெருக்கடியில் இருக்கிறீர்கள். எந்த இறைவனுடைய கையில் எனது உயிர் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக! நீர் உயிருடன் இருந்தால் நீண்ட வாழ்வை பெற்றால் சிறிது காலத்திற்குப் பிறகு உமது பயணப் பொருட்கள் பெரிதும் அதிகரித்து விடுவதை நீர் காண்பீர்!; உமது குடும்பத்தினர்களின் உணவிலும் பெரும் மிகுதி ஏற்பட்டு விடும்; உங்களிடத்தில் திர்ஹம், தீனார் ஆகியவை அதிகமாக வந்து விடும்; (உங்களிடத்தில் உள்ள) அடிமைகளின் எண்ணிக்கையும் பெருகி விடும்; ஆனால், இவை அனைத்தும் உங்களுக்கு அதிக நல்லது கிடையாது

என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ அபஸ்(ரலி), பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்பு நிறைவேறுவதை தம் கண்களால் கண்டார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அன்னார் (ஸல்) என்ன கூறினார்களோ அவை அனைத்தும் முற்றிலும் அவ்வாறே நிகழ்ந்தது என்று அவர்கள் கூறி வந்தார்கள்.

அபூ அபஸ் யார்? என்றால் அவர்களின் உண்மையான பெயர் அப்துல் உஸ்ஸாவாக இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் அதை மாற்றி அப்துர் ரஹ்மான் என்று பெயர் வைத்தார்கள். அவர்கள் 70 வயது வரை வாழ்ந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் மரணமடைந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இவர்களின் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். ஜன்னத்துல் பகீயில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ ஃகத்ஃபானை நோக்கி சமாதான தூதுச் செய்தியையும் அனுப்பி வைத்தார்கள். ஃகைஹபரை நோக்கி முன்னேறிச் சென்றபோது ஸஹ்பா என்ற இடத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் முகாமிட்டார்கள் என்று தற்போது கூறப்படுகிறது. அஸ்ர், மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகள் அங்கு நிறைவேற்றப்பட்டன. இந்த இடம் ஃகைபரில் இருந்து 12 மைல் தொலைவில் இருந்தது. தொழுகைகள் முடிந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் இரண்டு வழிகாட்டிகளையும் அழைத்து நான் ஃகைபரின் மீது இவ்வாறு தாக்குதல் நடத்த விரும்புகிறேன் என்று தம்முடைய போர் திட்டத்தை அவர்களிடம் கூறினார்கள். ஃகைபர் வாசிகள் அங்கிருந்து தப்பி சிரியாவுக்கு சென்று விடாத வகையில் ஒருபுறம் அவர்களுக்கும், சிரியா நாட்டிற்கும் இடையில் நான் தடையாக நின்று விட வேண்டும். அத்துடனே, பனூ ஃகத்ஃபான் குலத்தாருக்கு இடையிலும் தடையாக ஆகிவிட வேண்டும். ஏனெனில், அவர்கள் அந்த யூதர்களுக்கு உதவி செய்வதற்காக வந்து விடக் கூடாது என்றார்கள். ஹஸீல் என்ற பெயருடைய அந்த வழிகாட்டி, படையை அழைத்துக் கொண்டு செல்ல ஆரம்பித்தார். ஃகைபர் பள்ளத்தாக்கிற்கு செல்வதற்கு பல்வேறு வழிகள் இருந்த ஓரிடத்தை அடைந்து அங்கு நின்று விட்டார்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அவனிடம் அந்த அனைத்து பாதைகளின் பெயரையும் கேட்டபோது, அதற்கு அவன் ஹஸன், ஷாஷ், ஹாதிப் போன்ற பெயர்களை கூறினான். அந்த பெயர்களின் பொருள்களைப் பார்க்கும் போது, நெருக்கடி, கடுமை தூக்கம் கஷ்டம் போன்றவற்றை அவை குறித்தன. மர்ஹப் என்ற பெயருடைய ஒரு வழியையும் கூறினான். அது மகிழ்ச்சி, செழிப்பு என்ற பொருளை கொடுத்தது. ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் இறை வழிகாட்டலுக்கு ஏற்ப நற்குறி பார்த்தவாறு மர்ஹப் எனும் பெயருடைய வழியை தேர்ந்தெடுத்தார்கள். பனூ ஃகத்ஃபான் குலத்தார் ஃகைபர் வாசிகளுக்கு உதவி செய்வதற்கு வாக்குறுதி அளித்துள்ளார்கள் என்றும் அவர்கள் மேற்கொண்டு 4000 படை வீரர்களை அழைத்துக் கொண்டு இஸ்லாமியப் படை ஃகைபரை சென்றடைவதற்கு முன்பே வழியிலேயே இஸ்லாமியப் படை மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்து கொண்டிருக்கின்றார்கள் என்ற செய்தி அன்னாருக்கு கிடைத்து விட்டிருந்தது. பனூ ஃகத்ஃபான் தம்முடைய புகழ்பெற்ற போராளிகளான துலைஹா பின் குவைலித் மற்றும் உயைனா பின் ஹிஸ்ன் ஆகிய தலைவர்களின் தலைமையில் குறைந்தபட்சம் ஓர் ஆயிரம் படை வீரர்களை முன்பே ஃகைபரை நோக்கி அனுப்பி வைத்திருந்தார்கள். அவர்கள் ஃகைபர் கோட்டைகளை சென்றடைந்திருந்தார்கள். இப்பொழுது இஸ்லாமியப் படையை தடுத்து நிறுத்துவதற்காகவும், அதை அழிப்பதற்காகவும் மேற்கொண்டு 4000 வீரர்களைக் கொண்ட ஒரு படை வந்து கொண்டிருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ ஃகத்ஃபானை தொடர்பு கொண்டார்கள். அவர்களுக்கு கடிதம் அனுப்பினார்கள். அந்தக் கடிதத்தில், ஃகைபருடன் நடக்கக் கூடிய போரில் நடுநிலை வகிக்க வேண்டும் என்று எழுதியிருந்தார்கள். அல்லாஹ் ஃகைபர் மீது எனக்கு வெற்றியை வழங்குவதாக வாக்குறுதி வழங்கியிருக்கின்றான் என்று அவர்களுக்கு தெளிவாக எழுதியிருந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த தூதுச் செய்தியில் நீங்கள் யூதர்களுக்கு துணை போவதை விட்டு விலகி இருந்தால், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் ஃகைபரை வெற்றிக் கொண்டால் பிறகு அது அந்த கோத்திரங்களுக்கு வழங்கப்படும் என்றும் எழுதியிருந்ததாக சில வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள். சிலரை பொருத்த வரை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை எழுதப்படவில்லை. மாறாக அவர்கள் ஃகைபர் வாசிகளுக்கு உதவி செய்யாமல் இருந்தால், நடுநிலை வகித்தால் ஃகைபரில் இருந்து கிடைக்கக் கூடிய வருடாந்திர உற்பத்தியில் பாதி அவர்களுக்கு வழங்கப்படும் என்று கூறியிருந்ததாக கருதுகிறார்கள்.

ஆனால், 1600 முஸ்லிம்களுக்கு எதிரில் 15000 போர் வீரர்களைக் கொண்ட படையும் உறுதியான கோட்டைகளும் இருந்த காரணத்தினால் அதன் ஆணவம் அவர்களின் மண்டைக்குள் பதிந்திருந்தது. அதன் காரணமாக அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் அந்த முன்னறிவிப்பை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள். ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவரும், களங்கமற்ற ஸஹாபியுமான ஹஸ்ரத் ஸஅது பின் உபாதா (ரலி) அவர்களை ஃகத்ஃபானுடைய தளபதியான உயைனா பின் ஹிஸ்னிடம் அனுப்பி வைத்தார்கள். அப்போது உயைனா பின் ஹிஸ்ன் பனூ ஃகத்ஃபானின் ஓராயிரம் பேர்களைக் கொண்ட படைக்கு தலைமை வகித்தவாறு ஃகைபரில் இருந்த யூத தலைவனான மர்ஹபுடைய கோட்டையில் இருந்தார். ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் பிரதிநிதித்துவத்தில் வந்திருப்பதை உயைனா அறிந்தபோது அவர்களை கோட்டைக்குள் அழைத்து வருவதற்காக புறப்பட்டார். அப்போது மர்ஹப் என்ற அந்த தளபதி முஸ்லிம்களின் இந்த பிரதிநிதியை கோட்டைக்குள் அழைத்து வரக் கூடாது; ஏனெனில் அவர் கோட்டைக்குள் வரக் கூடிய பாதைகளை பார்த்து விடக் கூடாது என்று ஆட்சேபனை செய்தான். ஆனால், உயைனாவோ முஸ்லிம்களின் இந்த பிரதிநிதியை கோட்டைக்குள் அழைத்து வர வேண்டும்; அதன் மூலமாக அவர் நம்முடைய ஆற்றலையும், ஆயத்தங்களையும் கொண்ட சிறந்த போர் தளவாடங்களை காண வேண்டும் என தாம் விரும்புவதாக கூறினார். ஆனால், மர்ஹப் அதை ஒத்துக் கொள்ளவில்லை. ஆகவே உயைனா ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்களை கோட்டைக்கு வெளியே சென்று சந்தித்தார்.

ஃகைபரை நாங்கள் வெற்றிக் கொள்வோம் என்று அல்லாஹ் எங்களுக்கு வாக்குறுதி வழங்கி இருக்கின்றான். ஆகவே நீங்கள் இங்கிருந்து திரும்பிச் சென்று விடுங்கள்; போரை விட்டு நீங்கள் விலகி இருங்கள். ஃகைபர் வெற்றி கொள்ளப்பட்ட பிறகு அதனுடைய வருடாந்திர விளைச்சலில் வரும் பேரித்தம் பழங்கள் உங்களுக்கு கொடுக்கப்பட்டு விடும் என்ற பெருமானார் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியை ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்கள் உயைனாவிடம் கூறினார்கள். அதற்கு உயைனா ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்களிடம், நாங்கள் எங்களது நட்புக் கோத்திரத்தை எவ்வகையிலும் கைவிட மாட்டோம். உங்களைப் பற்றி எங்களுக்கு தெரியும்; உங்களிடம் என்ன ஆற்றல்தான் இருக்கிறது, இந்த யூதர்கள் உறுதியான கோட்டைகளை கொண்டவர்கள். அவர்களின் படை வீரர்களில் இளைஞர்கள் அதிகமானோர் இருக்கின்றனர். ஆயுதங்களும் அதிக அளவில் இருக்கின்றன. போரிட்டால் நீங்கள் அனைவரும் அழிந்து விடுவீர்கள். நீங்கள் வெற்றி பெற்ற குறைஷியர்களை போன்று இம்மக்கள் கிடையாது என்று கூறினார். அத்துடன், எனது இந்த செய்தியை முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் கூறிவிடுங்கள் என்றார்.

அவருடைய இந்த ஆணவமான பதிலைக் கேட்ட ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்கள் உயைனாவிடம், முஹம்மது (ஸல்) அவர்கள் நிச்சயமாக உம்மிடத்தில் இந்த கோட்டைக்குள் வருவார்கள். நாங்கள் இப்போது உம் முன்னால் எடுத்து வைத்த கோரிக்கைகளை நீர் அப்போது வேண்டுவீர். ஆனால், அப்போது உமக்கு வாளைத் தவிர வேறு ஒன்றும் கிடைக்காது. அதாவது அப்போது போர் மட்டுமே இருக்கும் என்று நான் சாட்சி கூறுகின்றேன். உயைனாவே! நாங்கள் மதீனாவின் யூதர்களுடைய முற்றத்திலும் இறங்கினோம். அவர்கள் முற்றிலும் அழிந்து போனதையும் நான் கண்டேன் என்று கூறிவிட்டு அவர்கள் திரும்பி வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி அனைத்து விஷயங்களையும் கூறினார்கள். அத்துடனே மிகுந்த களங்கமற்ற தன்மையுடன் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் தங்களிடம் செய்த வாக்குறுதியை அவன் நிச்சயமாக நிறைவேற்றுவான். தனது மார்க்கத்தை வெற்றி பெறச் செய்வான். இந்த கிராமவாசிக்கு அதாவது, உயைனாவுக்கு அப்போது ஒரு பேரீத்தம் பழம் கூட கொடுக்காதீர்கள். அல்லாஹ்வின் தூதுர் (ஸல்) அவர்களே! வாள்கள் அவர்களை சென்றடையும் போது அவர்கள இதற்கு




முன்பு அகழ் போரின் போது எப்படி ஓடினார்களோ அதே போன்று அந்த யூதர்களை விட்டு தம் பகுதியை நோக்கி ஓடி விடுவார்கள் என்றார்கள். அகழ் போரின் போதும் இக்கோத்திரம் 6000 படை வீரர்களை அழைத்துக் கொண்டு குறைஷியர்களுக்கு உதவி செய்வதற்காக வந்திருந்தது. பிறகு அங்கிருந்து ஓடி விட்டது.

இறைவனுடைய மதிப்பு கலந்த அச்சமும், ஃகத்ஃபான் மக்கள் தப்பித்து ஓடியது பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கிறது.

மதிப்பு கலந்த அச்சத்தின் மூலமாக எனக்கு உதவி செய்யப்பட்டுள்ளது என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த சம்பவம் மீண்டும் ஒருமுறை இங்கு ஃகத்ஃபான் படைகளுடன் நடைமுறையில் வெளிப்பட்டது. ஏற்கனவே கூறப்பட்டது போன்று பனூ ஃகத்ஃபானுடைய 4000 பேர்களைக் கொண்ட படை இஸ்லாமிய படையை தாக்குவதற்காகவும், முஸ்லிம்கள் ஃகைபரை சென்றடைவதை விட்டு தடுப்பதற்காகவும் விரட்டி வந்து கொண்டிருந்தது. ஆனால், இறைவனுடைய நியதி எவ்வாறு வெளிப்பட்டது? என்றால், ஃகத்ஃபானுடைய இந்த படை திடீரென்று திரும்பி வந்து விட்டது. தம்முடைய வீடுகளை நோக்கி திரும்பி விட்டது. வரலாறு மற்றும் வாழ்க்கை வரலாறு நூல்களில் எழுதப்பட்டுள்ளதாவது; ஃகத்ஃபானியர்களின் தளபதி தமக்கு பின்னால் ஓர் உரத்த குரலை கேட்டார். முஸ்லிம்களின் படைப் பிரிவுகள் அவர்களுக்கு பின்னால் அவர்களின் வீடுகளையும், செல்வங்களையும்,. கால்நடைகளையும் கொள்ளையடிப்பதற்காக தாக்கியுள்ளார்கள் என்றும் அவர்களின் செல்வங்களையும், பெண்களையும் குழந்தைகளையும் சிறை பிடிக்கப் போகிறார்கள் என்றும் எச்சரிக்கக் கூடிய ஒருவர் அவர்களுக்கு குரல் கொடுத்துக் கொண்டிருந்தார். அதைக் கேட்டு அவர்கள் உடனே திரும்பி விட்டார்கள். யூதர்களுக்கு அவர்களால் உதவி செய்ய முடியவில்லை. இது மறைவான ஓர் உதவியாக இருந்தது. அல்லாஹ்வுடைய குரலாக இருந்தது.

வரலாற்று நூல்களில் ஃகத்ஃபான் படையினரின் எண்ணிக்கை குறித்த விஷயத்திலும் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. பனூ ஃகத்ஃபானுடைய ஓராயிரம் போர் வீரர்கள் தம்முடைய தலைவரான உயைனா பின் ஹிஸ்னு தலைமையில் ஃகைபரின் யூதர்களுக்கு உதவுவதற்காக அவர்களின் கோட்டைகளுக்கு வந்து சேர்ந்திருந்தார்கள் என்று ஒரு நூலுடைய மேற்கோள் காட்டி கூறப்பட்டிருந்தது. ஆனால், மற்ற வரலாற்று நூல்களில், அவர்களின் எண்ணிக்கை ஓராயிரத்திற்கு பதிலாக நான்காயிரம் என்று கூறப்பட்டுள்ளது. அதே போன்று வேறு சில வரலாற்று நூல்களில் உயைனாவுடைய தலைமையில் பனூ ஃகத்ஃபானுடைய 4000 வீரர்களைக் கொண்ட படை ஃகைபரை நோக்கி வந்து கொண்டிருந்தபோது வழியில் பெருமானார் (ஸல்) அவர்களின் ஒரு படைப் பிரிவை சந்தித்து பேசக்கூடிய வாய்ப்பு உயைனாவுக்கு கிடைத்தது. இறைவனுடைய மதிப்பு மிகுந்த அச்சத்தின் காரணமாக வழியிலேயே 4000 நபர்களைக் கொண்ட இந்த படை தம் இடத்தை நோக்கி திரும்பிச் சென்று விட்டது என்று கூறப்பட்டுள்ளது. ஸீரத் இப்னு ஹிஷாமில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், பெருமானார் (ஸல்) அவர்கள் ஃகைபரை நோக்கி தம் பயணத்தை தொடர்ந்தார்கள். மாலை நேரத்தின் இருளில் ஃகைபருடைய கோட்டைகள் தென்பட ஆரம்பித்தபோது, அன்னார் (ஸல்) தம் ஸஹாபிகளிடம் நின்று விடுமாறு கூறினார்கள். ஆகவே அனைவரும் நின்று விட்டார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள்.

اَللّٰهُمَّ رَبَّ السَّمٰوَاتِ السَّبْعَ وَمَا اَظْلَلْنَ
وَ رَبَّ الْاَرَضِيْنَ السَّبْعَ وَ مَا اَقْلَلْنَ
وَ رَبَّ الشَّيَاطِيْنَ وَمَا اَضْلَلْنَ وَ رَبَّ الرِّيَاحِ
وَمَا اَذْرَيْنَ فَاِنَّا نَسْأَلُكَ مِنْ خَيْرِ هٰذِهِ الْقَرْيَةِ وَ خَيْرِ
اَهْلِهَا وَنَعُوْذُبِكَ مِنْ شَرِّهَا
وَشَرِّ مَافِيْهَا اَقْدِمُوْا بِسْمِ اللهِ

பொருள்: அல்லாஹ்வே ஏழு வானங்கள் மற்றும் அதற்குக் கீழ் உள்ளவற்றின் இறைவனே! ஏழு பூமிகள் மற்றும் அவற்றுக்கு மேலுள்ளவற்றின் இறைவனே! ஷைத்தான்கள் மற்றும் அவை வழி கெடுத்தவற்றின் இறைவனே! காற்றுகள் மற்றும் அவை வீசி எறிந்தவற்றின் இறைவனே! நிச்சயமாக நாங்கள் இந்த ஊரிலுள்ள நன்மையையும், இந்த ஊரில் வசிப்பவர்களில் உள்ள நன்மையையும் உன்னிடம் கேட்கிறோம். நிச்சயமாக இந்த ஊரிலுள்ள தீங்கை விட்டும், இந்த ஊரில் வசிப்பவர்களில் உள்ள தீங்கை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறோம்.

பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் பெயரைக் கூறிக் கொண்டு முன்னேறுங்கள் என்று கூறினார்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் புறப்பட்டார்கள். மன்ஸிலா என்ற இடத்தை சென்றடைந்தார்கள். இது ஃகைபருடைய கடை வீதியாக இருந்தது. போருக்கு பிறகு இந்த கடைவீதி ஹஸ்ரத் ஸைது பின் ஸாபித் (ரலி) அவர்களின் பங்கில் வந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் இரவின் ஒரு பகுதியை மன்ஸிலா என்ற இந்த இடத்தில் அதாவது ஃகைபருடைய கடைவீதியில் கழித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் தங்கள் மீது தாக்குதல் நடத்துவார்கள் என்று யூதர்கள் எண்ணியிருக்கவில்லை. ஏனெனில், யூதர்களுக்கு தம்முடைய கோட்டைகளின் மீதும், போர் தளவாடங்களின் மீதும், எண்ணிக்கையின் மீதும் ஆணவம் இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களை நோக்கி வருவதாக அவர்களுக்கு தெரிய வந்தபோது, ஒவ்வொரு நாளும் 10 ஆயிரம் போர் வீரர்கள் அணிவகுத்து வெளியே வந்து நிற்பார்கள். முஹம்மது (ஸல்) நம் மீது படை எடுக்க முடியுமா? அது ஒருபோதும் சாத்தியம் கிடையாது என்று கூறுவார்கள். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களை சென்றடைந்தபோது, அவர்கள் அதை அறிந்திருக்கவில்லை. எந்த அளவுக்கு என்றால், பகல் விடிந்தது. அதாவது, பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கு இரவு நேரத்தில் சென்றடைந்திருந்தார்கள். காலையில் யூதர்கள் தம் கோட்டைகளை விட்டு வெளியே வந்தார்கள். அவர்களுடைய கைகளில் மண் வெட்டிகளும், கூடைகளும் இருந்தன. அவர்கள் தம் வேலைகளை செய்வதற்காக வெளியே வந்திருந்தார்கள். அன்னாரைக் கண்டபோது ஓடி சென்று தம் கோட்டைகளுக்குள் ஒளிந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இரவு நேரத்தில் ஃகைபருக்கு வந்தார்கள் - அவர்கள் ஒரு சமுதாயத்தார் மீது இரவு நேரத்தில் (படையெடுத்துச்) செல்வார்களாயின் காலை நேரம் வரும் வரையில் அவர்களை தாக்க மாட்டார்கள் - அவ்வாறே காலையானதும் யூதர்கள் தம் மண்வெட்டிகளையும், கூடைகளையும் எடுத்துக் கொண்டு வெளியேறி வந்தனர்.

எவ்வாறிருப்பினும், பெருமானார் (ஸல்) அவர்கள் இரவு நேரத்தில் தாக்குதல் நடத்த மாட்டார்கள். காலை விடிந்த பிறகே தாக்குதல் நடத்த இருந்தார்கள்.

காலையானதும் யூதர்கள் தம் மண்வெட்டிகளையும் கூடைகளையும் எடுத்துக் கொண்டு வெளியேறி வந்தனர். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை யூதர்கள் பார்த்த போது, அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மதும், அவரது படையும் (வருகின்றனர்) என்று கூறினர். அப்போது நபி (ஸல்) அவர்கள்,

خَرِبَتْ خَيْبَرُ، إِنَّا إِذَا نَزَلْنَا بِسَاحَةِ قَوْمٍ فَسَاءَ صَبَاحُ الْمُنْذَرِينَ

என்று கூறினார்கள்.

பொருள்: ஃகைபர் பாழாகிவிட்டது. நாம் ஒரு சமுதாயத்தின் களத்தில் (அவர்களுடன் போரிட) இறங்குவோமாயின் எச்சரிக்கப்பட்ட(வர்களான அந்தச் சமுதாயத்த)வர்களுக்கு அது மிகக் கொட்ட காலையாகும் என்று கூறினார்கள்.

மன்ஸிலா எனும் அந்த இடத்தில் நிரந்தரமாக முகாமிடவில்லை. இஸ்லாமியப் படை முகாமிட்டிருந்த இடம் மாற்றப்பட்டது. இதை குறித்து இவ்வாறு குறிப்பு காணப்படுகிறது:

பெருமானார் (ஸல்) அவர்கள் ஃகைபரை சென்றடைந்தபோது, அன்னார் மன்ஸிலா என்ற இடத்தில் இரவை கழித்தார்கள்; விடியும்போதும் அங்குதான் இருந்தார்கள். ஹஸ்ரத் ஹூப்பாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்கள் அன்னாரிடம் வந்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே தாங்கள் இந்த இடத்தில் அதாவது மன்ஸிலா எனும் இவ்விடத்தை தங்குமிடமாக ஆக்கிக் கொண்டது அல்லாஹ்வுடைய கட்டளை என்றால் நாங்கள் கூறுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் தங்களின் எண்ணம் என்றால் நாங்கள் ஆலோசனை கொடுக்க விரும்புகிறோம் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் இது என்னுடைய எண்ணம்தான் என்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்)அவர்களே! தாங்கள் யூதர்களின் கோட்டைகளுக்கு அருகில் சென்று விட்டீர்கள் ; மேலும் அவர்களுடைய தோட்டங்களுக்கு முன்னால் இருக்கின்றீர்கள்; இந்த இடம் சதுப்பு நிலமாக உள்ளது; நான் நந்(த்)தா வாசிகளை நன்கு அறிவேன். அவர்களுடைய அம்புகள் வெகு தொலைவு வரை செல்லும். அம்பெய்வதில் அவர்களுக்கு இணையானவர்கள் யாரும் கிடையாது. அவர்கள் நம்மை காட்டிலும் மேடான பகுதியில் இருக்கிறார்கள். அவர்களுடைய அம்புகள் எளிதாக நாம் இருக்கும் இடம் வரை வந்து விடும். அதே போன்று அவர்களுடைய இரவு தாக்குதலை விட்டும் நாம் பாதுகாப்பாக இருக்க மாட்டோம். அவர்கள் பேரீத்த மரக் கூடத்திலும் ஒளிந்து கொள்ள இயலும். ஆகவே என்னுடைய விண்ணப்பம் என்னவென்றால், தாங்கள் இங்கிருந்து வேறோர் இடத்திற்கு மாறிக் கொள்ளுங்கள்

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 13- 20 MARCH 2024 Issue No. 11 & 12

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

என்று கூறினார். இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் நல்ல ஆலோசனை வழங்கி உள்ளீர்கள் என்று கூறினார்கள். ஆனால், எவ்வாறாயினும், நாம் அவர்களுடன் இன்று போர் புரிவோம் என்று கூறினார்கள். அத்துடனே முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களை அழைத்தார்கள். அவர்கள் அன்னாருடைய பாதுகாப்பு குழுவின் இன்சார்ஜ் ஆக இருந்தார்கள். அவர்களை அழைத்து யூதர்களுடைய கோட்டைகளை விட்டு சற்று விலகி நமக்காக இடத்தை தேடுங்கள் என்றார்கள். முஹம்மது பின் மஸ்லிமா (ரலி) அவர்கள் இடத்தை தேடியவாறு சென்றபோது, ரஜீஃ எனும் இடத்தை சென்றடைந்தார்கள். அது ஃஹைபர் மற்றும் பனூ ஃகத்ஃபான் கோத்திரங்களுக்கு இடையில் அமைந்திருந்தது. பிறகு அவர்கள் அன்னாரிடம் திரும்பி வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் தங்களுக்காக ஓர் இடத்தை பார்த்து விட்டேன் என்றார்கள். அதற்கு, அன்னார் அல்லாஹ்வின் அருளினால் புறப்படுங்கள் என்றார்கள்.

இன்று இந்த இடத்தில்தான் போர் நிகழும் என்று ஏற்கனவே அன்னார் (ஸல்) கூறியிருந்தார்கள். ஆகவே மாலையில் போர் முடிந்த பிறகு அந்த புதிய இடத்திற்கு முழு இஸ்லாமிய படையும் இடம்மாறி சென்றது.

ஃஹைபரில் பலவிதமான கோட்டைகள் இருந்தன. புவியியல் ரீதியாக அவை எவ்வாறு பிரிக்கப்பட்டு இருந்தன? என்பதைக் குறித்தும் எடுத்துரைப்பது அவசியமாகும். அந்த கோட்டைகள் பிரிக்கப்பட்டிருந்த விபரத்தை குறித்து இவ்வாறு குறிப்பு காணப்படுகிறது: ஏனெனில், இந்த (ஃஹைபர்) போர் கோட்டைகளுடன் சம்பந்தப்பட்டதாக இருந்தது. ஒரு கோட்டைக்குப் பறிகு இன்னாரு கோட்டை என்று ஒவ்வொரு கோட்டையாக வெற்றி கொள்ளப்பட்டது. அந்த கோட்டைகளுடைய எண்ணிக்கை தொடர்பாக கருத்து வேறுபாடு காணப்படுவது மட்டுமின்றி அவற்றுடைய பெயர் தொடர்பாகவும் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. அதேபோன்று சில நூல்களில் இந்த போர் பற்றிய சம்பவத்தில் சில கோட்டைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. வேறு சில நூல்களில் இந்த சம்பவங்கள் வேறு சில கோட்டைகளை நோக்கி சுட்டிக்காட்டப்படுகின்றன.

தாரீக்கே யஃகூபி எனும் நூலில் ஃஹைபர் கோட்டைகளின் எண்ணிக்கை ஆறு என்று கூறப்பட்டுள்ளது. அதில் நாயிம் எனும் கோட்டையின் பெயரே குறிப்பிடப்படவில்லை. ஆனால், பெரும்பாலான வாழ்க்கை வரலாற்று நூல்களில் ஃஹைபர் போருடைய துவக்கமே இந்த நாயிம் எனும் கோட்டையில்தான் ஆரம்பித்ததாக கூறப்பட்டுள்ளது. ஸுர்கானீ எனும் நூலில் கோட்டைகளின் எண்ணிக்கை 10 என்று கூறப்பட்டுள்ளது. இந்த அனைத்து நூல்களையும் பார்க்கும்போது, ஃஹைபர், ந(த்)தா, ஷக், கதீபா எனும் மூன்று பகுதிகளாக பிரிந்து இருந்தது என்று கூறலாம். இந்த மூன்று பகுதிகளிலும் 8 கோட்டைகள் இருந்தன. நத்தாவில் நாயிம், ஸஅப், ஸுபைர் என்ற மூன்று கோட்டைகள் இருந்தன. இந்த கோட்டையினுடைய பெயர் குலஃ ஆகும். இது பிறகு ஸுபைர் பின் அவாம் (ரலி) அவர்களின் பங்கில் வந்ததால் அதன் பெயர் ஸுபைர் கோட்டை என்று பிரபலமடைந்தது. ஷக்-ல் உபை மற்றும் பரீ என்ற இரு கோட்டைகள் இருந்தன. சிலரை பொருத்தவரை அதன் பெயர் பரீ கிடையாது. நஸார் ஆகும். கதீபாவில் கமூஸ், வத்தீஹ், கலாலிம் எனும் மூன்று கோட்டைகள் இருந்தன.

போருடைய விபரம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது ; போர் ஆரம்பிப்பதற்கு முன்பு பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடத்தில் ஒரு சுருக்கமான சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். எதிரியை எதிர்கொள்ள வேண்டும் என்று ஆவல் கொள்ளாதீர்கள். அல்லாஹ்விடம் நலனை வேண்டுங்கள். நீங்கள் எந்த சோதனையில் இடப்படுவீர்கள் என்று உங்களுக்கு தெரியாது. நீங்கள் எதிரியை எதிர்கொள்ள நேர்ந்தால்,

اَللّٰهُمَّ أَنْتَ رَبُّنَا وَرَبُّهُمْ وَنَوَاصِيْنَا وَنَوَاصِيْهُمْ بِيَدِكَ وَإِنَّمَا تَقْتُلُهُمْ أَنْتَ

என்று துஆ செய்யுங்கள் என்றார்கள். அதாவது, அல்லாஹ்வே! நீ எங்களுடைய இறைவனும் ஆவாய்; அவர்களின் இறைவனும் ஆவாய்! அவர்களின் நியதியும் எங்களின் நியதியும் உன் கையில் உள்ளது; நீயே அவர்களை அழிப்பாயாக!

அதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் போர் புரியுமாறு கட்டளையிட்டார்கள். மேலும் நிதானத்தை பேணுமாறு ஸஹாபிகளுக்கு அறிவுரை கூறினார்கள். முதலில் நாயிம் எனும் கோட்டை முற்றுகையிடப்பட்டது. இது யூதர்களுடைய மிகப் பலம் வாய்ந்த கோட்டையாக இருந்தது. அன்னார் அந்த நாளில் கடுமையாக போரிட்டார்கள். நத்தா வாசிகள் அன்னார் (ஸல்) கடுமையாக எதிர்த்தார்கள். அந்நாளில் ஸஹாபிகள் (அதை) தடுத்துக் கொண்டிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இரு கவசங்களையும், தலை கவசத்தையும் அணிந்திருந்தார்கள். ஸரிப் எனும் குதிரையில் அமர்ந்திருந்தார்கள். ஸரிப் என்பது அன்னாருடைய குதிரையின் பெயராகும். அன்னாருடைய கையில் ஈட்டியும், கேடயமும் இருந்தது. எதிரிகள் தொடர்ச்சியாக அம்பெய்து கொண்டிருந்தார்கள். ஆனால், முஸ்லிம்கள் முன் எச்சரிக்கையுடன் அம்பெய்து கொண்டிருந்தார்கள். ஏனெனில், அம்புகள் குறைவாக இருந்தன. எந்த அளவுக்கென்றால், யூதர்கள் சார்பாக எறியப்படும் அம்புகளையும் எடுத்து அவற்றை அவர்கள் மீதே முஸ்லிம்கள் எறிந்து கொண்டிருந்தார்கள். இந்தப் போரில் ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் களைப்படைந்திருந்தார்கள். ஆயுதங்கள் அவர்களுக்கு சுமையாக தெரிய ஆரம்பித்தன. வெப்பமும் கடுமையாக துன்புறுத்திக் கொண்டிருந்தது. ஆகவே அவர்கள் நாயிம் கோட்டையினுடைய மதில் சுவரின் நிழலில் அமர்ந்து விட்டார்கள். யூதர்களின் தலைவனான மர்ஹப் இவர்களை பார்த்து விட்டான். அவன் இவர்கள் மீது திருக்கைக் கல்லை எறிந்து விட்டான் என்று கூறப்படுகின்றது. கினானா பின் ரஃபீ மேலிருந்து அதை எறிந்ததாகவும் கூறப்படுகின்றது.

அந்தக் கல் அவர்களின் தலையில் விழுந்து அவர்களின் தலையை எந்த அளவு உடைத்து விட்டது என்றால், அவர்களின் தலை உடைந்து முகத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் அவர்கள் கொண்டு செல்லப்பட்டார்கள். அன்னார் (ஸல்) அந்த பகுதியை திரும்ப அதே இடத்தில் வைத்து துணியால் அந்த இடத்தில் கட்டுப்போட்டார்கள். ஆனால், காயம் எந்த அளவு இருந்ததென்றால், அவர்களால் உயிர் பிழைக்க முடியவில்லை. சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். அவர்கள் இறந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களின் சகோதருக்கு ஆறுதல் வழங்கும்போது உம்முடைய சகோதரனை கொன்றவன் விரைவில் தம் முடிவை அடைந்து விடுவான் என்று கூறினார்கள்.

அந்நாளில் முஸ்லிம்கள் அதிக நஷ்டத்தை பொறுத்துக் கொள்ள வேண்டியதிருந்தது. கோட்டைகளில் இருந்து எறியப்பட்ட

தொடர்ச்சி 20-ம் பக்கம்...

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad